


# தமிழரசு


ஜூன் 16 - ஜூலை 1
1979







50 காசு



பூரியின் பூரிக்கும் சிரிப்பு: ஸனோலாவின் சிறப்பு!
ஸனோலா
சூரியகாந்தி எண்ணெய்
சுத்தம், சிக்கனம், சத்து
நிறைந்தது. குடும்பத்தினர்
அனைவருக்கும் உகந்தது.
கொலஸ்டிராலைக் குறைக்கும்
ருசியைக் கொடுக்கும்.
ஊட்டத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றது.
மலிவான விலை
SUNOLA
DOUBLE REFINED SUNFLOWER OIL
ADWAVE/T AI C 852

தமிழரசு

1—7—1979

மலர் : 10 - இதழ் : 1

[16—6—79 இதழ் இத்துடன் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளது]



# அண்ணா வழியில்...

**நா**ம் யாருக்கும் அடிமை இல்லை. யாருக்கும் அஞ்சப் போவதில்லை. தனித்தன்மையுடன் இருக்கிறோம். நமக்கு என்று ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு இருக்கிறோம்.

தமிழகம் யாரையும் வெறுக்கவில்லை. யாருக்கும் அடிமை யாகவும் விரும்பவில்லை. யாருக்கும் மண்டியிடத் தயாரில்லை.


மக்கள் தரும் வரிப்பணம் சரியான வழியில் மக்களுக்குப் பயன்படவேண்டும். மக்களை ஏமாற்றி, அதற்கு அதிகாரிகள் உடந்தையாய் இருந்து, திட்டங்களைப் பாழாக்குவது எங்கள் நோக்கமல்ல. நாங்கள் அதைப் பின்பற்றத் தயாரில்லை.

இந்த அரசு தனித் தன்மை கொண்டு செயல்படுகிறது. அந்த இலட்சியத்தைத் திட்டமாக்கி, சமதர்ம சமத்துவத் திட்டத்தை அமரர் அண்ணாவின் திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றியே தீரும். அண்ணா காட்டிய பாதையிலிருந்து வழுவமாட்டோம் !

—மாண்புமிகு முதல்வர்

**எம். ஜி. ஆர்.**

[31.5.79 அன்று நெய்வேலியில் நடைபெற்ற இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பத் தார்க்கு வீடு கட்டும் திட்டக் கால்கோள் விழா வில் பேசியது.]




அழகுமோகினி கொலுவீற்றிருக்கும் கன்னித் தமிழ்நாடு; சுற்றுலாப் பயணிகளுக்கு ஓர் உல்லாசபுரியாகும். கடந்த இரு ஆண்டுகளில் சுற்றுலாத்துறையில் இந்த அரசு தனி அக்கறை காட்டி அபிவிருத்தி வேலைகளை முனைப்பாக இயக்கி, அதனை முன்னேற்றப் பாதையில் பீடு நடைபோடச் செய்துவருகிறது. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் ஒவ்வொரு பிரிவிலும் தனிக் கவனம் செலுத்தி, அதன் வளர்ச்சியை ஊக்குவித்து வருவதன் மூலம் பலநாட்டுவித்தகர்களின் பாராட்டைப் பெற்று வருகிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விரிவாக்கப்பட்டு முனைப்பாகச் செயல்பட்டு வந்துள்ளது என்பதை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள புள்ளி விவரங்கள் பிரதிபலிக்கின்றன. 1975-'76 ஆம் ஆண்டில் செலவு இனம் 22.70 இலட்சம் ரூபாயாக மட்டுமே இருந்தது. அது, 1977-'78ஆம் ஆண்டில் 46.10 இலட்சம் ரூபாயாக உயர்ந்து, 1978-'79ஆம் ஆண்டில் 93.55 இலட்சம் ரூபாயாக மேலும் உயர்ந்துள்ளது.

முதன் முறையாக, சுற்றுலா வளர்ச்சிப்பணிக்கான முழுவாய்ப்புக்களை ஆய்ந்து கணக்கிட்டுப் பலன் அளிக்கும் 20 கோடி ரூபாய் செலவுத் திட்டத்தை வகுத்து, 6வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு-இறுதி வடிவம் கொடுக்கும் பொழுது, இத்திட்டத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் தமிழக அரசு இந்திய அரசுக்கு, அனுப்பியுள்ளது.

இந்திய அரசு, மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகிய இரு இடங்களை மத்திய அரசின் சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களில் சேர்த்துக் கொள்ளுவதாகக் குறித்துக் காட்டியுள்ளது. மாமல்லபுரம், உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களைப்பற்றி முழு வடிவப் பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

கோவை ரயில் நிலையத்தில் சுற்றுலாப் பயணிகளுக்காகச் செய்தி நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்குத் துணைபுரியும் வகையில் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலும், திருநெல்வேலி ரயில் நிலையத்திலும், டெல்லி மாநகரிலும் செய்தி நிலையங்கள் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலம், கொடைக்கானல், குற்றாலம் ஒகேனக்கல் ஆகிய இடங்களில் ரூ. 29 இலட்சம் செலவில் குறைந்த வருவாய்க்கான சுற்றுலாப் பயணிகளுக்குத் துயிலக விடுதிகள் (Dormitories) கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டடப் பணிகள் துவக்கப்படும்.

மலைவாழ் இடங்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.

# தந்தை பெரியாருக்கு தமிழக அரசின் காணிக்கை

கடந்த செப்டம்பர் திங்களில் பெரியார் பிறந்த ஊரான ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா நடைபெற்ற போது, மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி. ஆர் அவர்கள் ''மாவட்டந்தோறும் அரசின் சார்பில் பெரியார் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்படும்'' என்று குறிப்பிட்டார். அதற்கிணங்க அக்டோபர் திங்களில் மதுரையிலும், டிசம்பர் திங்களில் வட ஆர்க்காடு வேலூரிலும், சனவரி (79) திங்களில் திருநெல்வேலியிலும், மார்ச் திங்களில் காஞ்சிபுரத்திலும், மே திங்களில் திருச்சியிலும் பெரியார் நூற்றாண்டு விழாவினை அரசு, மிகச் சிறப்பாகக் கொண்டாடியது.

தொடர்ந்து, ஜூன் மாதம் 30-ஆம் நாளன்று தருமபுரியிலும், ஜூலை மாதம் 1-ஆம் நாளன்று சேலத்திலும், ஜூலை 7-ஆம் நாளன்று நாகர்கோவிலிலும் (கன்னியாகுமரி மாவட்டம்), ஜூலை 8-ஆம் நாளன்று விருதுநகரிலும் (இராமநாதபுரம் மாவட்டம்) பெரியாரின் நூற்றாண்டு விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.


ஈரோட்டில் நடைபெற்ற விழாவில், தந்தை பெரியாருக்குத் தமிழக அரசின் காணிக்கையாக 10 திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார். அவை வருமாறு:

(1) கோவை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஈரோட்டைத் தலைநகரமாகக் கொண்டு ஒரு புதிய மாவட்டம் அமைக்கப்படும். இந்தப் புதிய மாவட்டத்திற்குப் 'பெரியார் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்படும்.

(2) கோவையில் புதிதாக ஒரு பல்கலைக் கழகம் அமைக்கப்படும் அந்தப் பல்கலைக் கழகத்திற்குப் 'பெரியார் பல்கலைக் கழகம்' என்று பெயரிடப்படும்.

(3) வீதிகள் அல்லது முக்கிய சாலைகளின் பெயரோடு உள்ள சாதிப் பெயர்களை நீக்கிவிட தமிழக அரசு முயற்சி எடுக்கும்.

(4) தமிழ் எழுத்துக்களில் பெரியார் செய்த சீர்திருத்தத்தை ஏற்று, அதை அமல் நடத்த அரசு உத்தரவிடும்.




ராணிப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள 'மோட்டல்'

15 இலட்சம் செலவில் உதகமண்டலத்திலுள்ள ஏரியின் சுற்றுப்புறங்கள் அழகுபடுத்தப்பட்டுள்ளன. அங்கு, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. ஏரிக்கரையில் எழில் குலுங்கும் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் மலையில் அமைக்கப்பட்ட தொலைநோக்கி நிலையம், உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்ந்த வெற்றித் திட்டமாக அமைந்துவிட்டதால், உதகமண்டலத்திலும், கூனூரிலும், ஏர்க்காட்டிலும் இத்தகைய தொலைநோக்கி நிலையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஏர்க்காடு மலையில் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. ஏரிக்கரை உணவு விடுதியுடன் கூடிய படகுத்துறை ஒன்று கட்டப்பட்டு, பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

சுற்றுலா வளர்ச்சி-வாய்ப்புகள் உள்ள இடங்களைத் திட்டமிட்ட முறையில் ஆராய்ந்து அதற்குரிய வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டன. அத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டன. ஏலகிரிமலை, பிச்சாவரம், மண்டபம், விராலிமலை ஆகிய இடங்களில் வளர்ச்சித் திட்ட வேலைகள் விரைவில் துவக்கப்படும்.

மாநில அரசின் முயற்சியின் விளைவாக, மத்திய அரசு, சென்னை மாநகரில் 3 கோடி ரூபாய் செலவில் மக்கள் மோட்டல் (Motel) எனப்படும் நெடுஞ்சாலை விடுதி ஒன்றை கட்டவுள்ளது. கட்டடத்திற்கான மிக்க மதிப்புள்ள நிலத்தை மாநில அரசு, இந்திய அரசுக்கு அடையாள விலையில் வழங்கியுள்ளது.

சுற்றுலாத்துறை, சென்னையில் நடத்தும் இளைஞர் விடுதி வெற்றிகரமாக நடந்து வருகின்றது. அதன் வருவாய் பெருகியுள்ளது. இந்திய அரசின் மதிப்பீட்டுக் குழு, இந்த 'இளைஞர் விடுதி'யை நம் நாட்டிலுள்ள சிறந்த விடுதிகளில் ஒன்று என ஏற்றுக் கொண்டுள்ளது.

---

(5) ஈரோட்டில் கோர்ட்டு வீதிக்குப் 'பெரியார் வீதி' என்று பெயரிடப்படும். இதற்கான நடவடிக்கையைத் தமிழக அரசு எடுக்கும். இந்த வீதியில்தான் பெரியார்-அண்ணா-அவர்களின் நினைவகம் இருக்கின்றது.

(6) பெரியாரின் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிட வகை செய்வதற்காகப் பல கோடி ரூபாய் செலவில் 'அறிவியல் அரும் பொருட்காட்சி நிலையம்' ஏற்படுத்தப்படும். உலக வங்கி, மத்திய அரசு ஆகியவைகளிடமிருந்து இதற்கான நிதி உதவி பெறப்படும்.

(7) கலப்பு மணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், விதவைகளை மறுமணம் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் எல்லாச் சலுகைகளும் வழங்கப்படும்.

(8) பெரியாரின் கொள்கைகளைச் சட்டமாக்கி யாரையும் துன்புறுத்தாமல், யாருக்கும் தொல்லை கொடுக்காமல் அவைகளைச் சட்டபூர்வமாக நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(9) பெரியாரின் நூல்களையெல்லாம் தொகுத்துத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா நூலகங்களும் வாங்க உத்தரவு பிறப்பிக்கப்படும்.

(10) பெரியாரின் கொள்கைகளைக் கிராமங்கள்தோறும் பரப்புவதற்கு 15 ஆயிரம் படித்த இளைஞர்கள் திரட்டப்படுவார்கள்.

இந்த 10 அம்சத் திட்டத்தில், நான்காவது திட்டமான எழுத்துச் சீர்திருத்தத்தை அரசு ஏற்று, அரசு அலுவலகங்களிலும் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ளாட்சித்துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி ஒன்றியங்களிலும் அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றிலும் சீர்திருத்திய தமிழ் எழுத்து பின்பற்றப்பட வேண்டும் என 19-10-'78 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி மேலும் ஆராய்ச்சி செய்து எளிமைப்படுத்த வல்லுநர் குழு ஒன்றை 30-3-'79 அன்று, அரசு அமைத்திருக்கிறது.

ஐந்தாவது திட்டம் சம்பந்தமாக-ஊரக வளர்ச்சி உள்ளாட்சித்துறையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டது.

மூன்றாவது திட்ட சம்பந்தமாக - நகராட்சி மன்றங்களிலும், மாநகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும், ஊராட்சிகளிலும் அரசின் முடிவைச் செயல்படுத்த வழி செய்யும் பொருட்டு, மன்றங்களிலிருந்து தக்க தீர்மானங்கள் பெற்று மேல் நடவடிக்கை எடுக்குமாறு ஊரக-உள்ளாட்சித் துறையினரால் 3-10'78 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அயல்நாட்டுப் பயணிகளுக்குத் தென் இந்தியாவை, குறிப்பாக தமிழ்நாட்டை அதிகமாகத் தெரியாது. இக்குறையின் காரணமாக ஒரு சில அயல்நாட்டுப் பயணிகள் மட்டுமே தமிழகத்திற்கு இதுவரை வருகை தந்தார்கள் இந்த நிலையை மாற்ற, ஏர் இந்தியா நிறுவனம் மத்திய அரசு ஆகியவற்றுடன் இணைந்து, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து 40 சுற்றுலாப்பயண எழுத்தாளர்களைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து'தென்னாட்டையும் பாருங்கள்' என்ற திட்டத்தின் வாயிலாக, தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்பம்சங்களை அரசு, அவர்களுக்கு எடுத்துக் காட்டியது. அந்த எழுத்தாளர்கள் அயல்நாட்டு ஏடுகளில், வரைந்த கட்டுரைகளின் விளைவாக, அயல்நாட்டுப் பயணிகளின் தமிழக-வருகை ஏறுமுகத்தில் பெருகியுள்ளது. வந்து கொண்டிருக்கும் அயல்நாட்டுப் பயணிகளைச் சமாளிக்க, அதிக அளவில் சர்வ தேச விமானங்களைச் சென்னை வழியாக விடுமாறும், சென்னை விமான நிலையத்தில் வசதிகளைப் பெருக்குமாறும், இந்திய அரசையும், ஏர் இந்தியா நிறுவனத்தையும் தமிழகச் சுற்றுலாத் துறை வலியுறுத்தி வருகின்றது.

டெல்லி, பெங்களூர் ஆகிய இரு இடங்களில் நடைபெற்ற 'அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகள் செய்துதரும் சர்வ தேச பயண ஏஜண்டுகள் மாநாடுகளில்' நமது சுற்றுலாத் துறை சிறப்பாகக் கலந்துகொண்டது. இந்த மாநாடுகளுக்கு வருகை தந்த பிரதிநிதிகள் நமது மாநிலத்தின் விருந்தாளிகளாக அழைத்து வரப் பெற்றனர். இதன் விளைவாக-அயல் நாட்டுப் பயணிகள் தமிழ்நாட்டுக்குவரும் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த இரு ஆண்டுகளில், துண்டு வெளியீடுகள், அஞ்சல் அட்டைகள், சுவரொட்டிகள் ஆகிய விளம்பர வெளியீடுகள் பொலிவுடன், வலிவுடன், புதிய கண்ணோட்டத்தில் வெளியிடப் பெற்றன. நமது சுற்றுலாத் துறை வெளியிட்ட உயர்ந்த ரகமான பயண வெளியீடுகள், ஏர் இந்தியா நிறுவனத்தின் வாயிலாகவும், இந்திய அரசின் சுற்றுலாத்துறை வாயிலாகவும், இதர மாநில சுற்றுலாத்துறைகளின் வாயிலாகவும் சிறப்பாக வழங்கப்பட்டன.

சுற்றுலாத்துறை வளர்ச்சியைத் துரிதப்படுத்த, சிதம்பரத்தில் சுற்றுலா அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில், சுற்றுலாத்துறையின் நிர்வாகத்திற்கு மாற்றப்பட்ட, பூம்புகார் -கட்டபொம்மன் கோட்டை ஆகிய இரு சுற்றுலா மையங்களைத் திருத்தியமைத்து இங்கு சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளைப் பெருக்கி புதுப்பொலிவு ஊட்டத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மாநில அளவில், உள்நாட்டுச் சுற்றுலாவை விருத்தி செய்ய அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் பயண நிலையங்களைக் கட்டும் திட்டம், பல்வேறு துறைகளுடன் இணைந்து படிப்படியாகச் செயலாக்கப்படும்.

சுற்றுலாத்துறையின் சாதனைகளை, சுற்றுலா வாரியத்தின் பணிகளை, இந்திய அரசின் சுற்றுலாத்துறைச் செயலாளர் மெச்சிப் பாராட்டியுள்ளனர்.

எனவே, மேலே குறித்துக்காட்டிய பல்வேறு ஆக்கப்பணிகளின் டிளைவாக நமது மாநில சுற்றுலாத்துறை தலைநிமிர்ந்து நின்று -வளர்ச்சிப் பாதையில் ஓங்கி உயர்ந்து வருவதைக் கண்கூடாகக் காணலாம்.



ஒன்பதாவது திட்டம் தொடர்பாக — டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் அறிஞர்கள் ஒன்பதுபேர். கொண்ட வல்லுநர் குழுவொன்று அமைக்கப் பெற்றுள்ளது. இக்குழு, பெரியாரின் நூல்களைத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

பெரியாரின் பொன்மொழிகளைக் கல்வெட்டுக்களாக்கும் பணியிலும் அரசு முனைந்து வருவதுடன்-பெரியாரின்வாழ்க்கை நூலை உருவாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

பத்தாவது திட்டம் சம்பந்தமாக— 'பெரியார் நினைவு ட்ரஸ்ட்' என்ற பெயரில் தன்னுரிமை நிறுவனத்தை அரசு மானியத்துடன் அமைத்து, அதன் வாயிலாக இந்தப் பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

8-6-'79 அன்று திறந்து வைக்கப்பட்ட காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும்-தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பெரிய பாலத்துக்குத் தந்தை பெரியாரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களின் ''பொன்மொழிகள்'' என்ற புத்தகத்திற்கு 1950-ல் விதிக்கப்பட்டிருந்த தடையை, தமிழக அரசு நீக்கியுள்ளது.

சுயமரியாதைச் சுடரொளியாம் தந்தை பெரியாரின் இலட்சியங்களை-சாதி, மதமற்ற, சமத்துவ சமுதாயத்தை, சமதர்மச் சமுதாயத்தை-உருவாக்கும் முயற்சியில் தமிழக அரசு தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சீரிய பணிகள்,
எண்ணற்றவை—எண்ணி மகிழத் தக்கவை!

# செய்தித் துறையின்

## சீரிய பணிகள்

சிறந்த திரைப்படங்களுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. நெருக்கடிகளால் சீரழிந்த தமிழ்த் திரைப்பட உலகத்துக்குப் புத்துயிர் ஊட்டப்பட்டு விட்டது. சிறந்த படங்கள் - சிறந்த நடிகர்கள், சிறந்த திரைப்படத் தொழில் நுணுக்க வல்லுநர்கள் போன்றோரைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கிடும் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுகிறது.

* பொதுத் தொண்டாற்றிப் புகழ் கொண்டவர்கள், அறிஞர்கள், கவிஞர்கள், தேசியத் தலைவர்கள் ஆகியோருக்கு அரசுச் சார்பில் விழா எடுக்கப்பட்டு வருகிறது.

* 'டூரிங்' சினிமாக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உரிமத்தின் கால அளவு இரண்டேகால் ஆண்டுகளாக இருந்தது. மூன்று ஆண்டுகளாக உயர்த்தப்பட்டதால், மூடப்பட்ட பல திரையரங்குகள் திறக்கப்பட்டன. சுமார் 150 புதிய டூரிங் திரையரங்குகளும் உருவாகின.

* திறந்தவெளி திரையரங்குகள் அமைத்திட அரசு ஊக்கமும் உதவியும் அளித்து வருகிறது.

* திரையரங்குகள் கட்டுவதற்கு உள்ள விதிமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளன. இதனால் புதியதிரையரங்குகள் உருவாக வழி ஏற்பட்டது.

* குமரி முனையில் உள்ள கடற்பாறையில் குறள் தந்த வள்ளுவருக்கு உருவச் சிலை எடுக்கவும், கன்னியாகுமரியில் திருவள்ளுவர் நினைவாலயம் உருவாக்கவும் அடிக்கல் நாட்டப்பட்டது.


* கேளிக்கை வரி விதிப்பில் சிறந்ததோர் சீரிதிருத்தம் செய்யப்பட்டு, 'காம்பவுண்டிங் முறை'யில் வரிசெலுத்த வகை செய்யப்பட்டுள்ளது. இதனால் ஊழல் ஒழியவும் அரசின் வருமானம் குறையாமல் இருக்கவும் திரைப் படத் துறையினர் பயனடையவும் வழி வகுக்கப்பட்டது.

* ஏழை, எளியவர்கள் குறைந்த செலவில் திரைப்படம் பார்க்கும் வகையில் கட்டணம் குறைக்கப்பட்டது.

* பத்திரிகை எழுத்தாளர் குடும்பங்களுக்கு உதவும் வகையில் 'பத்திரிகையாளர் உதவி நிதி' ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

உழவுக்கு அடுத்ததாகச் சிறப்பிக்கப்பெறுவது தொழில் துறை. அதன் வளர்ச்சிப் பாதைக்கு அரசு ஆற்றிவரும் அரிய பணிகள் ஏராளம், ஏராளம்!

# தழைத்திடும் தொழில் வளம்

தொழில் வளம் ஒரு மாநிலப் பொருளாதார வலிமைக்கு அடையாளமாகும். தொன்று தொட்டு, உழவுத் தொழிலையே நம்பி வாழ்ந்த நம் நாட்டு மக்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்தி, உற்பத்தித் திறனைப் பெருக்கி, வேலை வாய்ப்பினை அதிகரித்து மக்களுக்கு நிலையான வரு-வாயைத்தருபவைதொழில் துறைகளாகும். கடந்த இரண்டாண்டுகளில் பல்வேறு தொழில் துறைகளையும் வேகமாக இயக்கி நமது மாநிலத்தைத் தொழில் மயமாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்பொழுது, தமிழ்நாட்டில், சிறு தொழில் துறையில் மட்டும் 450-க்கும் அதிகமான மின்சாரம் மற்றும் மின்னணுவியல் தொழில்கள் உள்ளன.

சிறு தொழில் துறையில் உள்ள 235 மின்சாரத் தொழிற்சாலைகள் 3,500 பேருக்கு வேலை அளிக்கின்றன. இவர்களுள் 1600 பேர் மகளிராவர்.

மிகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற வாய்ப்புகளைக் கொண்டு விளங்கும் மற்றொரு தொழில் ஊதுவத்தித் தொழிலாகும். (அகர்பத்தி). ஏனெனில், இப்பொருளைப் பரந்த அளவில் குறிப்பாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்ய வாய்ப்புகள் உள்ளன.

இப்பொழுது மாநிலத்தில் 20 ஊதுவத்தித் தொழில் நிலையங்கள் உள்ளன. மேலும், பல தொழில் நிலையங்கள் தோன்ற வாய்ப்புள்ளன.

சிறுதொழில் துறையில் தயாரிப்பதற்குத் தகுதியான மற்றுமொன்று பிளாஸ்டிக் செய்முறைத் தொழிலாகும். இந்தியாவிலுள்ள 6,000 தொழில் நிலையங்களில் தமிழ்நாட்டில் சுமார் 300 உள்ளன. ஆதலால், ''எல்டிபிஇ'' ( L.D.P.E. ) மற்றும் ''பாலிபுரோலின்'' அடிப்படையில் அமையும் தொழில்களுக்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன.

தமிழ் நாட்டில் 120 இரப்பர் 'புராசசிங்' சிறு தொழில் நிலையங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் சிறுதொழில் துறையில் 75 வர்ணத் தயாரிப்புத் தொழில் நிலையங்கள் உள்ளன.

முந்திரிப் பருப்பைப் பக்குவப்படுத்தும் தொழிலானது முக்கியமாகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. இங்கு சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இத் தொழில் நிலையங்கள் உள்ளன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பண்ருட்டியிலும் அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் 15 தொழிற்சாலைகள் உள்ளன.

கைத்தறித் துணிகளைத் தயாரிப்பதில் முன்னணியில் உள்ள மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். எனவே, இது சாயப் பொருள்களைப் பயன்படுத்தும் ஒரு முக்கிய மாநிலமுமாகும்.

தமிழ் நாட்டில் சாயப்பொருள்களைத் தயாரிப்பதற்கு நல்ல வாய்ப்பிருப்பதால் தொழில் வணிக இயக்குநரகமும், தொழில் முனைவர்களை ஊக்குவித்துள்ளது. இதுவரை சுமார் 15 தொழில் நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

பூச்சி கொல்லி மருந்துகளைத் தயாரிப்பது பெரும்பாலும் சிறுதொழில் துறையில் தான் நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டில் சுமார் 40 சிறு தொழில் நிலையங்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

நாட்டிலேயே சவ்வரிசி ''ஸ்டார்ச்சு'' மாவு தயாரிக்கும் பெருமை பெரும்பாலும் சேலம் மாவட்டத்திற்கே உரியதாகும். தரக்கட்டுப்பாட்டோடு கூடிய நல்ல பொருள்களைத் தயாரிக்க வசதிகள் அளிப்பதற்காக, சேலத்தில் சவ்வரிசி ஆராய்ச்சி ஆய்வுக் கூடத்தை தொழில் துறை நிறுவியுள்ளது.

தமிழ் நாட்டில் பட்டுத்தொழிலானது, சமீப காலம் வரை கர்நாடக மாநிலத்தை ஒட்டியுள்ள தர்மபுரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள மேட்டுப்பாங்கான பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வந்தது.




உழவர் குடி பெருமக்களே!

வியாபாரிகளே !!

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களால் உங்களுக்குபலன்**

| உற்பத்தியாளர்களுக்கு | வியாபாரிகளுக்கு |
| --- | --- |
| 1. சரியான எடையுண்டு | 1 ஒரேஇடத்தில் வேண்டிய பொருள் |
| 2. பொருளுக்கு போட்டிவிலை | 2. தரமானவை |
| 3. உடனடி பணம் | 3. போட்டியில் வரும் பொருள் |
| 4. கழிவில்லா விற்பனை | 4. தரகர் இல்லா தன்மை |

அன்றுடம் அங்காடி விலை தெளிந்து, அடுத்தவரும் விற்றிடவே, கூடமும், குடிநீரும், மாடுகள் கொட்டிலும் பாங்கான வங்கியும், நமது மேற் பார்வையாளர் பண்பும் அன்பும் பாரெல்லாம் போற்ற கொள்வோரும் கொடுப்போரும் குதூகலத்தால் வாழ்வோம், வளர்வோம் வாணிபத்தால்.



தமிழ்நாடு விளைபொருள் விற்பனை வாரியம். சென்னை-[illegible].

தற்பொழுது மாநிலத்தின், அனைத்துப் பகுதிகளிலும், இத் தொழில் நடைபெற்று வருகிறது. தமிழ் நாட்டில் 18 இலட்சம் கிலோ பட்டுப் புழுக்கூடுகள் உற்பத்தியாகிறதென மதிப்பிடப் பட்டுள்ளது. இவற்றில் மூன்றில் ஒரு பகுதியை இங்கேயே நூலாக்கி ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் கிலோ பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இத்தொழிலானது, தமிழ் நாட்டிலுள்ள கிராமப் பகுதிகளில் சுமார் ஒரு இலட்சம் பேருக்கு வேலை அளிக்கிறது.

தமிழ் நாட்டிலுள்ள பட்டுப் புழுக்கூடு தயாரிப்பவர்கள் பட்டு நூல் எடுப்பவர்கள், கைத்தறி நெசவாளர் ஆகியவர்களுக்கு உதவியளிக்கும் வகையில் சுலபமான வகையில் விற்பனை வசதிகளை அமைத்துத் தரவும் இடையில் இலாபமடையும் இடைத்தரகர்களை அறவே நீக்கிவிடவும் தொழில் கூட்டுறவுப் பட்டுநூல் விற்பனைக் கூட்டமைப்பு ஒன்று அண்மையில் பதிவு செய்யப் பட்டுள்ளது.

நாட்டில் தென்னை பயிரிடுவதில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தையும், தேங்காய் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கிறது. இங்கு 83,000 எக்டேர் நிலப்பரப்பில் தென்னை மரங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு 867 மில்லியன் தேங்காய் உற்பத்தியாகிறதென்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்பொழுது 10 தென்னை நார் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை நேரடியாக 1,600 கயிறு தொழில் பணியாளர்களுக்கும், அதைச்சார்ந்து 1,500 விருந்து 2, 000 பணியாளர்களுக்கும், வேலை அளிக்கின்றன.

தமிழ் நாட்டில் இயந்திர ரீதியில் கயிறு தயாரிப்பதற்கு, 112 நிலையங்களுக்கு நிதியுதவி மற்றும் இதர உதவிகள் அளித்து ஊக்கமளிக்கப்படுகிறது. இவற்றின் மொத்த மூலதன முதலீடு ரூ. 220 இலட்சமாகும். இவை ஆண்டொன்றுக்கு 18,000 மெட்ரிக் டன் கயிறைத் தயாரிக்கின்றன. இவை, ஆண்டு முழுவதற்கும், தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்களில் சுமார் 3,000 பேருக்கு வேலையளிக்கின்றன. முன்பு, கிராமப்பகுதியில் பெரிய வியாபாரிகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரால் சுரண்டப்பட்டு வந்த சுமார் 30,000 பேருக்கு, இப்பொழுது குடிசைத் தொழில் துறையில் தென்னை நார் எடுத்தல், மற்றும் கயிறு தயாரிப்பது ஆகிய நிலைகளில் சுய வேலை வாய்ப்பினை அளித்திருப்பது என்பது அவர்களுக்குக் கிடைத்த ஒரு பேறாகும்.

செங்கற்பட்டு, தர்மபுரி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், தென்னார்க்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மாவட்டத் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில மாதங்களுக்குள் மாநிலம் முழுவதிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.

மாவட்டத் தொழில் மையங்கள் துவங்கப்பட்ட ஐந்து மாதங்களில் சிறு தொழில் துறையில் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பினைத் தோற்றுவித்ததும், 2,500 கைவினைஞர்களுக்கு நிலையான ஊதியம் தரத்தக்க வேலை வாய்ப்புக்களை அமைத்துக் கொடுத்ததும் திருப்திப் படக்கூடியதாகும்.

## திரு.வி.க. விருது

தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நன்னோக்கத்தோடு 'தமிழ்த் தென்றல்' திரு.வி.க. அவர்களின் பெயரால் சிறந்த எழுத்தாளருக்கு விருதும், பத்தாயிரம் ரூபாய் பொற்கிழியும் வழங்கப்படும்!

டான்சி நிறுவனமும் அதைச் சார்ந்த வெவ்வேறு தொழிலகங்களும் சுமார் 6000-க்கும் அதிகமான நபர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கின்றன.

அம்பத்தூரில் வார்னிஷ் உற்பத்தி செய்வதற்கென ஒரு தொழிற்சாலை ரூ. 11.26 இலட்சம் செலவில் டான்சியால் நிறுவப்பட்டுள்ளது.

சிட்கோவின் தொடக்கம் முதல் 1979ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 31ஆம் நாள் முடிய ரூபாய் 373.26 இலட்சங்கள் செலவில் சுமார் 397 தொழிற் கூடங்களை, அம்பத்தூர், குறிச்சி இராணிப்பேட்டை, ஓசூர், திருச்சிராப்பள்ளி, மாத்தூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், கும்பகோணம், பிள்ளையார்பட்டி முதலிய இடங்களில் கட்டி வழங்கப்பட்டு சுமார் 4000 பேர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

விருத்தாசலத்திலுள்ள 'டாசல்' பீங்கான் தொழிற்சாலை துப்புரவுக் கருவிகள், பீங்கான் பொருட்கள் மற்றும் மின் காப்புகளைச் சிறப்பாக உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் 'டிட்கோ' பொதுத்துறையிலும், கூட்டுத் துறையிலும் செயல்படுத்தி வரும் 47 திட்டங்கள் வாயிலாக, சுமார் 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டுவதோடு மற்றும் ஆயிரக்கணக்கான நபர்களுக்கு சார்பு வேலை வாய்ப்பும் கிடைக்கிறது.

1970ஆம் ஆண்டு ஆலங்குளம் சிமெண்டு ஆலை உற்பத்தினைத் துவங்கி கடந்த 8 ஆண்டுகளாக சிமிண்டு உற்பத்தி செய்து வருகிறது. பின்தங்கிய மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த ஆலை சுமார் 1,450 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்துள்ளது.

டி. ஐ. ஐ. சி வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு ஆட்டோ ரிக்ஷா வாங்கி தாங்களே சிறந்த வருமானத்துடன் சுகமாக தொழில்நடத்துவதற்கும் தாராளமான நிதி உதவி அளிப்பதற்குத் திட்டம் தயாரித்திருக்கின்றது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (SIPCOT) 1978ஆம் ஆண்டுடிசம்பர் 31 வரை பல்வேறு திட்டங்களின்கீழ் மொத்தம் ரூ. 2,784.21 இலட்சம் உதவி வழங்க ஒப்புதலளித்துள்ளதுடன், இதன் மூலம் ரூபாய் 185 கோடி மொத்த முதலீட்டை ஊக்குவித்து 33,000 பேருக்கு மேல் நேரடி வேலைவாய்ப்பை நல்கியுள்ளது.

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் நிறுவப்பட்டது. உப்பு உற்பத்திப் பணிகளிலும் வளர்ச்சி வேலைகளிலும் சுமார் 1,500 பேருக்கு மேல் வேலை அளிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5566 ஏக்கர் சதுப்பு நிலப் பரப்பில் மாரியூர்–வாலிநோக்கம் உப்புத் தொழிற்சாலை அமைக்கும் திட்டத்தை செயற்படுத்தும் பொருட்டு ரூ. 50 இலட்சம் அதிகாரமளிக்கப்பட்டது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையில் அரசு ''1969ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரண உதவி பெருகிற நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின் விதிகளின் கீழ் அந்நிறுவனங்களுக்கு உதவிகளை அளித்து வருகிறது.

இவ்வாறு தொழில் துறை துரிதமாகச் செயலாற்றி தமிழகத் தொழில் வளத்துக்கு வழிகோலிவருகின்றது.

சமூக நலத் துறை மகளிர் நலப் பணிகளை கவனிப்பதுடன் முன்னாதாரப் பள்ளிச் சிறார்கள், பாலூட்டும் தாய்மார்கள், கருவுற்றிருக்கும் மகளிர் ஆகியோருக்கு சத்துணவு வழங்குதல், நீதி மன்றங்களால் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்களுக்கென விடுதி நடத்துதல், மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு நலம் பயக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

எல்லா பஞ்சாயத்துக்களிலும் பாலர் பள்ளிகள் அமையத் தக்கவகையில் சர்வதேச குழந்தைகள் ஆண்டில் தொடங்கி 5 ஆண்டுகளில் 9,000 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பயன்பெறத்தக்க அளவில் 79 பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1979-80இல் இதுபோன்று மேலும் 30 பாலர் பள்ளிகள் தொடங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1978-83-ற்கான இடைக்கால துணைத் திட்டத்தின்கீழ் 250 பாலர் பள்ளிகள் தொடங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரை 3,729 இரண்டு கால்களையும் இழந்த உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகளும் 1,384 காது கேளாத பள்ளி குழந்தைகளுக்கு கேட்பு உதவிச் சாதனமும் வழங்கப்பட்டுள்ளது.

1978-79இல் 300 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப்பட்டன. 1979-80ஆம் ஆண்டில் 700 கேட்பு உதவிச் சாதனங்கள் வழங்கப்படவிருக்கிறது.

உடல் ஊனமுற்ற மாணவ மாணவிகளுக்குப் படிப்பு உதவித் திட்டத்தின்கீழ் 1977-78ம் ஆண்டு 631 உடல் ஊனமுற்ற மாணவர்கள்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கு ரூ. 3.38 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் உதவித் தொகைக்காக ரூ. 6 இலட்சம் தேவைப்படும் அளவில் மொத்தம் 1,047 மனுக்கள் பெறப்பட்டுள்ளன.

## உடல் ஊனமுற்ற மாணவ/மாணவியருக்கு இலவச பஸ் போக்குவரத்து சலுகை.

எல்லா உடல் ஊனமுற்ற மாணவர்/மாணவியர்/பயிற்சியாளர்களுக்கும் அவரவர் இருப்பிடத்திலிருந்து பள்ளி/பயிற்சி நிலையத்திற்கு சென்று திரும்ப இலவச பஸ் பிரயாண வசதி செய்துதர திட்டமிடப்பட்டுள்ளது.

## செயற்கை உறுப்புகள்.

முடக்கு வாதத்தின் காரணமாக உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு 1979-80ஆம் ஆண்டில் 1,000 செயற்கை உறுப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கான ஓய்வு ஊதியத் திட்டத்தின்கீழ் 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30 ஆம் நாள் வரை 6,376 உடல் ஊனமுற்ற அனாதைகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு அடைய வேண்டிய இலக்கு 10,000 பேர்களாகும். இத்திட்டம் வருவாய் துறையினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

## ஆதரவற்ற பெண்களுக்கு மறுவாழ்வு.

முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின்கீழ் 40 வயதுக்கு குறைவில்லாத ஆதரவற்ற பெண்கள் மற்றும் விதவைகள் மாதம் ரூ. 20 வீதம் முதியோர் உதவித் தொகை பெற தகுதியுடையவராவர். முதியோர் உதவித் தொகை வழங்கப்படுவதற்கு பொருந்தும் விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்தினால் இதுநாள்வரை 15,000 பெண்கள் பயனடைந்துள்ளனர்.

இருபது முதல் 40 வயதுவரையுள்ள விதவைகள், ஆதரவற்ற பெண்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்கள், உடல் ஊனமுற்ற பெண்கள் தையற்கலையில் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால்

# சமுதாய நலங் காப்போம்

அவர்கள் தங்கள் வாழ்க்கைக்கு தேவையான வருவாயினை ஈட்டிக்கொள்ள இயலும். இத்திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு 500 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1978–79இல் 1,000 தையல் இயந்திரங்கள் வழங்க ஆணை வழங்கப் பட்டுள்ளது. 1979–80ஆம் ஆண்டிலும் 1,000' தையல் இயந்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

இளம் விதவைகள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் மறுமணம் செய்து கொள்ளும் மண மக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படு கின்ற வகையில் ரூ. 5,000–க்கான ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 233 மணமக்கள் பயனடைந்துள்ளனர். 1978-79இல் மேலும் 100 பேர் பயனடைவர். 1979-80ஆம் ஆண்டிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.


## மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்கள்.

மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தில் மகளிர் மன்றங்கள் மிகப் பெரிய பங்கு வகிக்கின்றன. கிராமப் புறங் களிலுள்ள மக்கள் ஒன்று கூடி பயனுள்ள சில கைத்தொழில் களை கற்பதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும், அதன் மூலம் ஓரளவு கூலி பெற்று தங்கள் குடும்ப வருவாயை பெருக்கிக் கொள்ளவும் இத்திட்டம் வழி வகுக்கின்றது. மாநிலமெங்கும் 11,120 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. ஊராட்சி ஒன்றியம் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 4,000 வீதம் இவ்வகைக்காக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் மகளிர் மன்றங்களை ஊக்குவிப் பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடு பட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகையாக தரம் பிரிக்கப்பட்டு ரொக்கப்பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 ரொக்கப்பரிசு வழங்கப்படுகிறது. இத்திட்டத் தின் கீழ் 1979-80இல் 62 ரொக்கப் பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 34,400 ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறு தொழில்கள் செய்வதற்காக நிதியுதவி கேட்டு ஆதரவற்ற ஏழைப் பெண்கள் மற்றும் விதவைகளிடமிருந்து பெருமளவில் விண்ணப்பங்கள் வரப் பெறுவதை கருத்தில் கொண்டு விதவைகளுக்கு அல்லது அவர்களது குடும்பத்தை சேர்ந்த 15 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் வகையில் உற்பத்தி நிலையம் ஒன்று தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. சமையலுக்குத் தேவையான அத்தியாவசிய பண்டங்கள் தயாரிக்கும் இவ்வுற்பத்தி நிலையம் லாப நட்ட நோக்கம் இல்லாமல் செயற்படும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 60,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.



# இவ்வாண்டு பல்லவன் பயணிகளுக்கு தமிழக அரசு நல்கிய அரும்பெரும் சலுகைகள்







★ குழந்தைகளின் ஆண்டையொட்டி 5 வயது வரை இலவச பயண அனுமதி.

★ கண்ணொளி இழந்தோருக்கு மருத்துவமனை, தொழிற்கூடம், பள்ளிக்கூடம் சென்றிட இலவச அனுமதி.

மேலும் சிறுவர், மாணவர், அன்றாடம் பயணம் செய்வோர், மகளிர், இரவில் பணிபுரிவோர் ஆகிய அனைத்துப் பயணிகளுக்கும் சிறப்பான வசதிகளை செவ்வனே அமைத்துத் தருகிறோம்.

**பல்லவன் போக்குவரத்துக் கழகம்** (பெருநகர்)
(இது ஒரு தமிழக அரசு நிறுவனம்)
சென்னை-600 002.

Sobhagya/PTC-254

தஞ்சாவூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சீரிய திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் எண்ணற்ற திட்டங்கள் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளன!

# வளர்ச்சிப்பாதையில் தஞ்சை

தமிழ்நாட்டிலேயே நீர்வளமும், இயற்கை அழகும் மிகுந்த பகுதி தஞ்சை மாவட்டம். புனல்நாடு எனவும் பொன்னிநாடு எனவும் சோழ வளநாடு எனவும் வரலாற்றுப் புகழேந்திய சோழ மண்டலத்தில் அமைந்துள்ளது தஞ்சை மாவட்டம்.



''வான் பொய்ப்பினுந் தான் பொய்யா
மலைத்தலைய கடற் காவிரி
புனல் பரந்து பொன் கொழிக்கும்
விளைவறா வியன் கழனி.....''

என்று பட்டினப்பாலையில் வருணிக்கப்பட்டுள்ளது.

தென்புலத்தின் நெற்களஞ்சியம் எனப் போற்றப்படுவது தஞ்சை மாவட்டம். இங்கு இயற்கையின் சேர்க்கையினால் காணுமிடமெல்லாம் விளைந்து காட்சியளிக்கின்றன.


தமிழ்நாட்டின் தனிப்பெருங் கலையான கர்நாடக இசை வளர்ந்து ஓங்கியது தஞ்சைத் தரணியின் காவிரிக் கரையில்தான்! மேலும் நாதசுர இசைக்கு மகத்துவம் ஈட்டியது, பரதக் கலைகளைப் பாதுகாத்து வளர்த்தது, சிற்ப சித்திரக் கலைகளை உலக மக்கள் உணரவும் உய்யவும் நிலை நாட்டியது ஆகிய அத்தனை பெருமைகளும் தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. சுருங்கக் கூறினால், தஞ்சை மாவட்டம் தமிழ்ப் பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் விளைநிலமாக விளங்கி வந்திருப்பது நமக்குப் பெருமையாகும்.

வேறு எந்த மாவட்டத்திற்கும் இல்லாத சில தனிச் சிறப்புகள் தஞ்சை மாவட்டத்திற்கு உண்டு. இம்மாவட்டத்தில் சுமார் 1420 கோயில்கள் உள்ளன. இவ்வளவு கோவில்கள் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லை. 'ஆலயங்கள் நிறைந்த அழகுத் தமிழ்நாடு (Tamilnadu Land of temples) என்ற வாக்குக்கு அடிப்படையாக விளங்குவதே தஞ்சைத் தரணியாகும். தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், குடந்தை சாரங்கபாணி கோயில், சுவாமிமலை, சுவாமிநாத சுவாமி கோயில், சிக்கல் சிங்காரவேலர் கோயில், வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர் ஆண்டவர் தர்கா ஆகியவை மக்கள்மனத்தில் தனியிடம் பெற்றுத் திகழ்கின்றன.

ஜெய்...

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு சிற்பிகள் நமது கோயில்களில் தெய்விகத் தன்மை பொருந்திய பல சிலைகளைச் செதுக்கி அமைத்தார்கள். அற்புதமான அந்தச் சிலைகளைப் போலவே பித்தளைப் படிமங்கள் தயாரிக்கும் உயரிய கலையைத் தஞ்சை மாவட்டத்தின் சுவாமிமலையில் காணலாம்.

கண்ணைக் கவரும் கலை அழகோடு—உருவங்கள் செதுக்கிய சித்திரத்தட்டுக்களை உருவாக்கும் சிறந்த கலையைத் தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்தில் காணலாம். இவ்வாறு தஞ்சை பொன்போன்ற பழைமையைப் பாதுகாத்து வருகிறது.



இனி, இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் சாதனைகளையும், ஆக்கப்பணிகளையும் புள்ளி விவரங்களுடன் ஆராய்வோம்.

1977-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் துவங்கி தஞ்சை மாவட்டத்தில் அரசுத் துறையினரால் நிறைவேற்றப்பட்ட பல்வேறு சாதனைகள், வளர்ச்சிப் பணிகள் பற்றிய முழுவிவரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

புயல் மற்றும் பெருவெள்ளம் காரணமாகவும், இயற்கையின் சீற்றத்தின் காரணமாகவும் பலப்பல இன்னல்களும், இடர்பாடுகளும் ஏற்பட்ட நெருக்கடியான நேரங்களிலும் இம்மாவட்டத்தில் தமிழ்நாடு அரசின் ஆணைப்படி பல்வேறு துறையினரும் கடுமையாக உழைத்து பணிகள் பல ஆற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, 1977ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களில் புயல், வெள்ளம் தாக்கிய குடியிருப்புக்களைச் சார்ந்த மக்களுக்கு இதுவரை அளித்திராத அளவு நிவாரணத் தொகை, உணவுப் பொருள் மற்றும் உடைகளும் வழங்கப்பட்டதும், அண்மையில் வந்திட்ட பெரு வெள்ளத்தின்போது பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 50 கிலோ அரிசி வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

தஞ்சை மாவட்டத்தில் மட்டும் புயல்-வெள்ளத்தினால் வீடு இழந்தவர்களுக்காக தமிழ்நாடு அரசு நிவாரணத் தொகையாக ரூ. 5.64 கோடி அளித்துள்ளது. மேலும் ரூ. 1.59 கோடி மதிப்புள்ள புடவைகளும் வேட்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவையல்லாது, இனாமாக வழங்கப்பட்ட அரிசி 1617 டன்; பாதுகாப்பு முகாமில் சமைத்து வழங்கப்பட்டது 263 டன்; உணவுப் பொட்டலங்களாக வழங்கப்பட்டது 5 டன்; திக்கற்றோர்க்கு இலவசமாக வழங்கப்பட்டது 25 டன்.

மற்றும் புயலால் உயிரிழந்தோரின் குடும்பப் பாதுகாப்பாளர் என்ற முறையில் 49 பேர்களின் குடும்பத்திற்கு நிவாரணத்தொகையாக ரூ. 49,000 வழங்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு சேதத்தையும் முன்கூட்டியே திட்டமிட்டுச் செயலாற்றுவதால் தவிர்த்துவிடலாம். இந்த அடிப்படையில் கீழ்க்கண்ட இடங்களில் புயல்-பாதுகாப்பு இல்லங்கள் கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.

1. கொடியாம்பாளையம்-சீர்காழிதாலுகா
2. வடக்குப் பொய்யூர்—நாகப்பட்டினம் தாலுகா
3. பிரதாபராமபுரம் ,,
4. விழுந்த மாவடி ,,
5. அக்கரைப்பேட்டை ,,
6. வெள்ளப்பள்ளம்—திருத்துறைப்பூண்டி தாலுகா.
7. ஏரிபரக்கரை—பட்டுக்கோட்டை தாலுகா

இவை ஒவ்வொன்றும் ரூபாய் 2 இலட்சம் செலவில், தமிழ்நாடு அரசு பாதியும் இந்திய செஞ்சிலுவை சங்கம் பாதியுமாக நிதி உதவி அளித்து கட்டி முடிக்கப்படும்.

இனி, புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவினருக்காகவும் அளிக்கப்பட்டுள்ள நிவாரணம் பற்றிய விவரங்களை ஆராய்வோம்.

**விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம்:**

வாழை, கரும்பு, வெற்றிலைக் கொடிக்கால், நாற்றுகள், விதைநெல், உரவகைகள், ஆகியவைகளுக்காக சுமார் 85,000 விவசாயிகளுக்கு மேல் பயனடையும் வகையில் ரூபாய் 41.01 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

**கைத்தறி நெசவாளர்களுக்கு நிவாரணம்:**

கூட்டுறவு சார்பு நெசவுத் தொழிலாளர்களுக்கும் அச்சார்பற்ற தொழிலாளர்களுக்குமாக உதவித் தொகையாக ரூ. 7650-ம், வீடுகட்ட உதவித் தொகையாக ரூ. 1,21,500-ம் அளிக்கப்பட்டுள்ளன. மேலும், தறிக்கான கடன் தொகையாக ரூ. 28,500 வழங்கப்பட்டுள்ளது.

**மீனவருக்கு நிவாரணம்:**

வலைகளை இழந்த மீனவருக்கு நைலான் இழைகள் வழங்கியதன் மூலம் ரூ. 4.05 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இவர்களுக்கும் கட்டுமரம் இழந்தவர்களுக்குமாகச் சேர்த்து 255 டன் அரிசி வழங்கியதன் மூலமாக ரூபாய் 3.71 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977-ஆம் ஆண்டு புயல் வெள்ளத்தினால் ஏற்பட்ட பெரும் பாதிப்புகளுக்கும், சேதங்களுக்கும் பிறகு மீண்டும் 1978-ஆம் ஆண்டு நவம்பர்-டிசம்பர்த் திங்களில் வெள்ளம், பெரு

மழை மற்றும் கடல் கொந்தளிப்புக் காரணமாக தஞ்சாவூர் மாவட்டம் பாதிக்கப்பட்டது. இப்படி மாறி மாறி வந்த சோதனையான காலங்களிலும் அரசுத் துறைகள் முனைப்புடன் செயலாற்றி நிவாரணப் பணிகளை மேற்கொண்டன.

1978-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளம் பெருமழையின்பொழுது மொத்தம் 274 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டன. 1,08,801 நபர்கள் ஆபத்தான இடங்களில் இருந்து உடனடியாக வெளியேற்றப்பட்டு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 33.09 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. மேலும் 58,262 வேட்டிகளும், புடவைகளும் வழங்கப்பட்டன. இவையல்லாது, இலவசமாக 1264 டன்கள் அரிசியும் நிவாரண முகாம்களில் செலவிடப்பட்டதன் மூலம் 104 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளன.

பொருள் ஈட்டுபவர்களை இழந்த குடும்பம் ஒன்றிற்கு ரூபாய் 1000- வீதம் 12 குடும்பங்களுக்கு ரூபாய் 12000- உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**பொதுப்பணித்துறை :**

1977-ஆம் நவம்பர் திங்கள் தஞ்சை மாவட்டத்தில் புயலினால் பாதிக்கப்பட்ட பாசன ஆதாரங்களைச் சீரமைக்கும் பணிக்காக ரூ. 81.53 லட்சம் செலவிடப்பட்டுள்ளது. அடுத்து, கட்டடங்களைச் சீரமைக்க ரூ.18.76 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1978-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் சேதமடைந்த பாசன ஆதாரங்களைச் சீரமைப்பதற்காக ரூ. 17.59 இலட்சமும், கட்டடங்களைச் சீரமைப்பதற்காக ரூ.8.35 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளன.



## அறிவும் ஆற்றலும்!

அறிவினாலும், ஆற்றவாலும் ஆகாத காரியம் இல்லை. அறிவும் ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்!

—பேரறிஞர் அண்ணா.

பொதுப்பணித்துறையின் மற்ற திட்டப் பணிகளுக்காக மட்டும் 1.7.77 முதல் 31.3.79 வரையில் ரூ. 81.39 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இதில், தனிச் சிறுபாசனம் விரைவு சிறு பாசனம், ரெகுலெட்டர் மற்றும் வாய்க்கால் சீரமைப்பு, அரசுத் துறை கட்டடங்கள் கட்டுதல் ஆகியவைகளுக்கானச் செலவுகள் அடங்கும்.

**காவிரி டெல்டா முறை நவீனப்படுத்துதல் :**

தஞ்சை மாவட்டத்திற்கு உயிரோட்டமாக விளங்கும் காவிரியாற்றின் ஓட்டத்தினை முறைப்படுத்தி கரையின் இருமருங்கினையும் நவீனப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் வகுப்பு வாய்க்கால்கள் சீரமைப்பு வடிகால் திட்டங்கள், இறைவைப் பாசனத் திட்டம் ஆகியவை செயலாக்கப்படுகின்றன.

1.7.77 முதல் 31.12.78 வரையில் இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட411 வேலைகளில் 244 வேலைகள் முடிக்கப்பட்டு விட்டன; இதனால் 2.25 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ. 414.67 இலட்சமாகும்.

**தீவிர வேளாண்மை சாகுபடித் திட்டம் :**

தீவிர வேளாண்மை திட்டத்தின்கீழ் பணப்பயிர்கள் அதிக அளவில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் பருத்தி 30,000 ஏக்கரிலும் கடலை 1,25,000 ஏக்கரிலும், எள் 30,000 ஏக்கரிலும் மஞ்சள் 1250 ஏக்கரிலும் மிளகாய் 7900 ஏக்கரிலும் வெங்காயம் 3060 ஏக்கரிலும் சேனைக் கிழங்கு 670 ஏக்கரிலும் பயிரிட ஆவன செய்யப்பட்டு வருகிறது.



தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மையில் தீவிர முன்னேற்றம் காண்பதற்கு அரசு, திட்டங்களை நிறைவேற்றிவரும் நேரத்தில், நிலமில்லாத ஏழைகளுக்கு குடியிருப்பு மனைகள் மற்றும் சாகுபடி நிலங்களை வழங்கும் பணியும் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வீட்டு மனைப்பட்டா வழங்குதல் :**

சென்ற இரண்டு ஆண்டுகளில் மட்டும் 7212 நபர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இதில் 3253 பேர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும் 3959 பேர் இதர நிலமில்லாத ஏழைகளும் ஆவர்.

**விவசாய நிலம் ஒப்படைப்புத் திட்டம் :**

தனியார் நிலங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் 2963 பேருக்குப் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது. இதில் 1659 பேர் அரிசன விவசாயிகள், 1034 பேர் இதர விவசாயிகளாவர்.

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அவர்கள் ஆக்கிரமித்துள்ள ஆட்சேபகரமற்ற நிலங்களை ஒப்படைப்பு செய்யும் திட்டத்தின்கீழ் 1.7.77ல் இருந்து 1978-79-ம் ஆண்டில் ஜனவரி'79 வரையிலும் 28862.96 ஏக்கர் நிலம் 5312 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இவையல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் ஆட்சேபகரமில்லாத 9700.00 ஏக்கர் நிலங்களை ஒழுங்குபடுத்தி ஒப்படைப்பு செய்யும் திட்டத்திற்காக விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் 20,476 பேர் பயனடைவார்கள்.

**நிலவருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு இல்லங்கள் :**

கிராம மக்களின் குறைகளை நேரிடையாகக் கவனித்து நடவடிக்கை எடுத்து வரும் நிலவருவாய் ஆய்வாளர்களுக்குப் போதுமான குடியிருப்பு வசதிகள் இல்லை. எனவே, தமிழ் நாட்டில் உள்ள எல்லா சரகத் தலைமை இடங்களிலும் நிலவருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்பு இல்லம் கட்டித்தரத் தமிழ்நாடு அரசு

இத்திட்டத்தின் கீழ் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 1978-79-ல் 30 குடியிருப்புகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு சரகத் தலைமையிடத்திலும் புறம்போக்கு நிலங்களில் 5 சென்ட் பரப்பளவில் வீடுகட்ட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தப் பணியினை மாநில வீட்டு வசதி வாரியம் கீழ்க்கண்டவாறு இல்லங்கள் அமைக்க முடிவாகியுள்ளது:

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் | 8 | இல்லங்கள் |
| பட்டுக்கோட்டை | 5 | ,, |
| ஒரத்தநாடு | 5 | ,, |
| பாபநாசம் | 5 | ,, |
| கும்பகோணம் | 5 | ,, |
| மன்னார்குடி | 2 | ,, |
| | 30 | ,, |

**சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் :**

இத்திட்டம் தஞ்சை மாவட்டத்தில் 16 வட்டாரங்களில் செயல்பட்டு வருகிறது. இதன்கீழ் பயன்பெறத் தகுதியுள்ளவர்கள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,12,341 ஆகும். இதில் சிறு விவசாயிகள் 69,629; விவசாயத் தொழிலாளர்கள் 13,863.


கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் இத்திட்டத்தின் ஏற்பட்டிருக்கும் விரைவான முன்னேற்றத்தினைக் காணலாம்.

| ஆண்டு | பயனடைந்த சிறு விவசாயிகளின் எண்ணிக்கை. | அளிக்கப்பட்ட மான்யத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1975—76 | 7,477 | 9.84 |
| 1976—77 | 8,397 | 14.90 |
| 1977—78 | 7,356 | 19.88 |
| 1978—79 (ஜனவரித் திங்கள் வரையில்) | 15,664 | 38.98 |

இத்திட்டத்தின் கீழ் 1.7.77 முதல் 31.12.78 முடிய உள்ள காலத்தில் சிறு விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புக்காக 204 விசைத் தெளிப்பான்களும், 977 கைத்தெளிப்பான்களும் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர தார்ப்பாலின்கள் 617 அளிக்கப்பட்டுள்ளன. இதற்காக சிறு விவசாயிகளுக்கு மான்யமாக அளித்த தொகை ரூ. 3.13 இலட்சமாகும்.

திருந்திய விவசாய முறைகளை மேற்கொள்ள சிறு விவசாயிகளுக்கு தழை மிதிக்கு கருவிகள் 1,369 வழங்கப்பட்டுள்ளன. தானியங்களை எடுத்துச் செல்ல 69 வண்டிகளும், வண்டிமாடுகள் இல்லாத சிறு விவசாயிகளுக்கு 1596 வண்டி மாடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளன. தானியங்களைச் சேமித்து வைத்துக் கொள்ள உலோகப் பத்தாயங்கள் 282 வழங்கப்பட்டுள்ளன. இதற்





காகச் சிறு விவசாயிகளுக்கு மானியமாக அளிக்கப்பட்ட தொகை ரூ. 6.13 இலட்சமாகும்.

மேலும், சிறு விவசாயிகளுக்கு பயிர் செய்யும் முறையினை விளக்குவதற்காக 943 நீருபணப் பாத்திகள் ரூ. 1,80,952- செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தென்னை மற்றும் பழமரங்களை அதிகம் வளர்க்கும் நோக்கத்தில் 4023 தென்னை மற்றும் பழக் கன்றுகள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தங்களது பாசனமுறைகளை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக 144 ஆயில் எஞ்சின்களும் 42 பாசனக் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 2.17 இலட்சம் ஆகும். சிறு விவசாயிகளின் பொருளாதார நிலையினை மேம்படுத்த 2714 கறவைமாடுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 12.50 இலட்சம் மானியம் சிறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த கிராம முன்னேற்றத் திட்டம்:**

இம்மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கிராம முன்னேற்ற திட்டத்தைச் செயல்படுத்த சிறு விவசாயிகள் மேம்பாட்டு திட்டம் அமலில் உள்ள 10 வட்டாரங்களையும், சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டம் அமலில் இல்லாத 3 வட்டாரங்களையும் சேர்த்து 13 வட்டாரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் அமலில் உள்ள வட்டாரங்களுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் மான்யம் இந்த நிதியாண்டு இறுதிக்குள் செலவிடப்பட உள்ளது. இதற்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசின் அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு இந்த நிதியாண்டு இறுதிக்குள் ரூ. 65 இலட்சம் மான்யமாக விரைவில் வழங்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரையில் 6673 சிறுவிவசாயிகள், 6119 மிகச் சிறுவிவசாயிகள் மற்றும் 5834 விவசாயத் தொழிலாளர்கள் ஆக 18,626 குடும்பத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களின் தேவைகளை ஆராய்ந்து அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற கடன் மனுக்களை மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டு கடன் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன.

இத்திட்டம் நடப்பு நிதியாண்டில் சில மாதங்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்ட போதிலும் மிகக் குறுகிய காலத்தில் தீவிரமாகப் பணியாற்றப்பட்டு இதுவரை 1214 கடன் மனுக்கள் அனுமதியாகி ரூ. 14 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

**பிற்பட்டோர் நலம்:**

தமிழ்நாடு அரசு பின்தங்கிய மக்களின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்களைச் செயலாக்கி வருகிறது. தஞ்சை மாவட்டத்தில் பிற்பட்டோரின் பட்ட மேற்படிப்பு மற்றும் பள்ளிப் படிப்புக்காகவும் 1.7.78 முதல் 31.1.79 வரையில் ரூ. 42.36 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பின்தங்கிய மாணவரின் விடுதிகள் பராமரிப்புக்காக ரூபாய் 7.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. விடுதியில் தங்கியிருப்போருக்கு சீருடை வழங்குவதற்காகவும் தனியார் விடுதிகளுக்கு மான்யமாகவும் ரூபாய் 3.61 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகியோர்கள் பயன்படுத்தும் கருவிகளை

## சத்தியம் வெல்லும்!



வழங்கும் திட்டத்திற்காக ரூபாய் 1.12 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**அரிசன நலன்:**

அரிசன மக்களின் சீரிய முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு 1.7.77 முதல் 31.1.79 முடிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் சுமார் ரூபாய் 1 கோடியே 68 இலட்சத்திற்குமேல் தமிழ்நாடு அரசு செலவிட்டுள்ளது. இதில் அரிசன மாணவருக்கான கல்வி உதவித்தொகை, அவர்கள் தங்கும் விடுதிகளின் பராமரிப்புச் செலவு, புதிய பள்ளிகளைக் கட்டுதல், உழவு மாடுகள், கிணறுகள் மான்யம், வீட்டு மனைகள் வழங்குதல், கிராமவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அரிசனநலத்துறையிலிருந்து மான்யம் வழங்குதல், குடிநீர் வசதிகள், ஆதிவாசிகளுக்குக் கல்வி உதவித்தொகை வழங்குதல் மற்றும் அரிசன நலனுக்கான பல்வேறு பணிகள் ஆகியவை அடங்கும்.

**சமூகநலன்:**

1978 ஜனவரி 1ந் தேதி முதல் தஞ்சை மாவட்டத்தில் வழிகாட்டும் பணி இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கம் சமூகத்தில் மிக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதாகும்.

விதவையர் திருமணத்திற்கு ஊக்கமளிக்கும் இதுவரை மணமாகியுள்ள 30 தம்பதிகளுக்கு ஒவ்வொரு தம்பதிகளுக்கும் உதவித் தொகை ரூ. 5,000/- வீதம் வழங்கப்பட்டது. இதுவரை ரூபாய் 1.5 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதவையின் குழந்தைகளுக்குப் படிப்புதற்கு புத்தகங்கள் முதலியன வழங்கும் திட்டத்தின் கீழ் 190 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை ரூபாய் 5,900 ஆகும்.

ஏழை மாணவ மாணவியருக்கு தட்டெழுத்துப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 70 மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகை மாதம் ரூ. 15- ஆகும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை செலவிடப்பட்ட தொகை ரூ. 10,500. பெண்கள் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் சீருடை தைப்பதன் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றவர்கள் 1000 பேர்.

**பொது சுகாதாரம்:**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், நடமாடும் மருத்துவ வசதித் திட்டத்தின்கீழ் 1978-ல் பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 401 ஆகும். இத்திட்டத்தின் மூலம் சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 1,20,150 ஆகும்.

**கல்வி:**

கல்வி வளர்ச்சியில் இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஒரு மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்தப் பெருமையை மேலும் உயர்த்துதும்படியாகத் தமிழ்நாடு அரசு பல்வேறு கல்வி வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தஞ்சை மாவட்டத்தில் புதிதாக 5 உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. மேலும் 68 பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளிலிருந்து மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. கூடுதல் ஆசிரியர் நியமனங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

**போக்குவரத்து வசதிகள்:**

சோழன் போக்குவரத்துக் கழகத்திடம் 1.7.77ல் இருந்த வழித்தடங்கள் 307 ஆகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மேலும் 29 வழித்தடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


நெடுநாட்களாகப் போக்குவரத்து வசதி இல்லாமலிருந்த கிராமங்கள் பயன்பெறும் வகையில் புதிதாக 11 வழித்தடங்கள் துவக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் புதிதாகப் பயனடைந்த கிராமங்களின் எண்ணிக்கை 112 ஆகும். பயன் பெறும் மக்கள் தொகை 1.35 இலட்சம் ஆகும். இவையன்றி, ஏற்கெனவே உள்ள வழித்தடங்களில் கூடுதலாக 18 பேருந்துகள் விடப்பட்டுள்ளன.

இவ்வாறாக, தஞ்சாவூர் மாவட்டத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு சீரிய திட்டங்களைச் செயலாக்கி வருகிறது தமிழ்நாடு அரசு. கூடிய விரைவில் நமது மாநிலம் ஆக்கப்பணிகளிலும், முன்னேற்றத்திலும் இந்தியாவில் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.



# விரைந்து பணியாற்றும் வேலை வாய்ப்பகங்கள்!

**வேலை வாய்ப்பகங்களின் பணிகள் துரிதப்பட, கம்ப்யூட்டர்கள் இயங்குமளவில் கடந்த இரண்டு ஆண்டுகள் இணையற்றுத் திகழ்ந்தன!**



தமிழகத்தில் 32 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. 17 வேலை வாய்ப்பகங்களும், தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகமும், ஊனமுற்றோர்க்கான தனி வேலை வாய்ப்பகமும்; சென்னை, மதுரை அண்ணாமலை நகர் ஆகிய இடங்களில் பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல்-வழி காட்டும் நிலையங்களும், திண்டுக்கல், ஈரோடு காஞ்சிபுரம், கரூர், அம்பத்தூர், தூத்துக்குடி, நாகப்பட்டினம், மண்டபம், சங்கராபுரம், ஆலங்காயம் ஆகிய இடங்களில் முறையே 10 துணை வேலை வாய்ப்பகங்களும் இதில் அடங்கும்.

1977-78ஆம் ஆண்டிலும் 1978-79-ஆம் ஆண்டிலும் வேலையில் அமர்த்தப்பட்டோர்களின் புள்ளி விவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

1977-78, 1978-79 ஆகிய ஆண்டுகளில் கீழ்க்கண்ட முக்கிய திட்டங்கள் செயலாக்கப்பட்டன.

பழங்குடி மக்களை வேலையில் அமர்த்துவதில் மேலும் கவனம் செலுத்துவதற்காக, தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள சங்கராபுரத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஆலங்காயத்திலும், துணை வேலைவாய்ப்பகங்கள் இயங்கி வருகின்றன. தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு விகிதாச்சாரப்படி வேலையளிப்பதற்கு (Centralised Rosters for Communal Reservation) ஒரு புதுத்திட்டம் தற்பொழுது சேலம் மாவட்டத்தில் பரிசோதனைத் திட்டமாகச் செயலாக்கப்படுகிறது. இதற்கென்று ஒரு தனிப்பிரிவு சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களின் பணிகளை கம்ப்யூட்டர் மூலம் செய்வதற்கு அரசு அனுமதித்துள்ளது. அதன்படி வேலை வாய்ப்பகங்களின் வேலைகளைத் துரிதப்படுத்திச் செவ்வனே செய்யவும், முக்கியமாக வேலை வாய்ப்பகங்கள் மீது வரும் புகார்களைக் களைவதற்கும் மேலும் தனியார் துறையில் வேலை அளிப்போரை ஊக்குவிப்பதற்கும், சரியான விவரங்களை நிலைப்படுத்துவதற்கும் ஏதுவாகிறது. இத்திட்டத்தின் கீழ் மனுதாரர்களின் படிப்பு, வயது ஆகிய உண்மை விவரங்களை மனுதாரர்களின் பதிவட்டைகளிலிருந்து ஏற்கெனவே வகுக்கப்பட்ட 'இன்புட்' படிவங்களில் பலவித குறியீட்டு எண்களைக் கொண்டு மாற்றப்படும்.

இவ்விதம் இன்புட் படிவங்களில் மாற்றப்பட்ட மனுதாரர்களின் விவரங்களை 'அரசு 'டேட்டா சென்டரில்' கம்ப்யூட்டர் நாடாவில் பதிவு செய்யப்பட்டு அங்குப் பாதுகாப்பில் வைக்கப்படும். இவ்விதம் தயாரிக்கப்பட்ட நாடாக்கள் பிறகு வேலை வாய்ப்பகங்களில் அறிவிக்கப்பட்ட காலியிடங்களைப் பூர்த்தி செய்ய கம்ப்யூட்டர் மூலம் மனுதாரர்களைத் தேர்ந்தெடுக்க உபயோகப்படும் கம்ப்யூட்டர் முறையில் உள்ள ஒன்பது வேலை வாய்ப்பகங்களில் உள்ள 2,50,000 மனுதாரர்களைச் ச்ார்ந்த இன்புட் படிவங்கள் தயாரிக்கப்பட்டன. முதலில் சென்னையில் உள்ள தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகத்தைச் சார்ந்த இன்புட் படிவங்கள் கம்ப்யூட்டர் முறையில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அதன்படி 2,000 மாதிரி இன்புட் படிவங்கள் வேலை வாய்ப்பகங்களின் பல பணிகள் கம்ப்யூட்டர் மூலம் பரிசோதிக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்டன.

ஊனமுற்றோரைப் பணியிலமர்த்துவதை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தகுந்த வேலை வாய்ப்புக்களை அறிவதற்காகவும், சேலம், திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பகங்களில் ஒவ்வொன்றிலும் ஓர் இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் பதவியுடன் ஒரு பிரிவு இயங்கி வருகிறது. இதே போல் ஏற்கெனவே கோவை மற்றும் மதுரை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் தனிப் பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவுகள் ஊனமுற்றோர்க்கான மத்திய அரசின் ஒதுக்கீடான 3 சதவீதத்தைச் சரியாகச் செயல்படுத்த உதவுவதுடன் இம்மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றோர்களைப் பணியில் அமர்த்த உதவுகிறது.

கிராமப்புறங்களிலுள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யவும், திருச்சி மாவட்ட வேலைவாய்ப்பகத்திலுள்ள அதிகப்படியான வேலைப் பளுவைக் குறைக்கவும், கரூரில் துணை வேலை வாய்ப்பகம் 1978-79 இல் துவக்கப்பட்டு, இயங்கி வருகிறது.

முதல்
குழந்தை
இப்பொழுது
வேண்டாம்

இரண்டாவதுக்கு
இடைவெளி
இருக்கட்டும்

பிள்ளை
பெற விரும்பு
வோர்க்கு ஓர்
ஆலோசனை


மூன்றாவது
வேண்டாம்!
வேண்டாம்!

அருகிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு நிலையத்தினரும் ஆரம்ப சுகாதார நிலையத்தினரும் ஆலோசனை சொல்வதுடன் சேவை வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர்.

இன்றே அவர்களை சந்தியுங்கள்

davp 79/62

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பல்வேறு திட்டங்களைச் செயலாற்றி வருகின்றது. நகர அழகுக்கு மெருகூட்டும் வகையில் புதிய புதிய திட்டங்களை அது உருவாக்கி வருகிறது.**



# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

தன்னிறைவு பெற்ற குடியிருப்பு மனைகள், அடிப்படை வீடு அமைப்புகள், தாமே வீடமைத்துக் கொள்ளும் கட்டடப் பொருள்கள் மற்றும் சமுதாய நல வசதிகளுடன் குறைந்த வருவாய் உள்ள 13,500 குடும்பங்களுக்கு (74,000 நபர்கள்) உதவும் இத்திட்டம், சுமார் 175 எக்டேர் மொத்தப் பரப்பில் அரும்பாக்கம், வில்லிவாக்கம், கொடுங்கையூர் ஆகிய மூன்று இடங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. தொழில் மற்றும் வணிகத்திற்கான வசதியுடன் கூடிய மனைகள் வழங்கும் திட்டமும் இதில் அடங்கும்.

அரும்பாக்கத்தில் இதுவரை 2202 தன்னிறைவு பெற்ற குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 157 அடிப்படை வீடு அமைப்புகள் கட்டப்பட்டு அவற்றிற்கு உரியவரிடம் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 966 அடிப்படை வீட்டமைப்புகள் முடியும் தறுவாயில் உள்ளன. மருத்துவ மனை, சமூகக்கூடம் முதலியன முழுதாய் முடிந்துள்ளன. 8 இலட்ச லிட்டர் நிறையளவுள்ள உயர்நிலை நீர்த்தொட்டியும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர், வடிகால் வசதிகள் முதலியன அமைக்கப்பட்டு வருகின்றன.

வில்லிவாக்கத்தில் சமூகக்கூடம் துவக்கப்பள்ளி, மருத்துவமனை முதலிய கட்டடப் பணிகள் துவங்கப்பட்டு முன்னேற்றம் கண்டு வருகின்றன. கொடுங்கையூரில் முன்னேற்றப்பணிகள் கூடிய விரைவில் துவக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தமிழ்நாடு குடிசைப்பகுதி மேம்பாடு: (தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்)**

சுமார் 30,000 குடிசைப்பகுதி வாழ் குடும்பங்கள் பயனடையும் வகையில் குடிசைப் பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள், சாலைகள், தெருவிளக்குகள், கழிவுக் கால்வாய்கள், வடிகால் வசதிகள், கழிவிடங்கள் முதலிய அடிப்படை வசதிகளும், சமூக நல வசதிகளும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

3,300 குடும்பங்கள் பயனடையும் வகையில் 14 குடிசைப்பகுதி மேம்பாட்டுப் பணிகள் பூர்த்தியாகியுள்ளன. 800 குடும்பங்கள் கொண்ட வேறு ஐந்து குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப்பணிகள் முடிவடையும் கட்டத்தில் உள்ளன. இன்னும் ஐந்து இடங்களில் 10,600 குடும்பங்கள் நலன் பெறும் வகையில், ஆக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

**வியாசர்பாடி வீட்டுவசதி, மேம்பாட்டுத் திட்டம்**

180 ஏக்கர் நிலப்பரப்புடைய வியாசர்பாடி ஏரிப் பகுதியில் 5,709 குடும்பங்கள் குடியேறி ஆக்கிரமித்துள்ளனர். அவர்களுள் 3,132 குடும்பங்கள் பர்மாவிலிருந்து குடிபெயர்ந்தோர். இந்த ஏரிப் பகுதியை மழைக்காலங்களிலும் நீர் தேங்காதவாறு மேம்படுத்தி, நல்ல சாலைகள், போதிய குடிநீர்க் குழாய்கள், நவீன பொதுக் கழிவறைகள், குளியலறைகள், தெருவிளக்குகள், மழைநீர்க் கால்வாய்கள் போன்ற அடிப்படை வசதிகளை அமைத்து மழலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மருத்துவமனை, சிறு தொழிற்கூடம் போன்ற கட்டடங்களை ரூபாய் 149.89 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சிறுதொழில்கள் (சிறுதொழில் நிறுவனம்-சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

தன்னிறைவு பெற்ற மனைகள் தொழிற்கூடங்கள், இயந்திரங்கள், நிதியுதவி, பயிற்சி ஆகியவற்றை வைத்து, 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல், தன்னிறைவு வீட்டு மனைத்திட்டம் மற்றும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிசைத்தொழில் வகையில் 5,000 பேர்களுக்கு வேலை தருதல் முதலியன இத்திட்டத்தின் அம்சங்களாகும்.

இதுவரை அரும்பாக்கத்தில் பூர்த்தியடைந்த 200 தொழிற்கூடங்களில் 13 தொழிற்கூடங்கள் உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளன. மேலும் 22 தொழிற்கூடங்களில் கட்டும் பனி நடைபெற்று வருகிறது. வில்லிவாக்கத்திலும், கொடுங்கையூரிலும் இப்பணி விரைவில் துவக்கம் ஆகும்.

**தாய் சேய் நலம்: (சமூக நலத் துறை):**

பயிற்சி, கருவிகள், கட்டடங்கள் முதலிய வசதிகளுடன்

ஆறு வயதிற்குட்பட்ட 17,000 குழந்தைகளுக்கும் 7,000 தாய்மார்களுக்கும் சத்துணவும், மருத்துவ வசதியும் அளித்தல், மற்றும் தன்னிறைவு வீட்டு மனைத் திட்டம், குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பயனடையும் குடும்பங்களிலிருந்து வயது வந்த 20,000 பெண்களுக்குச் சத்துணவு, மருத்துவ வசதிகளுடன் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய கல்வியும், எழுத்தறிவுக் கல்வியும் அளித்தல் முதலியன இத்திட்டத்தின் கீழ் வருவனவாகும்.

இதுகாறும் 58 குழந்தை நல விடுதிகள் துவக்கப்பட்டு மேற்கூறிய பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. 3,641 குழந்தைகள் ஆதார, ஆரம்பக் கல்விகளில் சேர்ந்து பலனடைந்து வருகிறார்கள். மேலும் 2.5 வயதிற்குட்பட்ட 295 சிறு குழந்தைகள் 9 குழந்தைக் காப்பகங்களில் சேர்க்கப்பட்டு நன்மையடைந்து வருகிறார்கள். சத்துணவுத் திட்டம் 30 குழந்தை நல விடுதிகளில் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினால் 1,246 குழந்தைகளும், 149 சிறு குழந்தைகளும் பலனடைந்து வருகிறார்கள். எழுத்தறிவுக் கல்வித் திட்டத்தினால் 2,231 பெண்கள் தற்போது பலனடைந்து வருகிறார்கள்.

**குடிநீர் வசதி மற்றும் கழிவுக் கால்வாய்கள் (சென்னைப் பெருநகர் குடிநீர்க் கழிவுக் கால்வாய் வாரியம்)**

முன்னமே இருந்து வரும் அமைப்புகளை புனரமைத்தலும் பொதுக் குழாயை நம்பி வாழும் மக்கள் மற்றும் குடிசைப் பகுதி ஏழைகளுக்கு விரைவான உதவிகளைச் செய்தலும் இத்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

இத்திட்டத்தின் பணிகள் சமீபத்தில் ஆரம்பித்து முன்னேற்றம் கண்டு வருகின்றன.

**சாலைகள் மற்றும் சாலைப் போக்குவரத்துச் சீரமைப்பு: நெடுஞ்சாலை, கிராமப் பணித் துறை-சென்னை மாநகராட்சி (காவல்துறை)**

உள் வட்டச் சாலையின் ஒரு பகுதியை அமைத்தல், நடைபாதைகளைச் சீரமைத்தல், புதியனவற்றைக் கட்டுதல், சைக்கிள் தடங்கள், சுரங்க நடைபாதைகள், ஆற்றின் இடைவழிகள், சாலைச் சந்திப்புகளில் ஒளி விளக்குகள், போக்குவரத்துப் பொறியியல் முறைகள் ஆகியன ஏற்படுத்துதல் முதலியன இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.

உள் வட்டச் சாலையின் மூன்று வெவ்வேறு பகுதியில் சாலை அமைப்புப் பணி முழுமையடைந்து வருகின்றது. 9 சுரங்க நடைபாதைகளில் 5 முழுவதும் பூர்த்தியாகி பாதசாரிகளால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அண்ணா சாலையிலும், பூந்தமல்லி சாலையிலும் நடைபாதை சீரமைப்பு, சைக்கிள் தடங்கள் முதலிய பணிகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. 7 சிறு பாலங்கள் கட்டும் பணியில் 5 முழுவதுமாய் கட்டப்பட்டுச் சாலைப் போக்குவரத்துக்குப் பயன்பட்டு வருகின்றன.

**பேருந்து போக்குவரத்து: (பல்லவன் போக்குவரத்துக்கழகம்)**

பழைய பேருந்துகளை மாற்றுதல், புதிதாகப் பணிமனைகள் மற்றும் பேருந்து நிலையங்கள், பயணிகள் தங்கும் நிழற்குடைகள் ஆகியன எழுப்புதல் முதலியனவே இத்திட்டமாகும்.

புதியதாக வாங்கவிருந்த 285 பேருந்துகளும் வாங்கப்பட்டு பயணிகளின் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளன. பேசின் பிரிட்ஜ் பணிமனை கட்டடப்பணி முற்றிலும் பூர்த்தியாகி விரைவில் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட உள்ளது. பெரம்பூரிலும் பணிமனை வேலைகள் நடைபெற்று வருகின்றன. நான்கு பேருந்து நிலையங்கள் முடிவடைந்து பேருந்துப் போக்குவரத்துக்கு பயன்பட்டு வருகின்றன.


**மறைமலை நகர்: (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முக்கிய பொறுப்பேற்றுள்ள பணிகளில் மறைமலை நகர் எனும் ஒரு புதிய நகரை நிறுவுவது குறிப்பிடத்தக்கதாகும். சென்னையிலிருந்து 43 கி.மீ. தொலைவில் சுமார் 160 எக்டர் பரப்பில் அரும்பி வரும் இப் புதுநகரம் தாம்பரத்திற்கும் செங்கற்பட்டிற்கும் இடையில் அமைந்துள்ளது.

இதுவரை 305 வீட்டு மனைகளும், 23 தொழிற் மனைகளும் விற்பனையாகி உள்ளன. குறைந்த ஊதியப் பிரிவினருக்காக (ஹட்கோ) உதவியுடன் இக்குழுமம் அமைத்துவரும் 144 வீடுகளில், 48 வீடுகள் முழுமையடைந்தும், மற்றவை முன்னேற்றம் கண்டும் வருகின்றன. மேலும், மத்திய ஊதியப் பிரிவினருக்காக, 30 வீடுகளும், குறைந்த ஊதியப் பிரிவினருக்காக 504 வீடுகளும் 'ஹட்கோ' நிதியுதவியுடன் கட்டுவதாக ஓர் திட்டம் உள்ளது.

**மணலி: (சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

இக் குழுமத்தின் இன்னொரு திட்டம் மணலியின் 190 எக்டர் நிலத்தில் வீடுகளைக் கட்டிக் குடியிருப்புப் பற்றாக் குறையை ஈடுசெய்வதாகும். முதல் கட்டத்தில் 'ஹட்கோ' உதவியுடன் குறைந்த ஊதியப் பிரிவினருக்காகக் கட்டப்பட்டு வரும் 543 வீடுகளில், 192 வீடுகள் முழுதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மற்றவை கட்டப்பட்டு வருகின்றன. இரண்டாம் கட்டத்தில் 417 குறைந்த ஊதியப் பிரிவினருக்கான வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. இதுவரை 59 வீட்டு மனைகள் விற்பனையாகியுள்ளன. நிலத்தடி நீர்த் தொட்டியுடன் கூடிய உயர்நிலை நீர்த்தொட்டி ஒன்றும் முடிவடைந்துள்ளது. மேலும், ஒரு நிலத்தடி நீர்த்தொட்டி கட்டப்பட்டு வருகிறது. 28 தெரு



# சின்கோனா

தமிழ்நாடு அரசு சின்கோனாத் துறை, 1860-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டுவரும் தொழிலாளர் கூட்டமைந்த ஒரு வர்த்தக நிறுவனமாகும்.

இத்துறையில் 3,000 தொழிலாளர்கள் வேலையில் உள்ளனர். இவர்களுக்கு இலவச வீட்டு வசதிகளும், சுத்தமான குடிநீர் மற்றும் பல்வேறு அடிப்படைத் தேவைகளும் தோட்டத் தொழிலாளர் சட்டப்படி வழங்கப்படுகின்றன. தற்போது, தினக்கூலி சட்டப்படி ரூ. 6.50 என்ற விகிதத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது. ஆண், பெண் இருபாலார்க்கும் சம ஊதியம் வழங்கப்படுகிறது.

சமுதாயத்தில் நலிவுற்றோருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்தில் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இத்துறையின் திட்டங்கள் விரிவுபடுத்தப்டுள்ளன. மதுரை மாவட்டம் மேல் பழனி மலைகளில் ரூபாய் 52.57 இலட்ச மதிப்பீட்டில் 400 ஏக்கரா பரப்பளவில் ஜிரேனியம் பயிரிடும் திட்டம் கடந்த மார்ச்சு 79-ல் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 220 தொழிலாளர் வேலை வாய்ப்புப் பெறுவார்கள். மதுரை மாவட்டத்தில் ''ஹைவேவிஸ்'' (Highwayvis Group of Estates) தோட்டங்களில் ரூ. 146.26 இலட்சம் செலவில் 1,000 ஏக்கரா பரப்பில் சின்கோனா பயிரிடும் திட்டம் தமிழ்நாடு அரசால் இசைவளிக்கப்பட்டுள்ளது. தேவையான நிலம் இத்துறைக்குக் கிடைத்தவுடன் இத்திட்டம் அமல்படுத்தப்பட இருக்கிறது. இத்திட்டம் 1,100 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும். 150 இலங்கை அகதிக் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் கொடைக்கானல், கூக்கல் பகுதியில் 700 ஏக்கரா நிலத்தில் ஜிரேனியம் பயிரிடும் திட்டமொன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழக அரசின் உள்ளூர் மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்பு வளர்ச்சித் திட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்பட்ட குழுவினரின் பரிந்துரையின்படி கீழ்க்காணும் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன:

(1) 400 ஏக்கராவில் ஜாவா சிட்ரொனெல்லா பயிரிடும் திட்டம்.

(2) ஆண்டொன்றுக்கு 1500 கிலோ காபீன் என்ற மருந்து பொருள் தயாரிக்கும் திட்டம்.

டயஸ்கோரியா பயிரிடவும் 'டயஸ்ஜெனின்' (Diosgenin) என்னும் மருந்துப்பொருள் தயாரிக்கவும் பெரியதொரு திட்டம் 1978-79-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. டயஸ்ஜெனின் மருந்துப் பொருள் தயாரிப்பதற்காக வால்பாறை சின்கோனாப் பகுதியில் தொழிற்சாலை ஒன்று கட்டப்படும். இந்தத் தொழிற்சாலைக்கு, ''தமிழ்நாடு ஸ்டிராய்ட்ஸ்'' (Tamil Nadu Steroids) என்று பெயரிடப்பட்டு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்களால் 9-1-1979-ல் அடிக்கல் நாட்டப்பட்டது. 1979-80-ல் இந்தத் தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எண்பது இலட்ச ரூபாய் அளவிலான இந்தத் திட்டம் முழுமையடையும் தருவாயில் சுமார் 400 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். மேலும், ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் செயல்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் கிராமப்புற மக்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்குமாக ஏறத்தாழ 1,500 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் தொடர்ந்து அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசின் வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான இந்தத் துறை கணிசமான அளவில் தொடர்ந்து வருவாய் ஈட்டி வருகிறது. 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 37.33 இலட்சம் மதிப்புள்ள கொய்னாப் பொருள்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு, கொய்னாப் பொருள் ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடு விதித்தமையால் 1978-79-ஆம் ஆண்டில் கொய்னாப் பொருள் ஏற்றுமதி குறைந்து ரூ. 23.67 இலட்ச அளவில் மட்டுமே ஏற்றுமதி செய்ய முடிந்தது. இந்தத்துறையின் 1977-78-ஆம் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 18.17 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1978-79 மற்றும் 1979-80-ம் ஆண்டுகளில் நிகர இலாபம் ஒவ்வொரு ஆண்டும் ரூ. 18 இலட்சம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கொடிய நோயான மலேரியாவை நம் நாட்டிலிருந்து ஒழிப்பதற்காக ஆண்டுதோறும் 1,000 கிலோ கொய்னா சல்பேட் (Quinine Sulphate) என்ற மருந்தை இத்துறை, தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்திற்கு வழங்கி சேவை செய்வதுடன், சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மக்கள் பிரிவினருக்கும் கணிசமான அளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் செயல்படுகிறது.

---

விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. கழிவுக் கால்வாய் வசதியும் பூர்த்தி அடைந்துள்ளது. சாலை அமைப்பு, குடிநீர் வடிகால் வசதிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

**கோயம்பேடு புதிய மொத்த விற்பனைக் கூடம்:**

**(சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்)**

சென்னை நகரில் மைய வியாபாரத் தலத்தில் குறிப்பாகக் கொத்தவால் சாவடிப் பகுதியில் ஏற்படும் இட நெருக்கடியையும், இடர்ப்பாடுகளையும் குறைக்கும் வகையில், அங்கு மேற்கொள்ளப்படும் விற்பனைப் பேரங்கள், கோயம்பேடு பகுதிக்கு மாற்ற இத்திட்டம் உதவுகிறது. தவிரவும் சுமை வாகனங்களுக்கெனத் தனி நிலையமும் அங்கில்லை. இதனால் அந்த ஊர்திகள் பொருட்களை ஏற்றி இறக்கும் பணிகளுக்காகச் சாலைகளிலேயே நிறுத்தப்படுகின்றன. இதனால் சாலைகளை ஏனையோர் சரிவரப் பயன்படுத்த முடியவில்லை. இத்தகைய இடர்களை நீக்கும் பொருட்டு, கோயமபேடு என்ற இடத்தில் 120 எக்டர் நிலப்பரப்பில் 3,000 கடைகளை அமர்த்தும் வசதியுடன் ஒரு புதிய மொத்த விற்பனைக் கூடம் அமைக்க ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் இக்குழுமம் சென்னை வாழ் ஏழை, எளிய மக்களுக்காக வீடு, வேலைவாய்ப்பு, பொதுச் சுகாதாரம், போக்குவரத்து போன்ற பல துறைகளில் மூலம் பெரும் பணியாற்றி உள்ளது.

நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை..
# இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார்
# எதனையும் மிஞ்சும் வெண்மை







வேளை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




**இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.**

லின்டாஸ்-RIN 34-2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

தொழிலாளர்க்கும், நிர்வாகிகளுக்கும் சுமுக உறவு ஏற்படவும் - தொழிலாளர் நலன் காக்கவும் சட்டங்களையே மாற்றிச் சமூகப் பாதுகாப்பளித்த அரசு இது!

# தொழிலாளர் நலன் சட்டத் திருத்தங்கள்

தமிழ்நாட்டில் கடந்த இரண்டாண்டுகளாகத் தொழிலாளர் நிலைமையும், தொழில் அபிவிருத்தியும் முன்னேற்றமடைந்து வந்துள்ளது. தொழிலாளர்களின் நலனுக்கென உள்ள சட்டங்களைச் செவ்வனே நிர்வகித்தல், தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்துதல், தொழிலாளர்களின் நலனுக்கான சட்டங்களை மாற்றுதல், சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் ஆகியவை இவ்வரசின் தலையாய கொள்கைகளாகும்.

தொழிலாளர்களுக்கு வேலை நிறுத்தம் செய்வதற்கு உள்ள உரிமையை அரசு ஏற்றுக்கொள்ளும். அதே சமயத்தில் வேலை நிறுத்தங்கள் அடிக்கடி நிகழ்வதைத் தடுக்க அத்தகைய வேலை நிறுத்தங்கள் நீடித்துக் கொண்டே போகும்போது அவற்றிற்கு முடிவு காண வேண்டி தொழில் தகராறுகளில் தலையிட்டுச் செவ்விய முறையில் இணக்கம் செய்வதன் மூலமும் சுமுகமாக அவற்றிற்குத் தீர்வு காண்பதன் மூலமும் அரசு உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொண்டது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரங்கள் பின் வருமாறு :—

| | 1977 | 1978 |
|---|---|---|
| (அ) கதவடைப்புகள் உட்பட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | 298 | 378 |
| (ஆ) இழந்த உழைப்பு நாட்கள் | 26,16,963 | 21,55,675 |

(பணியாற்றிய மொத்த உழைப்பு நாட்களில் 1 சதவீதத்திற்கும் குறைவு.)

இத்துறையின் செவ்விய நடைமுறைகளால் 1977-ஆம் ஆண்டு, 1978 தகராறுகளும், 1978-ஆம் ஆண்டு 2184 தகராறுகளும் இணக்க முறையில் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்கப்பட்டன.

### தேவையான சட்ட-விதித் திருத்தங்கள்


தொழிலாளர்களின் நன்மைகளை உத்தேசித்துக் கீழ்க்கண்ட சட்டங்கள் விதிகளுக்கான திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

(1) பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள பல்வேறு பயன்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு தங்களுடைய வேலையைப் பற்றிய செல்திறனுள்ள அத்தாட்சியை பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் பெற்றிராததால் தொழிலதிபர்கள் பீடி, சுருட்டுத் தொழிலாளர் அனைவருக்கும் பணிப்புத்தகங்கள் கொடுக்க வேண்டும் என்று கருதப்பட்டு, தமிழ்நாடு 1968-ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணிநிலைமைகள்) விதிகள் 36 (2) ஆவது விதிக்கு வரைவுத் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிப் புத்தகம் தொழிலாளர்களின் முழுச்சொத்தாகும். அதில் பதிவுகளைச் செய்வதற்காக மட்டுமே தொழிலதிபர்கள் வாங்கிப் பதிவு செய்த பின்னர் தொழிலாளரிடம் திரும்ப அளிக்கவேண்டும்.

(2) தமிழ்நாடு 1968 ஆம் ஆண்டு பீடி, சுருட்டுத் தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) விதிகளின் 31 (5) விதிகளின் கீழ், மேல் முறையீடு செய்பவர் என்ற முறையில், தொழிலாளரில் ஒருவர் தேவையான நகல் முத்திரைத் தாள்களுக்குக் கட்டணம் செலுத்துவதின் பேரிலேயே, மேல் முறையீட்டு அதிகாரியின் ஆணைகளைப் பெற இயலும், முத்திரைத் தாள்களை வழங்க வேண்டும் என்னும் நிபந்தனையிலிருந்து, தொழிலாளர்களுக்கு விதி விலக்கு அளிப்பதன் மூலம் தொழிலாளர்களுக்கு இருந்த இந்த இடர்ப்பாட்டை அரசு அகற்றியது. இப்போதுள்ள நிலவரத்தின்படி தொழிலாளர்கள் ஆணை நகலை இலவசமாகப் பெற இயலும்.

(3) 100 அல்லது அதற்கு மேல் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே தொழில் நியமனச் (நிலை ஆணைகள்) சட்டம் பொருந்தும் என்பதை மாற்றி, ஐம்பது தொழிலாளர்கள் பணி புரியும் தொழிற்சாலைகளுக்கும் நியமன (நிலை ஆணைகள்) பொருந்துமாறும் அதன் பயன் தொழிலாளர்களுக்குக் கிடைக்குமாறும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(4) ''தொழிலாளர் ஒருவர் தொடர்ச்சியாக 8 நாட்களுக்கு மேல் வேலைக்கு வராதிருந்தால் அவரை வேலையிலிருந்து நீக்கிவிடுவதற்கான மாதிரி நிலையாணைகள் அல்லது



## தவறு!

* ஒருவர் தமது கருத்தை மற்றவர்மேல் திணிக்க முயல்வது தவறு; அப்படிச் செய்வதானது சச்சரவு களுக்கெல்லாம் மூல கார ணமாகிவிடும்!

—அண்ணல் காந்தி.

சான்றிட்ட நிலையாணைகளில் உள்ள விதித் துறை நீக்கப்பட வேண்டும் என்றும், அவர் வேலைக்கு வராதிருந்த நாட்கள் தவறான நடத்தை என்று மட்டுமே கருதப்பட்டு, தன் னிலை விளக்கம் அளிக்க அவருக்குப் போதிய வாய்ப்பு அளித்த பிறகு விசாரிக்கப்பட வேண் டும். இக்கருத்துக்குச் செயல் வடிவம் அளிக் கும் வகையில் அரசு மாதிரி நிலையாணை களைத் திருத்தி, வெளியிட்டுள்ளது.

(5) தமிழ்நாட்டில் தொழிலாளர் வர்க் கத்தின் பெரும்பான்மையோர் ஊதியக் கொடைப் பயனைப் பெறும் வண்ணம் ஊதியக் கொடை வழங்குவதை கடைகள், நிறுவ னங்கள், மோட்டார்ப் போக்குவரத்து, நிறு வனங்கள், சிறு தொழிற்சாலைகள் ஆகியவற் றில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் சட்டப் படி நீட்டிக்கப்பட வேண்டும் என்று தமிழ் நாடு அரசு தீர்மானித்தது. 20 தொழிலாளர் களுக்குக் குறைவாகவும் ஆனால் 10 தொழி லாளர்களுக்குக் குறையாமலும் உள்ள நிறு வனங்களுக்கு ஊதியக்கொடை வழங்கல் சட் டத்தின் விதித் துறைகள் பொருந்தத் செய் ய்ப்பட்டுள்ளன.

(6) தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பணி விவரங்களைப் பதிந்து கொடுக்க (டயம் கார்டு—பணி சீட்டு அல்லது அடையாள அட்டை) கொடுப்பதற்காகத் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. இந்த அட்டையைக் காண பித்துத் தற்காலிக மற்றும் காஷுவல் தொழி லாளர்கள் பணிக்கொடை மற்றும் வைப்பு நிதிச் சட்டங்களின் கீழ், தங்களுடைய சலுகைகளையும் உரிமைகளையும் பெற முடி யும்.

(7) குறைந்த பட்ச ஊதியம் மட்டுமே கொடுக்கக் கூடிய தொழில்களில் ஈடுபட்டி ருக்கும் தொழிலாளர்களுக்குத் தேசிய விடு முறைகள் பண்டிகை விடுமுறைகள் ஊதியத் துடன் வழங்குவதற்கான ஆணை பிறப்பித் துள்ளது.

### குறைந்தபட்ச ஊதியம்

(8) இந்த அரசு முதல் முறையாகக் கீழ்க் கண்ட தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழி லாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிததுள்ளது.

(அ) அச்சகங்கள்,

(ஆ) சந்தைகள், அங்காடிகள் மற்றும் விற்பனை நிலையங்களில் வேலை செய்யும் பாரம் தூக்கும் தொழிலாளர்கள்.

(இ) மோட்டார் வாகனத் தொழில்கள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் (ஆட்டோமொபைல் ஒர்க் ஷாப்)

கீழ்க்காணும் வேலை நியமனங்களுக்குக் குறைந்தளவு ஊதிய வீதங்களை இவ்வரவுசு திருத்தியமைத்துள்ளது:

(அ) தீப்பெட்டி, பட்டாசுத் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(ஆ) செங்கல் - ஓடுகள் தயாரிப்புத் தொழிலில் வேலை.

(இ) சவ்வரிசித் தொழிலில் வேலை.

(ஈ) உப்பளங்களில் வேலை.

(உ) மோட்டார் போக்குவரத்தில் வேலைவாய்ப்பு.

(ஊ) பீடி சுற்றும் வேலை.

கீழ்க்காணும் வேலைகளில் அமர்த்தப் பட்டுள்ள தொழிலாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்ய அரசுக்கு இயலும் வகையில் குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் விவர அட்டவணை யில் சேர்க்கப்பட்டுள்ளன:

(அ) தேயிலை வாங்கி, தேயிலைத் தூள் தயாரிக்கும் தொழிற்சாலைகளில் வேலை.

(ஆ) அரசு மருத்துவமனைகள், தொழி லாளர் காப்புறுதி மருத்துவ மனைகள்,



மருந்தகங்கள் அல்லாத ஏனைய மருத்துவ மனைகள், தனியார் மருத்துவமனைகளில் வேலை.

(இ) வீட்டிற்கு வேண்டிய தட்டுமுட்டுப் பாத்திரங்கள் செய்தல்.

(ஈ) வெளுத்தல், சாயம் தோய்த்தல் முதலிய பணிகள்.

(உ) தையல் தொழில்.

(9) தமிழ்நாட்டில் மிகப் பெருமளவில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்குக் கூலி உயர்வு அளிப்பதற்காக ஒரு சிறப்புக்குழுவை அமைத்துள்ளது.


(10) இவ்வரசு கைத்தறித் தொழிலாளர்களுக்கான தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்) என்கின்ற சட்ட முன்வடிவு ஒன்றினைத் தயாரித்துள்ளது. இச் சட்டத்தில் சரத்துக்கள் சட்டமன்ற மற்றும் மேலவையின் உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவின் பரிந்துரைக்காக அனுப்பப்பட்டுள்ளது.


(11) கடைகள், நிறுவனங்கள், உணவு விடுதிகளின் பெயர்ப் பலகைகள் தமிழில் எழுதிவைக்க உத்தரவிடப்பட்டு, சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

(12) தமிழ்நாடு உணவுவிடுதிகள் சட்டத்தின் கீழ், வழக்குகளில் அழைப்பாணை இடும் அதிகாரம் உரிய அதிகாரிக்கு வழங்கச் சட்டத் திருத்தம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**உயர்மட்டக் குழு அமைப்பு**

(13). இந்தியாவிலேயே முதல்முறையாகத் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் மற்றும் சட்டமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட உயர்மட்டக் குழுவொன்றினை அமைத்து, தொழிலாளர் சட்டங்களைத் திருத்தி அமைக்க உள்ளது. அந்தக் குழு கீழ்க்கண்ட சட்டங்களில் திருத்தம் வேண்டிப் பரிந்ரைகளை வழங்கியுள்ளது. அப் பரிந்துரைகள் அரசின் ஆய்வில் உள்ளன.





(அ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்.

(ஆ) தமிழ்நாடு உணவு விடுதிகள் சட்டம்.

(இ) தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய பண்டிகை விடுமுறைகள்) சட்டம்.

(ஈ) தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம்.

(உ) ஊதியம் பட்டுவாடாச் சட்டம், மற்றும்—

தொழிலாளர்களை நிரந்தரமாக்கும் தகுதி வழங்குவது பற்றிய சட்டமுன் வரைவு

பெருமளவில் பாதிப்புகள் ஏற்படும் தொழில் தகராறுகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்கு ஆலோசனை கூறும் வகையில் இவ்வரசு தொழிலாளர் பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக்குழு ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது.

**துணைக் குழுக்கள்**

மாநில ஒப்பந்தத் தொழிலாளர் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் காகிதம் சிமெண்ட் துணி ஆலை மற்றும் பொறியியல் ஆகிய தொழில்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறையைப் பற்றி ஆராய்வதற்காகத் துணைக் குழுக்களை ஏற்படுத்தி உள்ளது.

1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சட்டமன்றப் பேரவையில் தொழிலாளர் நல அமைச்சர் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க தொழில்துறை அலுவலர்கள் தொழிலாளர் நீதிமன்றம் அல்லது தொழில் நடுவர் நீதிமன்றங்கள் முன்னிலையில் தொழிலாளர்கள் அல்லது தொழிலாளர்சார்பாகத் தொழிலாளர் சட்டங்களின்படி, தாக்கல் செய்யப்படும் மனுக்களில் நீதிமன்ற கட்ட முத்திரைத்தான்

# 58-க்கு வாழ்த்து

தலைமைச் செயலகப் பணியிலிருந்து, 55-வயது ஓய்வு பெறும் காலக்கட்டத்தைத் தொட்டுவிட்டதால், நான் 30.4.79-ல் பதவியிலிருந்து விலகி ஓய்வு பெற்றிருக்க வேண்டும். கடந்த 34 ஆண்டுக் காலத்தில் நான் 6 ஆண்டுக்காலம் சார்புச் செயலாளராகவும் 3 ஆண்டுக்காலம் துணைச் செயலாளராகவும் பணியாற்றி வந்தேன்.

அன்புக் கடலாகத் திகழும் முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு அரசு, 25.4.79 முதல், ஓய்வு பெறும் வயதை 55லிருந்து 58ஆக உயர்த்தியது எனக்கு விண்ணிலிருந்து என மடியில் விழுந்த பொற்குவையாகும்.

ஓய்வுபெறும் வயதின் விளிம்பிலே தொங்கிக் கொண்டிருந்த என்போன்ற அரசு அலுவலர்களுக்கு இந்த ஆணை பெரிதும் பயன் தரக்கூடியதாகும். எங்களைப் போன்ற அலுவலர்கள் வாழ்க்கையின் இறுதிக் கட்டத்திலே, திருமணம் போன்ற பல குடும்ப பாரங்களினால் நெருக்குண்டிருந்தோம்.

இந்தக் கருணை வடிவான முடிவை என்னைப் போன்ற எல்லா அலுவலர்களும் மகிழ்வுடன் வரவேற்பார்கள். மீண்டும் 3 ஆண்டுகளுக்குப் பணியாற்றும் வாய்ப்பினைத் தந்து அதன் வாயிலாக அரசு அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்த நன்மையைச் செய்த முதல்வர் அவர்களுக்கு நெஞ்சு நிறைந்த பெருமிதத்துடன் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

—என். பி. சதாசிவம்,
அரசு துணைச் செயலாளர்,
தொழிலாளர் மற்றும்
வேலைவாய்ப்புத் துறை,
சென்னை-600 009.

ஒட்ட வேண்டியதில்லை என்று, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

**நிர்வாகிகள் — தொழிலாளர் சிறப்புப் பரிசுகள்**

நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் சிறப்புப் பரிசுகளை வழங்குவதன் மூலம், நிர்வாகத்தினருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே சிறந்த தொழில் உறவைப் பராமரிக்கவும் அதைத் தொடர்ந்து பாதுகாத்து வரவும் அரசு சிறந்த தொழில் உறவுக்கான பரிசுத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1978-ஆம் ஆண்டிலிருந்து பரிசு பெறுவதற்கான திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது.

தொழிலாளர் நல ஆணையரின் பொறுப்பின் கீழ் இயங்கி வந்த தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிறுவனத்தை, அரசு, ஒரு தனித் துறையாக அமைத்து, அதன் தரத்தை உயர்த்தியுள்ளது. இந்நிறுவனம் தற்போது ஆற்றிவரும் பணிகளுடன், தொழிலாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் தொழிலாளர் சட்ட நூலை தமிழில் வெளியிடும் பணியையும், பல்வேறு தொழிலாளர் சட்டங்களையும் நீதிமன்ற முடிவுகளின் மீதான குறிப்புரையுடன் தமிழில் வெளியிடும் பொறுப்பையும் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் சட்ட நூல் 'உழைப்பவர் உலகம்' என்கின்ற பெயரில் தமிழில் மாதம் இருமுறையாக வெளியிடப்படுகின்றது.

தமிழ்நாடு தொழிலாளர் நலவாரியம் ஏற்பாட்டில் தொழிலாளர்கள் தங்குவதற்கான விடுமுறை ஓய்வு இல்லம் ஒன்றினை நிறுவியுள்ளது. இவ்வாரியம் இதேபோன்று மாமல்லபுரம், குற்றாலம் போன்ற இடங்களிலும் ஓய்வு இல்லங்கள் நிறுவத் தீர்மானித்துள்ளது. இவ்வாரியம் தாம்பரம் காச நோய் மருத்துவமனையில் தொழிலாளர்களுக்குத் தனியாக 26 படுக்கைகள் கொண்ட காச நோய்ப் பகுதியைக் கட்டியுள்ளது. இவ் வாரியம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நான்கு படிப்பகங்களை நடத்தி வருகிறது. வாசகர்களின் பயனுக்காகச் செய்தித்தாள்கள், வார, மாதாந்திர இதழ்கள் வைக்கப்பட்டுள்ளன. மேலும் இவ் வாரியம் தொழிலாளர்களுக்காக மாவட்ட மண்டல மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசினை அளிக்கின்றது. ●

**கல்விச் செல்வம்' அனைவருக்கும் கிடைப்பதற்காகப் பல்வேறு பயனுள்ள பணிகளை ஆற்றி, பெருந்தொகையைச் செலவிட்டு, புதிய வரலாற்றை உருவாக்கி வருகிறது அரசு.**

தமிழ்நாட்டில் தற்போது 36,000 பள்ளிகள் உள்ளன. ஆசிரியர்கள் எண்ணிக்கை 2.5 இலட்சமாகும். பயிலும் மாணவர்கள் எண்ணிக்கை 85 இலட்சம் ஆகும்.

தமிழ்நாட்டு அரசு பட்ஜெட்டில் 25 விழுக்காடு கல்விக்குத்தான் ஒதுக்கப்படுகிறது. 1960 ஆம் ஆண்டிலிருந்து கல்விக்காகச் செலவிடப்பட்டு வந்துள்ள தொகை எந்த ஆண்டிலும் 22 சதவிகிதத்திற்கு மிகவில்லை. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் கல்விச் செலவு 25 விழுக்காட்டை எட்டியது. 1979-80 பட்ஜெட்டில் மொத்தம் ரூ. 849 கோடியில், கல்விக்கு மட்டும் ரூ. 209 கோடி செலவாகும்.

**பள்ளிக்கல்வி**

1977-78லிருந்து பள்ளிகளுக்காக ஆண்டுதோறும் தோராயமாக 1500 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

பள்ளிகளில் பல்வேறு வகுப்புகளில் உள்ள பாடச்சுமை கல்வி வல்லுநர்களைக் கலந்து மாணவர்களின் தகுதிக்கு ஏற்ற வகையில் குறைக்கப்பட்டுள்ளது.

தொடக்கப்பள்ளிகளில் மாணவர்கள் இடையில் நின்றுவிடாமல் படிக்க வகை செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடன் 1977-78 முதல் 1-3 வகுப்புகளில் மாணவர்கள் எவரும் தோல்வியுறச் செய்யப்படாமல் அனைவரும் மேல்வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றனர்.

அறிவியல் கல்வி போதனையின் தரத்தை உயர்த்த ஆண்டுதோறும் சில உயர்நிலைப் பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ரூபாய் 55 ஆயிரம் வீதம் அறிவியல் ஆய்வுக்கூட மானியம் வழங்கும் திட்டம் செயல்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 75 பள்ளிகள் பயன் பெற்றன. 1979-80ல் 25 பள்ளிகள் பயன்பெறும். 77-78ல் 'இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகள்' 6 வாங்கப்பட்டன. உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்கள் வழங்கவும் மானியம் தரப்படுகிறது.

பள்ளிகளுக்குக் கட்டட வசதி செய்ய, கூடுதலாக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. தற்போது அரசு உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள கட்டட வசதிகள், நூலக வசதிகள், ஆய்வுக் கூட வசதிகள் ஆகியவை பற்றி விரிவான கணக்கு எடுக்கப்படும். இதனடிப்படையில் வசதிகள் மிகக் குறைவாக உள்ள பள்ளிகளுக்கு உடனடி



# வளரும் கல்வித் துறை



யாக வசதிகள் செய்து தரவும் படிப்படியாக மற்ற எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா வசதிகள் பெறுமாறு திட்டங்கள் வகுக்கவும் இயலும். நிரந்தரக் கட்டடம் ஏதும் இல்லாத உயர்நிலைப் பள்ளிகளுக்கு வரும் ஆண்டில் உடனடியாக ஒரு நிரந்தரக்கட்டடம் மேலும் கட்டித் தரும் திட்டம் செயல்படுத்தப்படும்.

## மாணவர் நலன்

எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் மாணவர்கள், மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்றால் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குரிய எல்லாப் பாடங்களிலும் ஏககாலத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற நிலை முன்னர் இருந்தது. இவ்வரசு இதனைப் பரிவோடு ஆய்வு செய்து 'கம்பார்ட்மென்டல்' முறையை அமல் செய்துள்ளது. இம்முறையின் கீழ், பாடம் பாடமாக எஸ்.எஸ்.எல்.சி. யில் தேர்வு பெறுபவர்களும் மேற்படிப்புக்குச் செல்லலாம்.

முறையாகப் பள்ளிக்குச் சென்று படிக்காத இளைஞர் நன்மைக்காக ஈ.எஸ்.எல்.சி. தேர்வை 79 டிசம்பர் முதல் மீண்டும் நடத்த ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. 14 வயது முடிந்தவர்கள் இத் தேர்வை எழுதலாம்.

16 வயது முடிந்தவர்கள் ஏற்கெனவே எட்டாவது தேறியிருந்தால் தனிப்பட்ட முறையில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. எழுத அனுமதிக்கப்படுவார்கள்.

கிராமப்புற மாணவர்களுக்கான படிப்புதவித் திட்டத்தின் கீழ் இதுவரை தமிழ்நாட்டிலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஆண்டுக்கு 2 மாணவர்களுக்கு மட்டுமே புதியதாகப் படிப்புதவித் தொகைகள் வழங்கப்பட்டு வந்தன. 1978-79 லிருந்து ஒவ்வொரு ஒன்றியத்திலும் இப் படிப்புதவித் தொகையைப் புதிதாகப் பெறும் மாணவர் எண்ணிக்கை இரட்டிக்கப்பட்டது. அதாவது 2லிருந்து 4 ஆக உயர்த்தப்பட்டது.

பள்ளிப்பாடப் புத்தகங்கள் தவக்கமில்லாமலும் தடங்கலில்லாமலும் எல்லா மாணவர்களுக்கும் உரிய காலத்தில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மலிவு விலைக் காகிதத்தால் செய்யப்பட்ட நோட்டுப் புத்தகங்கள் நல்ல முறையில் மாணவர்களுக்குக் கிடைக்கும் வண்ணம் தற்போதுள்ள முறையினை மாற்றி பாடநூல் நிறுவனத்தின் மூலம் கிடைக்க வகை செய்யப்படுகிறது.

ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ இந்திய மாணவர்களிடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து கற்பிப்புக் கட்டணம் எதுவும் வசூலிக்க வேண்டாம் என்ற புதிய சலுகையை இவ்வரசு அமல் படுத்தி உள்ளது.


மைய சமையற்கூடத் திட்டம் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டு அம் மாவட்டங்களிலும் தொடக்கப்பள்ளி நண்பகல் உணவுத் திட்டம் மேம்படுத்தப்படும்.

## பள்ளி ஆசிரியர் நலன்

1973ல் ஊதிய உயர்வு கேட்டுப் போராட்டம் நடத்திய ஆசிரியர்களிடத்தில் முந்தைய அரசு கொடுமையாக நடந்ததுடன் மன்னிப்புக் கடிதங்கள் தருமாறு ஆசிரியர்களை வற்புறுத்தியது. இந்த அரசோ அந்த ஆசிரியர்களின் மன்னிப்புக் கடிதங்களை ரத்து செய்து ஆணையிட்டுள்ளது.

செகண்டரி கிரேடு தகுதி பெற்றிருந்தும் ஹையர் கிரேடு ஆசிரியர் பதவிகளில் பணி செய்து வந்த ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளில் 3,000 ஹையர் கிரேடு பதவிகள் செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இனி இவ்வாறு இத்தகைய பதவிகளை செகண்டரி கிரேடு பதவிகளாக உயர்த்தும் சலுகையை ஆண்டுதோறும் செப்டம்பர் முதல் தேதி முதல் வழங்கிட நிலையான ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

நடுநிலைப் பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாகக் காலி ஏற்படும் போது அந்தப் பணியிடங்கள்



கீழ்க்கண்ட வகையில் நிரப்பப் படும் என ஆணையிடப்பட்டுள்ளது:

குறிப்பிட்ட நடுநிலைப் பள்ளி அல்லது அந்தப் பள்ளியை நடத்தும் நிர்வாகத்தில் உள்ள மற்ற பள்ளிகள் இவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ அல்லது முதல் நிலைத் தமிழ் ஆசிரியர்களோ இருந்தால் அவர்களில் பணி மூப்பு உடையவரை இந்தப் பள்ளியில் தலைமை ஆசிரியராக நியமித்து அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.



பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களோ முதல் நிலைத் தமிழாசிரியர்களோ நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து அவர் இடைநிலை ஆசிரியர் ஊதியம் தற்போது பெற்று வந்தால் அவர்கள் அனைவருக்கும் 1.9.79 முதல் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும். இந்த முறையில் தற்போது தலைமை ஆசிரியராக இருப்பவர்கள் இவ்வாறு வருங்காலத்தில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராகவோ முதல்நிலைத் தமிழ் ஆசிரியராகவோ தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும்பொழுது ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் முதல் தேதி இவ்வாறு அவர்களின் பதவி பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும்.

நடுநிலைப் பள்ளியிலோ அந்தப் பள்ளியின் நிர்வாகத்தின் கீழோ பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர் அல்லது முதல் நிலைத் தமிழாசிரியர் அங்கு பணியில் இல்லாதபோது காலியாகும் நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடத்தை முதல்நிலைத் தமிழ் ஆசிரியர்களைக் கொண்டு நிரப்பி அவருக்குப் பட்டதாரி ஆசிரியர் ஊதியம் வழங்கப்படும்.

ஆண்டுதோறும் பள்ளிகள் வேலை செய்ய வேண்டிய மொத்த வேலை நாட்களைக் கணக்கிடும்போது தொடக்கப் பள்ளி, உயர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டங்கள் நடைபெறும் நாட்களையும் பள்ளி வேலை நாட்களாகக் கருத வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது.

உயர்நிலைப் பள்ளிகளிலும் மேல் நிலைப் பள்ளிகளிலும் பள்ளிக்கு 750-ம் அதற்கு மேலும் மாணவர் எண்ணிக்கை உள்ள பள்ளிகள் அனைத்திலும் அந் தந்தப் பள்ளியிலுள்ள ஆசிரியர்களில் பி.டி. சம்பளம் பெறும் ஆசிரியர்களுள் பணி மூப்பு மிகுதியாக உடையவர் உதவித் தலைமையாசிரியர் என அறிவிக்கப்பட்டு அவருக்கு மாதம் ரூ 25 சிறப்பூதியம் வழங்கப்படும். ஒரு பள்ளியில் உதவித் தலைமை ஆசிரியராகப் பணி செய்யும் காரணத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு உதவித் தலைமையாசிரியர் எவரும் தலைமை ஆசிரியராக நியமனம் பெற உரிமை கொண்டாட இயலாது.

அரசு ஊழியர்களைப் போல இனி ஆசிரியர்களும் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள பிற அலுவலர்களும் தங்களுடைய பணிப்பதிவேட்டின் மறுபிரதி ஒன்றைத் தாங்களே வைத்து வர அனுமதிக்கப்படுவார்கள். அதிகாரப் பூர்வமான பணிப்பதிவேட்டில் பதிவுகள் செய்யும் அதிகாரியே பணிப் பதிவேட்டின் மறு பிரதியிலும் பல்வேறு பதிவுகளுக்குக் கையொப்பம் இட்டுத் தருவார். எந்தக் காரணத்தினாலாவது மூலப் பணிப் பதிவேடு காணாமல் போய்விட்டால் பணிப்பதிவேட்டின் மறு பிரதியின் அடிப்படையில் ஓய்வு ஊதியம் வழங்கப்படும்.

ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்குவதில் ஏற்படும் கால தாமதங்களைத் தவிர்ப்பதற்காக நடைமுறைகள் திருத்தி அமைக்கப்படும். ஓய்வு ஊதியம் அனுமதிப்பதோடு அதைப் பெறுவதற்கான ஆணைகளையும் மாவட்டக் கல்வி அலுவலர்களே வழங்கிட வகை செய்யப்படும்.

20ஆண்டுப்பணி முடித்தவர்கள் தாங்கள் விரும்பினால் ஓய்வூதியத்துடன் பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்ளலாம் என்று அரசு ஊழியர்களுக்குத் தரப்பட்ட சலுகை தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளிகள், கல்லூரிகள் போன்றவற்றில்பணி ஆற்றும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் பொருந்துமெனத் தெளிவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பள்ளிக் கல்வித் துறையில் ‘ஏ’ பிரிவு, ‘பி’ பிரிவு என இரண்டு பிரிவுகள் பல ஆண்டுகளாக இருந்து வந்தன. அவற்றை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையை முந்தைய அரசு கவனிக்கவில்லை. இவ்வரசு இப்பிரச்சனையை நன்கு ஆராய்ந்து இரண்டு பிரிவுகளையும் நியாயமான முறையில் ஒருங்கிணைக்க ஆணை வெளியிட்டுள்ளது.




பலாத்காரமான பேச்சே பல சமயங்களில் பலாத்காரச் செயல்களைவிட அதிகமான தீமைகளை விளைவித்துவிடக்கூடும்!

—அண்ணல் காந்தி

அரசுப் பள்ளிகளில் முந்தைய அரசுக்காலத்தில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பி.டி. ஆசிரியர்கள் முதல் நிலைத் தமிழாசிரியர்கள் ஆகியோர் பல ஆண்டுகளாகப் பணி வரன்முறை செய்யுமாறு கோரிவந்துள்ளனர். அவர்களுக்காகத் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக் குழு மூலம் தனியாக ஒரு சிறப்புத் தேர்வு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்தேர்வு முடிந்ததும் அவர்களுடைய பணியை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் 1.4.70க்குப் பின் நியமிக்கப் பெற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்களுள் முழுத் தகுதி பெற்றவர்கள் அனைவருடைய நியமனங்களும் அவரவர் நியமன நாள் முதல் வரன்முறைப்படுத்தப்பட்டு, ஊதிய உயர்வு நிலுவைத் தொகைகளும் வழங்கப்படும்.

சிறுபான்மையினர் அல்லாத பிற தனியார் பள்ளிகள் எல்லாம் தங்கள் பணியாளர்களை வேலை வாய்ப்பகங்கள் மூலமாகத்தான் தேர்ந்து எடுத்து நியமனம் செய்ய வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. அப்பள்ளிகளில் உள்ள ஆசிரியர் பதவிகளில் 18 விழுக்காடு பதவிகளைத் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைச் சாதியினருக்கு ஒதுக்க வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

தனியார் பள்ளி நிர்வாகங்கள் சிலவற்றால் முறைகேடான வகையில் பதவி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பிற பணியாளர்கள் ஆகியோரை மீண்டும் பணியில் சேர்க்குமாறு பள்ளிக் கல்வித் துறை ஆணையிடும் பொழுது அவ்வாணைகளைச் சில நிர்வாகங்கள் செயல்படுத்த மறுக்கும் வருந்தத்தக்க நிலை இருந்து வந்துள்ளது. இனி அவ்வாறு மறுத்தால் அத்தகைய பள்ளிகளில் உள்ள பணியாளர்களுக்கு அரசே நேரடியாகச் சம்பளம் வழங்க வேண்டுமென்றும், பாதிக்கப்பட்ட ஆசிரியரை அல்லது பிற பணியாளரை அவர் பள்ளியிலிருந்து, கூடுதல் ஆசிரியர் தேவையாக உள்ள பிற பள்ளிகளுக்கு அவர் பதவியோடு சேர்த்து மாற்றிவிடவும், ஆணை வெளியிடப்பட்டுள்ளது. தனியார் பள்ளி ஆசிரியர்கள் பணிப் பாதுகாப்பில் அரசு இடையறாத நாட்டம் செலுத்தி வருகிறது.

சென்னையில் ரூ. 10 இலட்சம் செலவில் ஆசிரியர் இல்லம் கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது.


ஆசிரியர்களின் குழந்தைகளுக்குத் தொழில் படிப்புப் படிக்க ஆண்டுக்கு 80 படிப்புதவித் தொகைகள் வழங்கும் திட்டம் ஏற்பளிக்கப்பட்டுள்ளது. அத்தொகையின் மதிப்பு ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 500 ஆகும்.

## மேல் நிலைப் பள்ளிக் கல்வி:—

பத்தாண்டுக் கல்வி முறையைப் பள்ளிகளில் அமலாக்குவதற்கு முந்தைய அரசு 1972-73-ல் ஆணையிட்டு இருந்தாலும் கூட 10+2+3 என்ற கல்வி முறையில் இந்த அரசு, முக்கியமான தீர்வு காண தனிக் கவனம் செலுத்தியதோடு நிலையான நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. கிராமப்புற வளர்ச்சியை மனத்தில் கொண்டு, கல்வித் துறை நிபுணர்களைக் கலந்து ஆலோசித்து— 10+2+3 முறைக் கல்வியில் 2 வது நிலை, பள்ளிகளிலேயே இருக்க வேண்டும் என அரசு ஆணையிட்டது. 1978-79ல் 912 உயர்நிலைப் பள்ளிகளில் மேல் நிலைப் பள்ளி வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவ்வகுப்புகளில் 1,14,000 மாணவ மாணவியர் பயின்றனர். 1978 மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய 1,08,000 மாணவர்களில் 78,000 பேர் மட்டுமே கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் 1978-79ல்சேர்ந்தார்கள். ஆனால் 1978-மார்ச்சில் நடந்த 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சியில் தேறிய 1,16,000 மாணவர்களுள் 1,14,000 பேர்கள் மேல் நிலைப்பள்ளிவகுப்பில்1978-79ல் சேர்ந்தனர். உயர்நிலைப் பள்ளிக் கல்விக்கு மேலான தரத்திலுள்ள கல்வி வசதியானது, மேல் நிலைப் பள்ளிக் கல்விமுறை அமலுக்கு வந்ததன் காரணமாகச் சமுதாயத்தின் பல பிரிவினருக்கும் மிகப் பரவலாகக் கிடைத்திருக்கிறது. என்பது இதிலிருந்து தெளிவாகும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 1,14,000 பேர்களுள் 24,400 பேர் தொழில் படிப்புப் படிக்கின்றனர் என்பது மேலும் மன நிறைவு அளிப்பதாகும். மேல்நிலைப் பள்ளிகளில் தமிழிலோ சிறுபான்மை மொழிகளிலோ பயிலும் மாணவர்கள் கற்பிப்புக் கட்டணம் செலுத்த வேண்டியது இல்லை என்ற சலுகையையும் இவ்வரசு தந்துள்ளது.

மேல்நிலைப் பள்ளிகளுக்கான பல்வேறு வசதிகளைச் செய்ய இவ்வரசு மிகத் தாராளமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. 1978-79-ல் மேல்நிலைப் பள்ளிகளுக்காகச் சுமார் 1,400 கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1979-80ல் 1740 பதவிகள் ஏற்படுத்தப்படும். அரசு மேல் நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறைகளும் ஆய்வுக் கூடங்களும் மொத்தம் சுமார் 6.40 கோடி ரூபாய் செலவில் கட்டித் தரப்படுகின்றன. அப்பள்ளிகளுக்கு அறிவியல் தளவாடங்களுக்காக ரூ2 கோடிக்கு மேல் செலவிடப்படுகிறது. தனியார் மற்றும் நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வுக் கூடம் ஆகியவற்றிற்கு 40 விழுக்






காடு அரசு மானியம் வழங்கும் செலவுக்காக 79-80 பட்ஜெட்டில் ரூ. 1.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லா மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நூலகப் புத்தகங்கள் ரூ. 37 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

மேல் நிலைப் பள்ளிகளில் பல்வேறு தொழிற்பாடங்கள் கற்றுத் தரப்படுகின்றன. 709 பள்ளிகளில் தொழிற்பாட வகுப்புகள் உள்ளன. 24,400 பேர் தொழிற்பாடங்களை பயிலுகின்றனர். அனைத்திந்தியாவிலேயே மேல்நிலைப்பள்ளி நிலையில் தொழிற்பாடங்களைக் கற்றுத் தருவதில் தமிழ்நாடு முதன்மை பெற்றுள்ளது. இதனை மைய அரசு கல்வி அமைச்சர் உட்பட அனைவரும் பாராட்டி உள்ளனர்.

## முதியோர் கல்வியும் பள்ளிசாராக் கல்வியும்

முதியோர் கல்வி வளர்ச்சிக்கு முந்தைய அரசு சரியான அக்கறை காட்டவில்லை. இவ்வரசு முதியோர் கல்விக்கும், பள்ளி சாராக் கல்விக்கும் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

6 - 14 வயதுச் சிறுவர் சிறுமியருள் பள்ளியிலேயே சேராதவர்களும், சேர்ந்து ஓரிரு ஆண்டு படித்துவிட்டு நின்று விட்டவர்களும் சமுதாயத்தில் மிகுந்த வறுமையால் வாடும் பிரிவினைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அவர்கள் முறையான பள்ளிகளில் உள்ள வசதிகளை நன்கு பயன்படுத்த இயலாது. எனவே, 11-14 வயதினர் அனைவரையும் பள்ளிகளில் சேர்க்க வேண்டுமாயின் அவர்களுக்கு இசைந்த மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. அதாவது பாடத்திட்டம், பயிற்சி முறை, படிக்க வேண்டிய மொத்தக் காலவரம்பு, நாள்தோறும் பயிற்றுவிக்கும் நேரம் ஆகிய அனைத்திலும் மாற்றங்களைக் கொண்ட முறை தேவை. பள்ளி சாராக் கல்வி மையங்கள் அவர்களுக்கு இவ்வசதிகளைச் செய்கின்றன. அம்மையங்களைப் பள்ளி சாராக் கல்வித் துறை 76-77ல் 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒன்றியத்துக்கு ஒன்று வீதம் முதலில் தொடங்கியது. இம் மையங்களில் எண்ணிக்கை 1977-78ல் 2 ஆகவும், 1978-79ல் 4 ஆகவும் உயர்த்தப்பட்டது. தற்பொழுது 1496 மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இம்மையம் ஒவ்வொன்றும் 3 ஆண்டு வேலை செய்யும் 10 மாத வகுப்புகள் மூன்றை நடத்தும். ஒவ்வொரு 10 மாத வகுப்பிலும் ஒரு புதிய தொகுதி மாணவர்களுக்குப் பயிற்விக்கப்படும். இம் மையங்கள் அனைத்திலும் இப்பொழுது பயில்வோர் சுமார் 45,000 பேர் ஆவர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களில் இவ்வகுப்புகள் நடக்கின்றன. பள்ளி ஆசிரியர்கள் பள்ளி சாராக் கல்வி வகுப்புகளை மாலையில் நாள்தோறும் சுமார் 2 மணி நேரம் நடத்துகின்றனர். இதற்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 மதிப்பூதியம் பெறுகின்றனர்.

மேற்சொன்னவாறு அரசு நடத்தும் பள்ளி சாராக் கல்வி மையங்கள் தவிர, ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் சொந்தப் பணத்திலிருந்து சுமார் 780 பிற ஊர்களில் பள்ளி சாராக் கல்வி மையங்களை நடத்திவருகின்றன.

முதியோர்களுக்கு எழுத்தறிவிப்பதற்காக 780 முதல் கிராமப்புறங்களில் சுமார் 5,000க்கு மேற்பட்ட முதியோர் கல்வி மையங்கள் பல்வேறு அமைப்புகளின் கீழ் தொடங்கி நடத்தப்படும். அரசுக்கு முதியோர் கல்வி பற்றி ஆலோசனை கூற முதியோர் கல்விக்கான மாநில வாரியம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

## கல்லூரிக் கல்வி

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் கல்லூரிக் கல்விக்குச் செலவிடும் தொகை இருமடங்காகி உள்ளது. கல்லூரிக் கல்விக்கு செலவான தொகை 1975-76ல் ரூ 10 கோடி, 76-77ல் ரூ. 12 கோடி, 77-78ல் ரூ. 19கோடி 78-79ல் ரூ.24 கோடி, 79-80ல் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 22 கோடி.

பல்கலைக் கழக மானியக் குழு 1974 ஆம் ஆண்டிலேயே கல்லூரி ஆசிரியர் சம்பளங்களை உயர்த்த அப்போதைய அரசை அணுகியிருந்த போதிலும் அவ்வரசு அப்பிரச்சனையை, கவனிக்காமல், ஆசிரியர்களின் கிளர்ச்சிக்கு வழிவகுத்து வந்தது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதங்களை 1.4.1974 முதல் அமல் படுத்தியும் 1.1.1977 முதல் பணப்பயன் வழங்கியும் ஆணைகளை வெளியிட்டு அமல் படுத்தியுள்ளது.

திருச்சிராப்பள்ளியில் ஒன்றும் கோயமுத்தூரில் ஒன்றுமாக இரண்டு புதிய பல்கலைக் கழகங்களைத் தொடங்க இவ்வரசு முனைப்பான நடவடிக்கை எடுத்து வருகிறது.

1979-80 முதல் கோயமுத்தூரில் ஒன்றும் திருச்சிராப்பள்ளியில் ஒன்றுமாக இரண்டு புதிய சட்டக் கல்லூரிகள் தொடங்கப்படும்.

கல்லூரிகளுக்கு சுய ஆட்சி உரிமை தரப்பட்டுள்ள முதல் மாநிலம் தமிழ் நாடுதான். சென்னைப் பல்கலைக் கழகத்

தின் கீழ் உள்ள 6 கல்லூரிகளும் மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள 4 கல்லூரிகளும் ஆக மொத்தம் 10 கல்லூரிகளுக்கு இவ்வுரிமை தரப்பட்டுள்ளது. இதன் மூலம் அக்கல்லூரிகள் கல்வித் தரத்தை உயர்த்த பாடுபட வகை செய்யப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்களுள் பள்ளிஇறுதி வகுப்புத் தேர்வில் 60 சதவீதம் அல்லது அதற்கு மேலாக மதிப்பெண் பெறுபவர்களுக்கும், புகுமுக வகுப்பில் முதல் வகுப்பில் தேர்வு பெறுபவர்களுக்கும் ரூ. 300 உதவிப் பணம் வழங்கப்படுகிறது. அப்பிரிவினரைச் சார்ந்த கிறித்தவர்களுக்கும் இவ்வுதவிப்பணம் உண்டு. பெற்றோர் வருமானம் எவ்வளவாயிருப்பினும் இவ்வுதவிப்பணம் உண்டு. அவர்கள் தாம் விரும்பும் மேற்படிப்பை மேற்கொள்ள இது அவர்களுக்கு உதவும். தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடிகள் என்ற வகையில் அவர்களுக்குக் கிட்டும் மற்ற எல்லாச் சலுகைகளுக்கும் பண உதவிகளுக்கும் மேலாக இந்த ரூ. 300 உதவி கிட்டும்.

1977-78-ஆம் ஆண்டிலிருந்து பட்ட வகுப்புகளில் பயிலும் அரிசன வகுப்பினர், மலைச் சாதியினர் ஆகியோருக்கு (அவர்களுடைய பெற்றோர் ஆண்டு வருமானம் பற்றிக் கருதாமல) முழுச் சம்பளச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது.

கல்லூரிகளில் பட்டப்படிப்பு முதலாண்டு வகுப்பில் சேர்ந்து விட்ட மாணவர்கள் பின், பொறியியல், மருத்துவம் முதலிய கல்லூரிகளில் சேருவதற்காகவோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ கலைக் கல்லூரியை விட்டு முதல் பருவம்/முதல் 6 மாதம் முடிவதற்குள் விலகிச் சென்றால் அவர்கள் கலைக் கல்லூரியில் கட்டிய கட்டணத்தில் முதல் பருவம்/6 மாதக் கட்டணம் தவிர மீதியை அவர்களுக்குத் திருப்பித் தந்துவிட வேண்டுமென கல்லூரிகளுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக மானியக்குழு சம்பள வீதங்களை அமல் படுத்தியதோடு அல்லாமல் கல்லூரி ஆசிரியர் நலனுக்காக அரசு வேறு பல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

1.12.1977 அன்று மூன்றாண்டு அல்லது அதற்கு மேலும் பணி செய்திருந்த விளக்குநர்கள், பயிற்றுநர்கள் ஆகியோருள் அவரவர் துறையில் பட்ட மேற்படிப்பு (எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம். காம் போன்றவை) தகுதி பெற்று இருந்தவர்களுக்கெல்லாம் 1.12.77 முதல் துணைப் பேராசிரியர்கள், பதவி அளிக்கப்பட்டு அப்பதவிக்கான பல்கலைக் கழக மானியக் குழு சம்பள விகிதம் தரப்பட்டுள்ளது. இனிமேல் இந்தத் தகுதிகளை (3 அல்லது அதற்கும் அதிகமான ஆண்டுகள் பணியும், பட்ட மேற்படிப்புத் தகுதியும்) பெறுபவர்களுக்கும் இந்தச் சலுகை அவரவர் அத்தகுதியை அடையும் நாள் முதல் கிடைத்துவரும்.

பட்ட மேற்படிப்புக் கல்லூரி முதல்வருக்கு ரூ. 1200 -1900 என்ற சம்பள விகிதம் அளிக்கப்பட்டுள்ளது.

கலைக் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் பொறியியற் கல்லூரி விரிவுரையாளர்களுக்கும் ரூ. 700 -40 - 1100-50-1300 இ.பி 50-1600 என்ற சம்பள விகிதத்தில் ரூ. 1100 தொடக்க அடிப்படைச் சம்பளமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஆசிரியர்கள் முழுமையாகவும் காலத்தாழ்வின்றியும் சம்பளம் பெற்று வர வகை செய்யும் நோக்கத்துடன் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் வழங்கும் புதிய முறையை 1.6.77 முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. சம்பளம் வழங்கும் வகையில் அக் கல்லூரிகளுக்கு ஏற்படும் செலவில் நிகர பற்றாக்குறை முழுவதையும் அரசே ஏற்று வருகிறது.

பணியிலிருக்கும் பொழுது ஒருவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு ரூ. 10,000 தர வகை செய்யும் குழு ஈட்டுறுதித் திட்டம் தனியார் கல்லூரிகளுக்கும் விரிவாக்கப்படும். தனியார் கல்லூரிப் பணியாளர்களுக்கு விடுப்பு வசதிகளும் தாராளமாக்கப்பட்டுள்ளன. மருத்துவ விடுப்பு முன்னர் 12 மாதங்கள் எடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது 18 மாதங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

## நல்வழி!

**மக்களை நல்வழிப்படுத்த இயக்கம் நடத்துகிறவர்கள், முதலில் நாம் நல்வழியில் நடக்கிறோமா என்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்!**



—பேரறிஞர் அண்ணா



10+2+3 கல்வி முறையினால் கல்லூரி ஆசிரியர்கள் எவரும் பணி இழக்காதபடி அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

கல்லூரிகளில் 31.3.77 அன்று பணியிலிருந்த எந்த ஆசிரியராயினும் சரி அல்லது ஆசிரியரல்லாத பணியாளர் ஆயினும் சரி, பின்வரும் காரணங்களினால் அதாவது:—

(1) 1979-80ஆம் ஆண்டு முதல் புகுமுக வகுப்பு நீங்கி விடுவதால்


அல்லது

(2) கல்லூரிகளில் மாணவர் எண்ணிக்கை குறைந்து ஆசிரியர் வேலைப் பளு குறைவதால் பதவி இழக்க நேராதபடி பாதுகாப்பு அளிப்பதாக இவ்வரசு ஏற்கெனவே அறிவித்து இருந்தது. இதனை மேலும் விரிவாக்கி, பாட வகுப்புகள் மூடப்படுவதாலும் புதிய கல்வித் திட்டத்தை அமுல் படுத்துவதாலும் ஏற்படக்கூடிய வேலை நீக்கத்துக்கும் பாதுகாப்பு உண்டு என 1979 மார்சில் அறிவிக்கப்பட்டுள்ளது. 31.3.1977 முதல் 26.2.1979 வரையுள்ள காலத்தில், கல்லூரிகளில் நிரந்தரமான பணியிடங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கும் இப் பாதுகாப்பு விரிவாக்கப்பட்டுள்ளது. இப்பாதுகாப்பைச் செயல்படுத்த பல்கலைக் கழகங்களுடன் கலந்து புதிய பாடவகுப்புகள் தொடங்குவது, சிறப்புப் பயிற்றுவிப்பு, வகுப்பில் மாணவர் எண்ணிக்கை குறைப்பு, கல்லூரி மையத்திட்டம், மேல் படிப்புக்குக் கல்லூரி ஆசிரியர்களை அனுப்புதல் முதலிய பல வழி முறைகளிலும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

தனியார் கல்லூரிகளில் முறையின்றி வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களை நிர்வாகம் கல்வித் துறையின் ஆணைக்கு ஏற்ப திரும்ப பணியில் அமர்த்தாவிட்டால், சம்பந்தப்பட்டவர்களின் இசைவுடன் அந்த ஆசிரியரை அவருடைய பதவியோடு வேறு ஒரு கல்லூரிக்கு மாற்ற கல்வி இயக்குநருக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

## தொழில் நுட்பக் கல்வி

தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழ்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும் என்று முந்தையஅரசு பலமுறைசொல்லி வந்த போதிலும், இந்த அரசு பொறுப்பேற்றவுடனேயேஇந்தப் பிரச்சினையில் தனிக் கவனம் செலுத்தி - சென்னையில் 'பேரறிஞர் அண்ணா தொழிற் நுட்பப் பல்கலைக் கழக''த்தைத் தொடங்கியுள்ளது. கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியில் இந்தப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. கீழ்க் கண்ட நிறுவனங்களும் அந்தப் பல்கலைக் கழகத்தின் அங்கங்களாகும்.



(1) சென்னை பொறியியற் கல்லூரி நிறுவனம், குரோம்பேட்டை.

(2) கட்டடக் கலை - நகர அமைப்புப்பள்ளி, சென்னை.

(3) சென்னையிலுள்ள அழகப்பச் செட்டியார் பொறியியற் கல்லூரியைச் சார்ந்த நெசவுத்தொழில் நுட்பம், தோல் தொழில் நுட்பம், ரசாயனப் பொறியியல் ஆகிய துறைகள்.

1979-80ல் தருமபுரி மாவட்டத்தில் ஒரு பல்தொழில் நுட்பப் பயிலகம் (பாலிடெக்னிக்) புதியதாக நிறுவப்படும்.

திருச்சிராப்பள்ளியில் மைய அரசு உதவியுடன் ஜூலை 79 லிருந்து உணவுத் தொழில் கை வினைஞர்களைப் பயிற்றுவிப்பதற்கான கல்வி நிலையம் ஒன்று (புட் கிராப்ட் இன்ஸ்டியூட்) தொடங்கப்பட இருக்கிறது.

பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் மூன்று, வரும் 1979-80ஆம் ஆண்டிலிருந்து கிராமப்புற விரிவுப் பணியைத் தொடங்க இருக்கின்றன.

## விளையாட்டு

பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் விளையாட்டு வசதிகளைப் பெருக்குவதில் இவ்வரசு நாட்டம் செலுத்தி வருகிறது. 1978-79-லிருந்து உயர்நிலைப் பள்ளிஉடற் பயிற்சி ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அந்தந்தப் பள்ளி விளையாட்டுக் கட்டண நிதியிலிருந்து ஆண்டு தோறும் சீருடைப் படியாக ரூ. 50 வழங்கப்படுகிறது.

மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிப்பதற்கு என உடற்பயிற்சிக் களரிகளை சுமார் பதினைந்து பள்ளிகளில் தொடங்க ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது.

60 வயதிற்கு மேற்பட்டவர்களும் வறுமையில் வாடுபவர்களுமான விளையாட்டு வீரர்களுக்கு ஒய்வு ஊதியம் வழங்குவதற்கான திட்டத்தை இவ்வரசு முதன்முதலாக ஏற்படுத்தியுள்ளது. அத்திட்டத்தின் கீழ் மாதம் ரூ. 75 வீதம் 1.4.1979 முதல் ஒய்வூதியம் பெறுவதற்குரிய 25 விளையாட்டு வீரர்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்:

1979 சனவரியில் முதன் முதலாக பாரத சாரண சாரணியர் அமைப்பின் தேசிய சம்போரி சென்னையை அடுத்த மறைமலை நகரில் கொண்டாடப்பட்டது. இந்த தேசிய விழா முதன்முதலாகத் தமிழ்நாட்டில் நடைபெற்றது. இதற்கு இவ்வரசு செய்திருந்த ஏற்பாடுகளை அனைவரும் பாராட்டினர்.

## தமிழ் வளர்ச்சி

மாநில அரசுத் துறைகள், அலுவலகங்கள் அனைத்தும் முழுவதும் தமிழிலேயே செயல்படும் நிலையை வெகு விரைவில் கொண்டுவர வேண்டும் என்பது இவ்வரசின் கொள்கை. விதி விலக்களித்த இனங்களைத் தவிர மற்ற இனங்களுக்கு அரசு அலுவலகங்களில் தமிழையே கையாள வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதனைச் செயல்படுத்த சுணக்கம் காட்டும் அதிகாரிகள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது.

வறுமையில் உழலும் தமிழறிஞர்களுக்கு மாதந் தோறும் உதவித்தொகை வழங்கும் திட்டம் இவ்வரசால் தொடங்கப்பட்டது. முதலில் மாதம் ரூ. 100 வீதம் வழங்கப்பட்ட இவ்வுதவித் தொகை இப்பொழுது மாதம் ரூ.250 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

தமிழில் பகுதி நேர வகுப்புக்களைத் தொடங்கும் பிறமாநில பல்கலைக் கழகங்கள், பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றுள் 15க்கு ஒவ்வொன்றுக்கும் ரூ. 15,000 வீதம் மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

தந்தை பெரியார் அவர்களுடைய எழுத்துச் சீர்திருத்தத்தை அவர் நூற்றாண்டு விழாவையொட்டி இவ்வரசு செயல்படுத்தியுள்ளது.

தமிழ் நூல்களை பிற மொழிகளில் பெயர்த்து வெளியிடவும் பிற மொழி நூல்களை தமிழாக்கம் செய்து வெளியிடவும் திட்டம் வகுத்துச் செயல் படுத்த ஒரு வல்லுநர் குழுவின் உதவியுடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கம்பன், வள்ளலார் போன்ற தமிழ்ச்சான்றோர்கள் நினைவாக சென்னையில் தமிழ்க் கலைமையம் ஒன்று நூலகம், படிப்பகம், கருத்தரங்கு மன்றம் போன்ற வசதிகளுடன் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதற்காகத் தனித்துறை ஒன்று ''தமிழ்ப் பண்பாட்டு இயக்குநரின்'' கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

உமறுப்புலவர் பெயரில் இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சிக்காக மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சிப் பணியிடம் ஒன்று தொடங்க ரூ 2 இலட்சத்தை அறக்கட்டளைத் தொகையாக இவ்வரசு கொடுத்துள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாக சென்னைப் பல்கலை கழகத்தில் ரூ. 25,000 அறக்கட்டளை ஒன்றை அரசு நிறுவியுள்ளது. அத்தொகையின் வட்டியைக் கொண்டு ஆண்டுதோறும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறும்.

பாவேந்தர் பாரதிதாசன் ''விருது'' ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. ஆண்டுதோறும் தமிழ்க் கவிஞர் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்பட்டு, அவருக்குப் பதக்கம் ஒன்றும் ரூ. 10,000 ரொக்கப்பரிசும் அளிக்கப்படும். 78-க்கான விருது கவிஞர் சுரதாவுக்கு அளிக்கப்பட்டது. 1979-க் விருது மறைந்த கவிஞர்கள் வாணிதாசன் குடும்பத்துக்கும், எல். டி. சுந்தரம் குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது.

தமிழறிஞர்களையும் தமிழ்ச் சான்றோர்களையும் போற்றும் அரசுக் கொள்கையின் அடிப்படையில் திருவாளர்கள் கா. அப்பாத்துரை, தி.சு. அவினாசிலிங்கம், ஞா.தேவநேயப் பாவாணர், மூ.ப. பெரியசாமித் தூரன், வ. சுப்பையா ஆகியோருக்கு 1979-திருவள்ளுவர் நாளன்று ''செந்தமிழ்ச் செல்வர்'' என்னும் விருது வழங்கப்பட்டது.

ஐந்தாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு - கருத்தரங்கு 1980 சனவரியில் மதுரை மாநகரில் நடைபெறும். 1978ல் இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அறிஞர் அண்ணா அவர்களுடைய அரசு செய்தது போல, இந்த ஐந்தாவது மாநாட்டுக்கும் இவ்வரசு அனைத்து உதவிகளையும் செய்யும்.

## கலைப்பணிகள்

**நூலகங்கள்:**

தகுந்த நூலகக் கட்டடங்கள் உள்ள இடங்கள் போக சென்னை நகரிலுள்ள 150 வட்டங்களிலும் நூலகக் கட்டடங்கள் நல்லமுறையில் அதற்கெனத் தனியாகக் கட்டப்படும்.

சேலம் நகரில் மாவட்ட மைய நூலகத்திற்கு நவீன வசதிகள் கொண்ட ரூ. 5 லட்சம் மதிப்புள்ள கட்டிடம் கட்டப்படும்.

மாநில அரசு அலுவலர்கள் பெற்று வரும் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலச் சலுகைகள் போன்றவற்றை மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ் பணி செய்பவர்களுக்கும் விரிவாக்குவது பற்றி ஆய்வு செய்யபடுகிறது.

**தொல்பொருள் ஆய்வு:**

ஆங்காங்கு பல ஊர்களிலும் சிதறிக் கிடக்கும் சிற்பங்களையும், மதிப்புமிக்க பழைய ஓலைச் சுவடிகளையும் சேகரித்துப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றை 4 மாவட்டங்களில் மேற்கொள்ள ஏற்பளிக்கப்பட்டுள்ளது. 1979-80ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டத்தில் உள்ள அத்தகைய சிற்பங்கள் முதலியவற்றைச் சேகரித்து, தருமபுரியில் ஒரு நிலையான அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஓலைச் சுவடிகளையும் உதிரிச் சிற்பங்களையும் சேகரிக்கும் திட்டம் மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட இருக்கிறது.

**அருங்காட்சியகங்கள்:**

மாவட்டத் தலைமை இடங்கள் ஒவ்வொன்றிலும் அருங்காட்சியகம் நிறுவிட அரசு முடிவு செய்துள்ளது. இவ்வாண்டு சேலத்தில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியகத்திலுள்ள வசதிகளும் மேம்படுத்தப்படும். அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டை (1979) ஒட்டி சென்னையில் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க 1979-80ல் ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



**இசை, நடனம், நாடகம்:**

1979 ஜனவரியில் மதுரையில் ஓர் இசைக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது. (இதுவரை சென்னையில் மட்டுமே இசைக் கல்லூரி இருந்து வந்தது)


1978-79ல் தொடங்கிய ஒரு புதிய திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் தொழில் மரபுக் கேற்ப தமிழில் புதிய இசைப் பாடல்களை எழுதும் கவிஞர் ஒருவருக்கு ரூ. 5 ஆயிரம் ரொக்கமாக வழங்கப்படும். தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைந்த வகையிலும் இசை நுணுக்கங்களுக்கேற்ற வகையிலும் புதிய மெட்டுக்களை புகுத்தும் இசைவாணர் ஒருவருக்கும் இத்தகைய ரொக்கப் பரிசு ஒன்று வழங்கப்படும்.

1979ஆம் ஆண்டு திருவள்ளுவர் நாளன்று சிறந்த கலைஞர்கள் 8 பேருக்கு 'அரசவைக் கலைஞர்' என்ற விருது வழங்கப்பட்டது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 1,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு மதிப்பூதியம் வழங்கப்பெறும்.

வறுமையால் வாடும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் மேலும் மேலும் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 1979-80ல் கூடுதலாக 175 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப்படும்.

வளர்ச்சிக்கு வழிகாட்டும் வகையிலும் நிருவாகப் பணிகளில் சீரிய முறை உருவாகும் நிலையிலும் அரிய பணிகளை ஆற்றி வருகிறது வருவாய்த்துறை. அதன் வகைவகையான பணிகளில் சில :

# வளம் பெருக்கும் வருவாய்த் துறை



தமிழ்நாடு அரசின் வருவாய்த் துறைகடந்த இரண்டாண்டுகளில், ஆற்றியுள்ள பணிகள் பெரிதும் பாராட்டத்தக்கன. அப்பணிகளில் சில இங்கே விவரிக்கப் படுகின்றன.

இவ்வரசு பதவியேற்றபின் 560 அறிக்கைகள், நில உச்சவரம்புச் சட்டத்தின் 18 (1) பிரிவின் கீழ் சுமார் 12,200 ஏக்கர்களை உபரி நிலமாக அரசுடமையாக்கி வெளியிடப்பட்டுள்ளன.

உபரி நிலம் ஒப்படை பெறும் ஏழை மக்கள் சந்தை விலையை விட அதிக நிலக் கிரயம் கொடுக்க வேண்டிய நிலையினைத் தவிர்க்க, உபரி நிலங்களுக்கு அளிக்க வேண்டிய தொகை நிலவரி அடிப்படையில் மாற்றியமைக்கப்பட்டு, அதன்படி மிகச்சிறந்த நிலத்துக்கும் தொகை ஏக்கருக்கு ரூபாய் 3,500-க்கு மேற்படாமலிருக்குமாறு சட்ட விதிகள் 27-10-78 முதல் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

## நிர்வாக அமைப்புகள்

கிராமங்களிலிருந்து மாவட்டம் வரை எல்லா நிலைகளிலுமே நிர்வாகம் செம்மையாக நடைபெற ஏதுவாக அவற்றின் பரப்பளவும், எல்லைகளும் கச்சிதமாகச் சீரமைக்கப்பட வேண்டுமென இவ்வரசு கருதுகிறது. இதைச் செயற்படுத்தும் வகையில் வருவாய் ஆய்வாளர்களின் நிர்வாகத்திலுள்ள பிர்க்காக்களைச் சீரமைக்கவுள்ள அரசின் முடிவு ஏற்கெனவே நிதிஅமைச்சரின் 1979-80-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சுமார் 350 பிர்க்காக்கள் புதிதாக ஏற்படுத்தப்படவுள்ளன. 1979-80-ஆம் ஆண்டில் சுமார் 200 புதிய பிர்க்காக்கள் முதற்கட்டமாக எல்லா மாவட்டங்களிலும் மக்கள் தொகை, பரப்பு, நில்வரித் தொகை, முதலியவற்றைக் கருத்திற் கொண்டு ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

கிராமங்களையும் சீரமைக்கும் கருத்து, வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

1979-80-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதான நிதி அமைச்சரின் உரையில் 14 துணை வட்டங்கள் – வட்டங்களாக 1979-80-ல் தரமுயர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் வட்டத்தினை அம்பாசமுத்திரம்-சேரன்மகாதேவி என்று இரு வட்டங்களாக, முறையே அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு அமைக்கவும் இவ்வரசு முடிவு செய்துள்ளது.

பெரிய வருவாய்க் கோட்டங்களைச் சீரமைக்கும் திட்டத்தில் தற்போதுள்ள 49 கோட்டங்களில் , இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள, மாநிலத்திலேயே

மிகப் பெரிய கோட்டமான சிவகாசிக் கோட்டம், சிவகாசி, அருப்புக்கோட்டை என இரு கோட்டங்களாகப் பிரித்தமைக்கப்படும். இதனால் மொத்தம் தமிழ்நாட்டில் 50 கோட்டங்கள் இருக்கும். புதிய சிவகாசிக் கோட்டம், சிவகாசியைத் தலைமையிடமாகக்கொண்டு சாத்தூர், இராசபாளையம், திருவில்லிபுத்தூர்ஆகிய வட்டங்கள் அடங்கியதாகவிருக்கும். புதிய அருப்புக்கோட்டைக் கோட்டம் அருப்புக் கோட்டையினைத் தலைமையிடமாகக் கொண்ட அருப்புக்கோட்டை, விருதுநகர் வட்டங்களும், திருச்சுழி துணை வட்டமும் (இதுவும் வட்டமாகத் தரமுயாத்தப்படவுள்ளது) அடங்கியதாகவிருக்கும்.

பெரிய மாவட்டங்களைச் சீரமைப்பதில் கோயம்புத்தூர் மாவட்டத்தினை கோயம்புத்தூர், பெரியார் என இரு மாவட்டங்களாகப் பிரித்தமைக்கும் அரசின் முடிவு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய கோயம்புத்தூர் மாவட்டத்தில் கோயம்புத்தூர், அவினாசி, பல்லடம், பொள்ளாச்சி, உடுமலைப் பேட்டை ஆகிய வட்டங்களும், புதிய பெரியார் மாவட்டத்தில் ஈரோடு, பவானி, கோபிச்செட்டி பாளையம், சத்தியமங்கலம், தாராபுரம் ஆகிய வட்டங்களும் இருக்கும். கோயம்புத்தூர் அப்பெயருடைய மாவட்டத்திற்கும் ஈரோடு பெரியார் மாவட்டத்திற்கும் தலைமையிடங்களாக அமையும். இம்முடிவுகளை நடைமுறைப்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்க ஒரு தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## அலுவலர்களின் வசதிகள்

ஒரு பக்கம் நிர்வாக எல்லைகள் சீரமைக்கப்படுகையில் அதிகாரிகளின் மற்றும் அலுவலர்களின் அடிப்படை வசதிகளும் கவனிக்கப்படவேண்டுமெனும் கருத்தினையும் இவ்வரசு தீவிரமாகச் செயல்படுத்த முனைந்துள்ளது. இதன்முதற்படியாக, பிர்க்கா வருவாய் ஆய்வாளர்களுக்கு பிர்க்காத் தலைமையிடங்களில் வீடுகள் கட்டிக்கொடுக்க இவ்வரசு முடிவு செய்து, 1978-79ம் ஆண்டு முதல் இத்திட்டம் ஆக்கபூர்வமாகச் செயல்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1978-79-ல் 200 வீடுகளும், 1979-80ல் 150 வீடுகளும், 1980-81ல் 150 வீடுகளும் ஆக மூன்றாண்டுகளில் 500 வீடுகள் கட்டும் திட்டம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ரூ. 110 இலட்சம் முதலீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவ்வீடுகள் வருவாய் ஆய்வாளர்களின் நிரந்தர அலுவலகங்களாகவும் செயல்படும்.



மாவட்ட நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் தற்போதுள்ள வழிமுறைகளை ஆய்ந்து அரசுக்கு, தக்க அறிவுரைகளை வழங்குவதற்காக வருவாய் வாரிய உறுப்பினர் திரு எஸ். பி. அம்புரோஸ், ஐ.ஏ.எஸ். நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## அரசு நிலங்கள் ஒப்படை

நில ஒப்படையில் உள்ள முறைகேடுகளையும், ஒப்படை செய்யப்பட்ட பின் ஏற்பட்ட விளைவுகளால் தகுதியற்றவர்களிடம் சென்றடைந்த நிலங்களையும் கண்டுபிடிக்கவும், ஏழைகளும், தகுதியுள்ளவர்களும் ஒப்படை செய்யப்பட்ட நிலங்களைப் பெறத் தேவையான நடவடிக்கை எடுக்கவும், இதுவரை கொடுக்கப்பட்ட ஒப்படைகளை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்று 25-7-78 ஆம் நாளில் வருவாய்த்துறை ஆணை வெளியிட்டது.

அரசின் கொள்கையின்படி விலை மதிப்பீடு செய்யப்படாத நிலம், நேரடி சாகுபடியில் ஈடுபடும் நிலமற்ற ஏழை மக்களுக்கு இலவசமாக ஒப்படை செய்யப்படுகிறது. கடந்த பத்தாண்டுகளில் ஒப்படை செய்யும் பணியைத் துரிதப்படுத்த அரசு எடுத்துக்கொண்ட தனி முயற்சியின் காரணமாக 1967-68 ஆம் ஆண்டிலிருந்து 31-1-79 முடிய 8,61,853 ஏக்கர் பரப்புள்ள அரசு நிலம் 4,91,964 நபர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வடிகால் நிவாரணப் பணிகளை நிறைவேற்றுவதற்காக திருத்துறைப்பூண்டி வட்டத்தில் உள்ள சில கிராமங்கள், சாகுபடி செய்யும் நோக்கத்துடன் ஒப்படைக்கப்படுவது 1967-ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டிருந்தது. மேற்சொன்ன வட்டத்தில் 8 கிராமங்களில் இந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையுத்தரவு நீக்கப்பட்டதன் விளைவாக, நிலமில்லா ஏழைகளுக்கு நிலங்கள் ஒப்படைப்பதற்காக சுமார் 3,000 ஏக்கர் மொத்தப் பரப்புள்ள நிலங்கள் தற்போது கிடைக்கும்.

தஞ்சாவூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஜாம்பவான் ஓடை கிராமத்தில் முன்னாள் இராணுவத்தினர் நிலக் குடியேற்றக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒதுக்கப்பட்ட 742.65 ஏக்கர் நிலத்தை அரசு திரும்பப் பெற்று, பின்பு அந்நிலத்தை, சங்கத்தின் அங்கத்தினர் நிலமில்லாத ஏழையா என்றும், அவரோ அவரது குடும்பத்தினரோ நிலத்தைச் சீர்படுத்தி சாகுபடி செய்தனரா என்றும் விசாரணை செய்து ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 5 ஏக்கர் வீதம் இனாமாக ஒப்படை செய்யலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

## நகர்ப்புற நில உச்சவரம்பு

நகர்ப்புறங்களில் ஒரு சில நபர்களிடம் நிலங்கள் குவிந்திருப்பதைத் தடுத்து, குறைவாக உள்ள நகர்ப்புறப் பரப்புகளை ஒழுங்குபடுத்தி அவற்றை முறையாக மேம்படுத்த வேண்டுமென்கிற எண்ணத்துடனும், நகர நிலங்களையும் நகரமாக ஆவதற்கு வாய்ப்புள்ள பகுதிகளில் இருக்கிற நிலங்களையும் சமூக மயமாக்கும் நோக்கத்துடன் 1976-ல் குடியரசுத் தலைவரால் சட்டம் ஒன்று இயற்றப்பட்டது.

இச்சட்டத்தைச் செயல்படுத்துகையில் நடைமுறையில் கணக்கிலடங்காத சங்கடங்கள் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டி, அரசுக்கு எண்ணற்ற முறையீடுகள் வந்தன. பத்திரிகை வாயிலாகவும் இது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இச்சட்டங்களை நீக்கவும், நகர்ப்புற நிலங்களின் மீதான சமூக சீர்திருத்தத்தைக் கவனத்தில் கொண்டும் அரசு தமிழ்நாடு 1978-ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்சவரம்பு கட்டுதல் — முறைப்படுத்துதல்) சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 24/1978)க் கொண்டு வந்தது.

புதிதாக இயற்றப்பட்ட சட்டத்தின்படி சென்னை நகர

கூட்டுப் பகுதியின் பரப்பு 1,400 சதுர கிலோ மீட்டரிலிருந்து 575 சதுர கிலோ மீட்டராகவும் மற்ற நகர்ப்புற கூட்டுப் பகுதிகளைப் பொறுத்தவரையில் அவற்றின் பரப்பு, மூலப் பரப்பளவில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதியாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

## கிராமப் பணியாளர் நிர்வாகம்

அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்களும், பழங்குடியினரைச் சேர்ந்தவர்களும், கிராம அதிகாரிகள் பதவிக்குப் போட்டியிட இயலும் வகையில், அரிசன வகுப்பு, பழங்குடி யைச் சேர்ந்த விண்ணப்பதார்கள் 'கிராம அதிகாரிகளுக்கான சிறப்புத் தேர்வில்' தேர்ச்சியுறும் பொருட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான திட்டமொன்றுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. அரிசன வகுப்பு, பழங்குடியைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென்று, 2-1-1978 முதல் 3 திங்கள் காலத்திற்கு தஞ்சாவூர், மதுரை, சேலம், கடலூர் ஆகிய நான்கு இடங்களில் சிறப்புத் தேர்வுப் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு பயிற்சிக்கால உதவித் தொகை ரூ. 50 கொடுக்கப்பட்டது. கிராம அதிகாரிகள் பதவிக்குத் தகுதிவாய்ந்த அரிசன, பழங்குடியைச் சேர்ந்தவர்கள் இல்லாத குறையை இத்திட்டம் அகற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இப்பயிற்சி, கிராம அதிகாரிகள் பதவிக்காக தேர்வில் வெற்றி பெறுவதற்கு பயிற்சியாளர்களுக்குச் சிறந்த முறையில் உதவி புரியும். இதுகாறும், அரிசன பழங்குடி வகுப்பைச் சேர்ந்த 94 பேர் கிராமக் கர்ணம் பதவிக்குப் பயிற்சி அளிக்கப்பட்டனர். 82 பேர் கிராம அதிகாரி பதவிக்கு பயிற்சி அளிக்கப்பட்டனர். 1978-79-ஆம் ஆண்டில் ஐந்து இடங்களில் பயிற்சி தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணம் (1977-78, 1978-79)

1977-78-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இராமநாதபுர மாவட்டத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் வறட்சி நிலை நிலவியது. சென்னை, செங்கல்பட்டு, நீலகிரி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் எந்தப் பகுதியும் வறட்சியால் பாதிக்கப்படவில்லை.

வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு 1977-78-ல் ரூ. 862.59 இலட்சம் அனுமதியளித்தது. நிவாரணப் பணிகள் தொடங்கப்பட்டு பல கட்டங்களில் வேலைகள் நடந்து வந்தபோது 1977 நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெரு மழையினால் வெள்ளமும், புயலும் ஏற்பட்டது. இதன் காரணமாக வறட்சி எந்தப் பகுதியிலும் இல்லாத நிலைமை உருவாகியது.

1978-79-ஆம் ஆண்டிலும் மாவட்டங்களில் பரவலாக மழை பெய்ததால் வறட்சி நிலை இல்லை. ஆனாலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் சில பகுதிகளில் போதுமான மழையின்மையால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் அப்பகுதிகளுக்கு நிலவரி முதலானவற்றை தள்ளுபடி செய்தும் கடன்களை ஒத்தி போட்டும், சலுகை அளிக்கக்கோரி அம் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து கோரிக்கை வந்தது. வருவாய்த்துறை வாரியத்தின் பரிந்துரையை ஏற்று, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1388-ஆம் பசலியில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்தது.

1388-ஆம் பசலி ஆண்டில் ஒரு வயலில் 37 காசுவும் (50 சதவீதம்) அதற்குக் குறைவாகவும் விளைந்தால் நிலவரியையும், உள்ளூர் வரியையும் தள்ளுபடி செய்வது; 37 காசவும் அதற்குக் குறைவாகவும் விளைந்த நிலங்களுக்குக் கூடுதல் தீர்வை, கூடுதல் தண்ணீர்த் தீர்வை, தனித்தீர்வை தனித் தண்ணீர்த் தீர்வை, பணப் பயிர்களுக்கான தீர்வை ஆகியவற்றைத் தள்ளுபடி செய்வது:

37 காசவும் அதற்குக் குறைவாகவும் விளைந்த புஞ்சை நிலங்களுக்கு உள்ளூர் வரி தள்ளுபடி செய்வது.

ஊராட்சி ஒன்றியங்களை இம்மாதிரியான நிலங்களுக்கு உள்ளூர் செஸ் மேல்வரி விதிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்வது.

உள்ளூர் மேல்வரி இழப்புக்கு ஈடாக முன்பசலிகளில் பின்பற்றிய முறைப்படி மானியம் அளிப்பது.

உழவருக்குச் சொந்தமான நிலங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலங்களில் நிலவரி தள்ளுபடி பெறுவதற்குத் தகுதி பெற்றிருந்தால் நிலுவை நிலவரி உள்ளூர் வரி பாக்கிகள், அரசுக் கடன்கள் ஆகியவற்றின் வசூலை அடுத்த பசலிக்கு ஒத்தி போடுவது.

## இயற்கையின் சீற்றங்கள் :

1978 நவம்பர் மாதப் புயல் மழையின் மொத்த சேத மதிப்பீடு ரூ. 59.3 கோடி. நிவாரணப் பணிகளுக்கான மதிப்பீடு ரூ. 22.84 கோடி. மத்திய அரசு அளித்த திட்ட முன்பண உதவி ரூ. 10.11 கோடி. தமிழக அரசு அனுமதித்துள்ள தொகை ரூ. 13.14 கோடி. செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கடற்கரை ஓரங்களில் 25 புகலிடங்கள் கட்ட முடிவு எடுக்கப்பட்டு 2 கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. மீதமுள்ள 23 கட்டடங்கள் இவ்வாண்டு மாரிக் காலத்துக்குள் கட்டி முடிக்கப்படும்.

உயர்மட்டக்குழுவின் கோரிக்கைகளை ஏற்று, விவசாயிகளுக்குப் பல்வேறு சலுகைகளை வழங்கி, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளது.

## அன்புடைமை!


*அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை!*

*—பேரறிஞர் அண்ணா*





பொங்கியெழும் வண்ணம் புதுமை
அதை அணிபவர் ஆவார் பதுமை
வண்ணவண்ண அசல் பட்டு சரிகை
சேலைகளை தேர்ந்தெடுக்க
KHADI AND VILLAGE INDUSTRIES BOARD
TAMIL NADU
கதர் கிராமத் தொழில்
அங்காடிகள்
சென்னை மற்றும் தமிழகமெங்கும்
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்



**இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் இலட்சோப லட்சம் மக்கள் நல்வாழ்வு பெற இன்றைய அரசு தாய்ப் பாசத்தோடு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.**

# தாயகம் திரும்புவோர் நல்வாழ்வுக்கு...

பர்மா, வியட்நாம் முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோர்களைத் தவிர, சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் ஆறு இலட்சம் மக்களில் பெரும்பகுதியினருக்கு மறுவாழ்வு அளிக்கும் பொறுப்பினை இவ்வரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற பிறகு இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களில் 19,703 குடும்பங்கள் தேயிலைத் தோட்டங்களிலும், விவசாயம் மற்றும் விவசாயத் தொடர்புள்ள பண்ணைகளிலும், வேலைக்கு அமர்த்தப்பட்டு உள்ளனர். பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 526 குடும்பங்களுக்கும், வியட்நாமிலிருந்து தாயகம் திரும்பிய 191 குடும்பங்களுக்கும் வியாபாரக் கடன் உதவி செய்யப்பட்டுள்ளது. இந்த மறுவாழ்வுத் திட்டங்கள் மத்திய அரசினால் மானியமாகவும், கடனாகவும் வழங்கப்படும் நிதி உதவிகளுடன் செயல்படுத்தப்படுகின்றன. இவ்விதமாகக் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களுக்கு ரூ. 72.67 இலட்சம் மானியமாகவும் செலவிடப்பட்டுள்ளது. இதைத் தவிர ரூபாய் 1,453.46 இலட்சம் வியாபாரக் கடன் போன்ற இதர திட்டங்களை அமல்படுத்துவதற்காகக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, நடைமுறையில் இருந்துவரும் திட்டங்கள் தவிர, தாயகம் திரும்பும் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க கீழே குறிப்பிட்ட திட்டங்களும் இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

மண்டபம் முகாமில் குழாய்கள் பழுதடைந்ததால் குடிநீரும், கழிவு நீரும் கலந்து மருத்துவ மற்றும் சுகாதார நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. எனவே, அக்குழாய்களைச் செப்பனிட்டு மருத்துவ மற்றும் சுகாதார வசதிகளைப் பெருக்க ரூபாய் 88,000 செலவில் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

நெய்வேலி மாநிலப் பண்ணைக் கழகத்தில் குடியமர்த்தப்பட்ட இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோரின் நலனுக்காக ரூ. 28,000 செலவில் ஒரு தனி மருத்துவ மனை அமைக்கப்பட்டது.

ஏற்கெனவே ஒரு கிலோ அரிசி ரூ. 0.57 வீதம் மலிவு விலையில் வழங்கப்படும் திட்டத்தை, தாயகம் திரும்பியோருக்கான கூட்டுறவு வங்கி மூலம் அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் குடியமர்த்தப்படுவோருக்கும் விரிவுபடுத்தப்பட்டது.

இத்திட்டங்களின்படி குடியமர்த்தப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் அவர்கள் சொந்தமாக வீடு கட்டிக் கொள்ளும்வரை தற்காலிகமாகக் குடியிருப்பதற்காக ரூ. 250 மானியமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோரைக் குடியமர்த்த, நீலகிரி மாவட்டத்தில் ஜென்மம் நிலத்தில் 4,000 ஏக்கர் நிலப் பரப்பில் தமிழ்நாடு தேயிலைக் கழகத்தின் மூலம் தேயிலை பயிரிட ஏற்பாடு செய்யப்பட்டது.

இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர் தங்கள் குழந்தைகளுக்குக் கல்விச் சலுகை பெற, இதுவரையில் இருந்து வந்த மாதாந்திர உச்ச வருமானத்தை ரூ. 250-லிருந்து ரூ. 400-ஆக உயர்த்த மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டது.

இலங்கையில் இருந்து தாயகம் திரும்புவோருக்குத் திருச்சி மாவட்டத்தில் கொட்டப்பட்டு என்னுமிடத்தில் ரூபாய் 26.46 இலட்சம் செலவில் ஒரு புதிய இடைத்தங்கல் முகாம் ஏற்படுத்தியது.

இராணிப்பேட்டையில் தமிழ்நாடு க்ரோமேட் மற்றும் ரசாயன தொழிற்சாலையில் பணிபுரியும் தாயகம் திரும்பியோருக்காக வீடு ஒன்றுக்கு ரூ. 5,805 வீதமும் தண்ணீர் வசதிக்காக ரூ. 47,200 மாக ரூ. 9,81,045 செலவில் 159 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு 28-9-78 அன்று மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

வியாசர்பாடி ஏரியைச் சார்ந்த இடத்தைச் செம்மைப்படுத்தி ரூ. 177.63 இலட்சம் செலவில் பர்மாவிலிருந்து தாயகம் திரும்பிய 3132 குடும்பங்களுக்கு வீடு கட்டும் திட்டம் அனுமதிக்கப்பட்டது. அதற்கான அடிக்கல் தமிழக முதல்வரின் தலைமையில் மத்திய அரசு வீட்டு வசதித் துறை அமைச்சரால் 28-9-78 அன்று நாட்டப்பட்டது.

மத்தியப் பிரதேசத்தில் மாணா என்னுமிடத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த கனரக தொழில் நுட்பம் மற்றும் ஓட்டுநர் பயிற்சி நிலையம், செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள கும்மிடிப்பூண்டி முகாமிற்கு மாற்றப்பட்டு ரூபாய் 25.41 இலட்சம் செலவில் புதிய நிலையம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அந்த நிலையத்தினை 29-9-78ல் மத்திய வீட்டு வசதித் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

நெய்வேலி மாநிலப் பண்ணைக் கழகத்தில் பணியாற்றிய தாயகம் திரும்பியோருக்காக ரூ. 28.50 இலட்சம் செலவில் 600 வீடுகளைக் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களில் சுமார் 56,000 குடும்பங்களுக்கு மறுவாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டியிருயிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் 42,000 குடும்பங்களுக்குத் தமிழ்நாட்டிலும், 14,000 குடும்பங்களுக்கு இதர மாநிலங்களிலும், குறிப்பாக தென்மண்டல மாநிலங்களிலும் மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது.

இதுவரை தாயகம் திரும்பியோர்களில் 75 சதவிகிதத்தினர் வணிகக் கடன் அளிக்கப்பட்டும், மற்ற 25 சதவிகிதத்தினர் இதர திட்டங்களிலும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வணிகக் கடன் பெற்றுத் தாயகம் திரும்பியோர்களில் பெரும்பாலோர் அக்கடனைச் சரியாக உபயோகப்படுத்தாததால், அவர்களை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் குடியமர்த்துவதற்காகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

போக்குவரத்துத் துறையில் பணியாற்றிடும் தொழிலாளர் வாழ்வு வளம்பெற இந்த அரசு திட்டமிட்டுச் செயல்படுத்தியுள்ளவை எண்ணற்றவை !

# புதுப்பொலிவுபெறும் போக்குவரத்துத் துறை

தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டு, அவர்கள் ஊக்கமுடன் செயல்பட எல்லாக் கழகங்களிலும் செயலுள்ள நீண்ட காலச் சம்பளத் திட்டம், ஒரே மாதிரியான சம்பள அமைப்பு, அகவிலைப்படி, விடுப்பு விதிகள், மருத்துவ வசதிகள் முதலியன இருப்பதற்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. நீண்ட காலச் சம்பளத் திட்டம் 30 ஆண்டுகள் பணி செய்த தொழிலாளி, பணிக்காலம் முழுவதும் படிப்படியாக ஊதிய உயர்வு பெற்று குறிப்பிட்ட பதவிக்கு உயர வசதி செய்கிறது.

1978 மே மாதத்தில் ஏற்பட்ட இறுதி உடன்படிக்கையின்படி, சொற்ப ஆதாயங்களில் ஏற்பட்ட உயர்வுகளைச் சேர்த்து ஒவ்வொரு போக்குவரத்துப் பணியாளருக்கும் ரூ. 61 முதல் ரூ 69 வரை கிடைக்குமாறு வழி செய்யப்பட்டது.

1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாள் முதல், மருத்துவ விடுப்பு 6 நாட்களிலிருந்து 8 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

தொழிலாளர்களின் வசதியை மனத்திற் கொண்டு 1978-79-ல் 51 இடங்களில் சிற்றுண்டிச் சாலைகளையும், பொழுது போக்குக்கான வசதிகளுடன் கூடிய ஓய்வு அறைகளையும் போக்குவரத்துக் கழகங்கள் ஏற்படுத்தியுள்ளன.

போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த தொழிலாளர்களின் பிள்ளைகள், பள்ளி-கல்லூரிக்குச் சென்று வர இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

போக்குவரத்துக் கழகத்தில் பணியிலிருக்கும் ஒரு தொழிலாளி இறந்து விட்டால், அவருடைய குடும்பத்தினருக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு இறந்தவரின் ஆதரவில் இருந்த ஒருவருக்கு வேலை தேடித்தரும் அலுவலகத்தை அணுகாமலேயே போக்குவரத்துக் கழகத்தில் அவரது தகுதியைப் பொருத்து வேலை தர வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு மருத்துவமனைகளில் அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் இலவச உட்புற நோயாளி மருத்துவ வசதி, 1978 ஏப்ரல் திங்களிலிருந்து போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் கிடைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



போக்குவரத்துக் கழகங்கள் அனைத்திலும் குடும்ப நிதித் திட்டம் என்று ஒரு திட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் தொழிலாளர்களின் குழந்தைகளுக்குப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், பலகைகள், உதவித் தொகை முதலியன வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

எல்லாக் கழகங்களும் தங்கள் தொழிலாளர்களுக்கு மிகக்குறைவான வட்டி வீதத்தில் எளிய தவணையில் திரும்ப வசூலிக்கும் வகையில் திருமணக்கடன் அளிக்கின்றன.

எல்லாப் போக்குவரத்துக் கழகங்களும் தங்களது பணியாளர்களுக்கு முறையாகத் தைக்கப்பட்ட சீருடைகளையும், காலணிகளையும் அளிக்கின்றன. மேலும் எல்லாக் கழகங்களும் தங்கள் ஓட்டுநர்களுக்கு குளுமைக் கண்ணாடிகள் இலவசமாக வழங்குகின்றன. அத்துடன் நடப்பு ஆண்டிலிருந்து இரவு நேரங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரொட்டியும் (பன்), தேநீரும் இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

1979-80 ஆண்டில் தொழிலாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அட்கோ, எல்.ஐ.சி. மூலமாக ரூ. 634.43 இலட்சம் மதிப்புள்ள 3000 வீடுகள் தொழிலாளர்களுக்குக் கட்டித்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் பணியாளர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 1500 கி.மீ. வரை கட்டணமின்றி விரைவுப் பேருந்துகள் தவிர்த்து மற்றப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்

கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

## பொதுமக்களுக்கு ஏற்படுத்தப் பட்டுள்ள வசதிகள்

சென்ற ஆண்டில் பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகளில் 1 கி. மீட்டருக்கு 6காசு என இருந்த பயணக் கட்டணம் 5 காசாகக் குறைக்கப்பட்டது.

நீண்ட தூரப்பயணிகள் வசதியைக் கருதிப் பல்லவன் போக்குவரத்துக் கழக விரைவுப் பிரிவு, மேலும் 8 குளுமைப் பேருந்துகளை விடுவதற்கும், 70 டிலக்ஸ் வண்டிகளை விடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

பயணிகளின் வசதியைக் கருதிப் பத்து நாட்களுக்கு முன்னரே இருக்கைகளுக்கு ரிசர்வ் செய்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

1978-79ஆம் ஆண்டில் பயணிகளின் வசதிகளை மனத்திற் கொண்டு அனைத்துப் போக்குவரத்துக் கழகங்கள் 402 நிழற் குடைகள் கட்டியுள்ளன. மேலும் நடப்பு ஆண்டில் (1979-80) 600 நிழற்குடைகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

பண்டிகை நாட்களிலும், விழாக் காலங்களிலும் பொதுமக்களின் வசதியை முன்னிட்டு இட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டும் போக்குவரத்துக் கழகங்கள் தனிப் பேருந்துகள் விடுகின்றன. போக்குவரத்துக் கழகங்கள் இதுபோன்ற நாட்களில் பந்தல்கள் அமைத்தும், குடி தண்ணீர் வசதிகள் செய்தும், கழிவிடம் அமைத்தும் பொதுமக்களுக்குச் சேவை செய்கின்றன.

நகரப் பேருந்துகளில் தற்போது மாணவர்களுக்கு அளித்து வரும் கட்டணச் சலுகைகள் போன்று கிராமப்புற மாணவர்களும் பயனடையும் வகையில் 33,1/3 கட்டணச் சலுகை, வரும் கல்வி ஆண்டிலிருந்து அளிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இவ்வாண்டிலிருந்து, பார்வையற்றோர்களுக்கு வீட்டிலிருந்து மருத்துவமனை, பணிபுரியும் இடம், மற்றும் பள்ளி முதலிய இடங்களுக்குச் சென்று வர இலவசப் பயணச் சீட்டுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

''குழந்தைகள் ஆண்டை முன்னிட்டு இதுவரை மூன்று வயதுக் குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட இலவசப் பயணச் சலுகையை ஐந்து ஆண்டுகளாக உயர்த்தியுள்ளது.





தற்போது தனியார்களால் பராமரிக்கப்பட்டு வரும் பேருந்து நிலையங்களைப் படிப்படியாகத் தாமே குத்தகைக்கு எடுத்துப் (Bus Stands) பராமரிக்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம் பேருந்து நிலையங்களில் ஒய்வறைகள், சிற்றுண்டி நிலையங்கள், கழிப்பிடங்கள் முதலிய வசதிகளை நல்ல முறையில் அளிக்க இயலும்.

கிராமப் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் மாநில முழுவதற்கும் முதலமைச்சர், நிவாரண நிதியிலிருந்தும், போக்குவரத்துக் கழக நிதியிலிருந்தும், நடப்பு ஆண்டில் 50 ஆம்புலன்ஸ் வண்டிகளும், வரும் ஆண்டுகளில் 100 ஆம்புலன்ஸ் வண்டிகள் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ●

## நிலையும் நினைப்பும்!

*நிலை உயர்ந்திருந்தால்*
*நினைப்பு உயர்ந்திருக்கும்;*
*நிலை தாழ்ந்திருந்தால்*
*நினைப்புத் தாழ்ந்திருக்கும்.*
*நிலைக்குத் தகுந்தாற்*
*போல் தான் நினைப்பும்*
*இருக்கும்!*

*—பேரறிஞர் அண்ணா.*



இந்த இரண்டாண்டுகளில், அரசு அலுவலர் களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் அளவற்றவைகளாகும். அகம் மகிழத் தக்கவையாகும்

# அரசு அலுவலர்க்கு அளவற்ற சலுகைகள்

தமிழ்நாடு அரசு, கடந்த இரண்டாண்டுகளில், மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் மீதும், அரசு ஊழியர்களின் கோரிக்கைகளின் மீதும் ஊழியர்களுக்கு முன்னில்லா முறையில் பல்வேறு சலுகைகளையும் வழங்கியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய சலுகைகளை வழங்கியதால், உடனடியாக அரசுக்கு 37 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. இது நாளாவட்டத்தில் 67 கோடி ரூபாயாக உயரும் என்றும் கணக்கிடப் பட்டுள்ளது.

அரசு, ஊழியர்களுக்கு வழங்கியுள்ள சலுகைகளின் விவரம் பின்வருமாறு;

### ஊதிய விகிதங்கள் சீரமைப்பு

தமிழகத்தில் உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரின் தலைமையின் கீழ் பணிபுரியும் ஊதியக் குழுவை இந்த அரசுதான் நியமித்தது.


இந்த மூன்றாவது ஊதியக் குழு, 76 வகையாக இருந்த ஊதிய விகிதங்களை 20 ஆகக் குறைத்துச் சீரமைத்தது.

### பதவி உயர்வு ஊதியம்

ஒருவர் ஒரே பதவியில் பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தால், அந்த அலுவலருக்குத் தானாகவே பதவி உயர்வு ஊதியம் வழங்கப் படும்.

### அகவிலைப்படி

மத்திய அரசு கைக்கொள்ளும் முறையினை ஒட்டியும் மாநில அரசின் நிதி நிலையினைக் கருத்திலே கொண்டும் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு தமிழக அரசு, ஊழியர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு 1—4—79 முதல் அகவிலைப்படி அளிக்க முடிவு செய்தது. அதன்படி, ரூ. 650 வரை சம்பளம் பெறுவோருக்கு 2.5 விழுக்காடு அகவிலைப் படியும் 650 முதல் ரூ. 1600ம் அதற்கு மேலும் பெறுகிறவர்களுக்கு 1.875 விழுக்காடு அகவிலைப் படியும் வழங்க ஆணையிட்டுள்ளது. இதன்படி குறைந்த அளவு மாத அகவிலைப்படி ரூ.6 ஆகவும், அதிகப்படி அகவிலைப்படி ரூ. 30 ஆகவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ 12 கோடி ரூபாய் செலவாகும். ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ. 3 முதல் 12 வரை அகவிலைப்படி வழங்கப்படுகிறது.




''வம்புலாம் சோலை மாமதில் தஞ்சை
மாமணிக் கோயிலே''.....




பேரறிஞர் அண்ணாவின் துயிலகம்

ரம்பற்ற நீர்ப்பரப்பு வரம்பெற்ற பிச்சாவரம்
ருஞ்சுற்றுப் பயணியர்க்கு அருங்காட்சி விருந்துதரும்

துள்ளிக் குதித்துவரும் மான்கூட்டம்—அழகை
அள்ளிக் குவித்துவந்து மகிழ்வூட்டும்







உவகைதரும் உதகை ஏரியில்
ஓங்கிவரும் பூம்புனல் வெள்ளம்

### காலக்கெடு நீட்டிப்பு

பழைய அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவிகிதம் உயர்வு பெற்றுப் புதிய சம்பளம் நிர்ணயம் செய்து கொள்வதற்கான வாய்ப்பு 1—4—'78 அன்று மட்டுமே அளிக்கப்பட்டு வந்தது. அது, அலுவலர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 31—3—'79 வரை நீட்டிக்கப்பட்டது.

### மிதிவண்டி-முன்பணம்

அரசு ஊழியர்களுக்கு மிதிவண்டி (Cycle) வாங்குவதற்காக. வழக்கமாகக் கொடுக்கப்பட்டு வந்த முன்பணம் ரூ. 400லிருந்து ரூ. 600க்கு உயர்த்தப்பட்டுள்ளது

### பண்டிகை முன்பணம்

அரசு அலுவலர்களுக்கு பண்டிகை முன்பணமாக வழங்கப்பட்டுவந்த ரூ. 250ஐ இவ்வாண்டு முதல் ரூ. 300 ஆக உயர்த்தியுள்ளது.

### ஓய்வுபெறும் வயது உயர்த்தப்பட்டது!

அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயது 55 லிருந்து 58 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### உயர் கல்லூரிக் கல்விக்கு வட்டியில்லாக்கடன்

அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உயர் கல்லூரிக் கல்வி பெறுவதற்கு வட்டியிலாக் கடன் முன்பணம் வழங்கும் திட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது.

### கிராமப்புறங்களில் வீட்டு வாடகை குறைப்பு

கிராமப்புறங்களில அரசுச் சார்புடைய வீடுகளில் வசிக்கும் ஊழியர்களின் ஊதியத்திலிருந்து வீட்டு வாடகைக்காக 10 சதவிகிதம் பிடிக்கப்பட்டு வந்ததை 5 சதவிகிதமாகக் குறைத்துள்ளனர்.

### கட்டப்பட்ட வீடுவாங்கவும் முன்பணம்

அரசு அலுவலர்களுக்கு வீடுகட்டவும், வீட்டுமனைகள் வாங்கி அதில் வீடு கட்டவும், முன்னரே கட்டப்பட்ட வீடுகளை வாங்கவும் முன் பணம் வழங்கப்படுகிறது.

எட்டு ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிய அலுவலர்கள் இக்கடன் உதவி பெறத் தகுதியுடையவர் ஆவர். அரசு அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களின் அகவிலைப் படியுடன் கூடிய அடிப்படைச் சம்பளத்தைப் போன்று 60 மடங்குத் தொகை அல்லது 70,000 இவற்றில் ஏது குறைவாக உள்ளதோ அத்தொகை முன்பணமாக வழங்கப்படுகிறது.

### ஓய்வூதியம் வழங்கிட மாவட்ட மட்டத்திலேயே அதிகாரம்

ஓய்வூதியம் வழங்கும் முன் அக்கவுண்டண்ட் ஜெனரல் சரிபார்க்க வேண்டும் என்ற முறையில் ஏற்படுகிற கால தாமதத்தைத் தவிர்க்க, பொதுவாக மாவட்ட மட்டத்திலேயே ஓய்வு ஊதியம் வழங்க அதிகாரம் அளிக்கப்படும். இதன் வாயிலாக அலுவலர் ஓய்வு பெறும் அதே நாளில் ஓய்வு ஊதிய உத்தரவுகளை அவர் பெற வகை செய்யப்படும்.



**சுத்த வீரன்!**

*மூடநம்பிக்கைகளைச் சாடி, பகுத்தறிவுக் கதிரொளியைப் பரப்புபவனே சுத்தவீரன் ஆவான்!*

*—தந்தை பெரியார்*

### குடும்ப ஓய்வூதியம்

அரசு ஊழியர்களின் குறைந்த அளவு மாதாந்தர குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ. 50லிருந்து ரூ. 100 ஆக தமிழ்நாடு அரசு உயர்த்தியுள்ளது. இது, கடந்த ஏப்ரல் முதல் அமலாக்கப்பட்டுள்ளது.

அதிக அளவு மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை ரூ. 300 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தப்படும்.

பணியில் இருக்கும்போதோ அல்லது ஓய்வு பெற்ற பிறகோ அரசு ஊழியர் ஒருவர் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்தினருக்கு ஓய்வூதியத் தொகை ரூ. 50 லிருந்து ரூ. 300 வரை வழங்க, தற்போதுள்ள திட்டம் வகை செய்கிறது. இதற்கான விதிகள் தளர்த்தப்பட்டு, ஊழியர் இறப்பதற்கு முன் அல்லது ஓய்வு பெறுவதற்குமுன் வாங்கிய சம்பளத்தில் 30 சதவிகிதம் தொகையை ஓய்வூதியமாக வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

1964-ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதிக்கு முன் ஓய்வு பெற்ற ஊழியர்களின் குடும்பத்தினருக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு முடிவு செய்துள்ளது.

1964ஆம் ஆண்டு குடும்ப ஓய்வூதிய விதிகளின் கீழ் வராதவர்களுக்கு இது பொருந்தும். இந்த விதிகளின் கீழ் இறந்தவர்கள் குடும்பத்திற்கு மாதம் ரூ. 100 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

கூட்டுறவுத் துறையின் மூலம் நாட்டு மக்களுக்கு நல்ல வகையில் தொண்டாற்றி, அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து வருவதில் புதிய வரலாற்றைப் படைத்துள்ளது இந்த அரசு.

# கூட்டுறவுத் துறையில் புதிய வரலாறு

தமிழ்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் உயர்த்தும் பணியில் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து பெரும் பங்கு வகித்து வருகிறது. குறிப்பாக விவசாயக் கடன் வழங்குதல், விவசாய இடுபொருட்கள் வழங்குதல், விளை பொருட்களை விற்பதற்கு வசதி செய்தல், நுகர் பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றில் இவ்வியக்கம் பெரிதும் உதவுகின்றது.

## விவசாயக் கடன் வழங்குதல்

### குறுகிய காலக் கடன்கள்


தமிழ்நாட்டில் சாகுபடியின் கீழ் உள்ள நில உடைமைகள் 53.14 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 76 சதவீதம், அதாவது 40.48 இலட்சம் நில உடைமைகளை வைத்துள்ளவர்கள் மாநிலத்தில் உள்ள சுமார் 4740 கிராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களில் 30-4-'79 அன்றைய நிலவரப்படி உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். இச் சங்கங்கள், பயிர்ச் செலவிற்காகக் குறுகிய காலக் கடன்களைத் தொடர்ந்து வழங்கி வந்துள்ளன.

### மத்திய காலக் கடன்கள்

விவசாயிகளுக்குக் கூடுதலான வருவாய் கிடைக்கும் பொருட்டு, கறவை மாடு வாங்குதல், உழவு மாடு வாங்குதல், ஆடு வளர்த்தல், கட்டை வண்டி வாங்குதல் போன்ற காரியங்களுக்காக மத்திய காலக் கடன்களையும் இச் சங்கங்கள் வழங்கி வந்துள்ளன.

### நகைக் கடன்கள்

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதன் விளைவாக நிறுவன அமைப்பில்லாத தனியார்களிடமிருந்து கடன் கிடைப்பது குறைந்ததால் ஏற்பட்டுள்ள நிதி வசதிக் குறைவை முடிந்த அளவு தீர்ப்பதிலும் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் நகைக் கடன்கள் வழங்குவது மூலம் முக்கிய பங்கு வகித்து வந்துள்ளன. 911 விவசாயக் கடன் சங்கங்களும், மத்திய மற்றும் மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் 339 கிளைகளும், 128 கூட்டுறவு நகர வங்கிகளும் ஆக 1378 கூட்டுறவு அமைப்புகள் நகைக் கடன்களை வழங்குகின்றன. இவ்வாறு நகைக் கடன்களை வழங்கிய கூட்டுறவு அமைப்புகளின் எண்ணிக்கை 1976-'77-ல் 919 ஆக மட்டுமே இருந்தது. சவரன் (பவுன்) ஒன்றுக்கு 200 ரூபாய் வீதம் நகைக் கடன் கொடுத்து வந்த கூட்டுறவுச் சங்கங்கள், சென்ற ஆண்டுக்கு 320 ரூபாய் வீதம் கொடுத்து வந்தது. தற்பொழுது 400 ரூபாய் வீதம் கொடுத்து வருகின்றன. ஒரு நபர் பெறக் கூடிய நகை யீட்டுக் கடனின் உச்ச அளவு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.



### நீண்டகாலக் கடன்கள்

சிறுபாசனம், நிலச் சீர்திருத்தம் டிராக்டர்கள் வாங்குவது, நிலம் வாங்குவது, காபி, தேயிலை, தென்னை, திராட்சை, மா முதலிய தோட்டப் பயிர்களுக்கும், கோழி வளர்த்தல், ஆடு வளர்த்தல் போன்ற காரியங்களுக்காகவும் கூட்டுறவு நிலவள வங்கிகள் தொடர்ந்து நீண்டகாலக் கடன்களை வழங்கி வந்துள்ளன. வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் பகுதி வாரியான வளர்ச்சிக்கான திட்டங்கள் இயற்றப்பட்டு, கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 42.86 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 67 சிறுபாசனத் திட்டங்களும், 14.44 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீடு கொண்ட 54 இதர திட்டங்களும் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலஉச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் உபரி நிலம் ஒப்படை பெற்றவர்கள் தங்கள் நிலத்தை நிலவள வங்கிகளிடம் அடைமானம் வைத்து அரசு உத்தரவாதத்துடன் கிணறு வெட்டுதல், பம்பு செட்டு வைத்தல் போன்ற காரியங்களுக்காகக் கடன்கள் பெற அரசு அனுமதி அளித்துள்ளது.

### வழங்கப்பட்ட கடன்களின் அளவு

கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய குறுகிய கால, மத்திய கால, நீண்டகால மற்றும் நகைக் கடன்களின் அளவு 1976-'77-ல் சுமார் 184 கோடி ரூபாயாக இருந்தது; அது 1978-'79-ல் சுமார் 193 கோடி ரூபாயாக அதிகரித்தது. இது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:


| கடன் வகை | வழங்கப்பட்ட கடன்கள் (கோடி ரூபாயில்) | | |
|---|---|---|---|
| | 1976-77 | 1977-78 | 1978-79 |
| குறுகியகாலக் கடன்கள் | 119.33 | 120.69 | 90.23 |
| மத்தியகாலக் கடன்கள் | 5.79 | 6.44 | 12.42 |
| நகைக் கடன்கள் | 40.10 | 50.77 | 79.17 |
| நீண்டகாலக் கடன்கள் | 19.14 | 12.28 | 11.24 |
| கூடுதல் | 184.36 | 190.18 | 193.06 |

விவசாயிகள் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகையைத் திருப்பிக் கொடுக்காமல் இருந்த தன் விளைவாகக் கூட்டுறவுக் கடன் சங்கங் களில் தவணை கடந்த கடன்கள் அதிகரித்த தால் 1978-79-ல் குறுகிய காலக் கடன்கள் மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்கியதில் குறைவு ஏற்பட்டது. நடப்பு ஆண்டில் குறு கிய கால, மத்திய காலக் கடன்களாக சுமார் 160 கோடி ரூபாயும் நகைக் கடன்களாக சுமார் 90 கோடி ரூபாயும் நீண்ட காலக் கடன்களாக சுமார் 17 கோடி ரூபாயும் மொத் தம் சுமார் 267 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சிறு விவசாயிகளுக்கு உதவி :

சமுதாயத்தின் நலிந்த பிரிவைச் சார்ந்த வர்களுக்கு அதாவது சிறு விவசாயிகளுக்கும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக் கும் உதவுவதில் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் தனி அக்கறை செலுத்தி வந்துள் ளன. இவ்வகை விவசாயிகள் சாகுபடி செய் யும் நிலஉடைமைகளின் எண்ணிக்கை 42.05 இலட்சம் ஆகும். அதில் 73 சதவீதம் அதா வது30.75 இலட்சம் நில உடைமைகள் வைத் துள்ளவர்கள் விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் ஆகியுள்ளனர். **இராம விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங் கிய குறுகிய கால, மத்திய கால மொத்தக் கடன் தொகையில் 47 சதவீதம் 1976-77-ல் நலிந்த பிரிவைச் சார்ந்த விவசாயிகளுக்கு வழங்கப் பட்டது. இது 1977-78-ல் 49 சதவீத அளவிற் கும் 1978-79-ல் 53 சதவீத அளவிற்குமாக உயர்ந்துள்ளது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு விவசாயிகள் மேம் பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் கீழ் வழங்கப்படும் மத்திய காலக் கடன்கள் பெரும்பாலும் நலிந்த பிரிவைச் சார்ந்த விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டன.**

**புதுக் கிணறு வெட்டும் சிறு விவசாயி களுக்கு கிணறு ஒன்றுக்கு 500 ரூபாய்க்கு மேற் படாமல் அரசு மானியம் வழங்கிவரும் திட் டத்தின் கீழ் 1977-78 மற்றும் 1978-79-ஆம் ஆண்டுகளில் 2,000 சிறு விவசாயிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு மானியம் வழங் கப்பட்டது. மலைவாழ் வகுப்பினருக்கு, மலைப் பிரதேசங்களில் புதிய கிணறுகள்**



**வெட்டுவதற்காக, கிணறு ஒன்றுக்கு 3,500 ரூபாய்க்கு மேற்படாமல் அரசு மானியம் வழங்கும் புதுத் திட்டம் ஒன்று தொடங்கப் பட்டு 1977-78-ல் 54 கிணறுகளுக்காக 1.27 இலட்சம் ரூபாயும் 1978-79-ல் 40 கிணறு களுக்காக 1.40 இலட்சம் ரூபாயும் மானிய மாக வழங்கப்பட்டது.**

### வட்டி வீதம் குறைப்பு

**கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன் களுக்கான வட்டி வீதம் அவ்வப்போது குறைக்கப்பட்டுள்ளது.**

### இயற்கைப் பேரிடர்களிலிருந்து நிவாரணம்

**1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டு களில் வறட்சி, வெள்ளம், புயல் ஆகியவற் றால் ஏற்பட்ட மிகப் பெரிய சேதம் காரண மாக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் 28.35 கோடி ரூபாய் அளவிற்குக் குறுகிய காலக் கடன்கள், மத்தியகாலக் கடன் களாக மாற்றியமைக்கப்பட்டன. இதைத் தவிர 1976-77-ஆம் ஆண்டில் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்ட கடன் களில் 19.25 கோடி ரூபாய் அளவிற்குத் தவணைகள் நீட்டித்துத் தரப்பட்டன. நில வள வங்கிகள் வழங்கிய நீண்ட காலக் கடன் களில் 2.19 கோடி ரூபாய் அளவிற்கான தவணைகள் மாற்றியமைக்கப்பட்டன.**

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய் வதற்காக அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு வின் பரிந்துரைகளுக்கேற்ப, கூட்டுறவுக் கடன் களைப் பொறுத்த மட்டில் அரசு கீழ்க்கண்ட சலுகைகளை அறிவித்துள்ளது.

### 1. அபராத வட்டி தள்ளுபடி :

**30-6-78-ல் தவணை தவறியிருந்த எல்லா விவசாயக் கடன்கள் மீதும் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த அபராத வட்டியும் அந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்துகிற தேதி அல்லது 30-6-79 இவற் றில் எது முன்னதோ அத்தேதி வரை அபராத வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.**

**1-7-77 முதல் 30-6-78 வரை செலுத்தப் பட்ட அபராத வட்டியும், 30-6-78-ல் தவணை**

தவறிய கடன்கள் மீது செலுத்த வேண்டியிருந்த அபராத வட்டியை 30-6-78-க்குப் பிறகு செலுத்தியிருந்தால் அந்த அபராத வட்டியும் திருப்பித் தரப்படும்.

**2. சாதாரண வட்டி தள்ளுபடி :**

குறுகிய காலக் கடன்கள் ஏற்கெனவே மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டிய மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டு, 30-6-78-ல் நிலுவை நின்ற தொகையின் பேரில் அந்தத் தேதியில் செலுத்த வேண்டியிருந்த சாதாரண வட்டி தள்ளுபடி செய்யப்படும்.

மேற்படி வட்டி 30-6-78-க்குப் பிறகு செலுத்தப்பட்டிருந்தால், அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

**3. வட்டி விகிதம் குறைப்பு :**

30-6-78-ல் நிலுவையிலிருந்த மாற்றியமைக்கப்பட்ட கடன்களுக்கும், ஒருங்கிணைக்கப்பட்ட கடன்களுக்கும் 1-1-79 முதல் வட்டி விகிதம் சிறு விவசாயிகளுக்கு 10.5 சதவிதமாகவும், இதர விவசாயிகளுக்கு 12 சதவிதமாகவும் குறைக்கப்படும்.

**4. கடன்களைத் திருப்பிச் செலுத்தும் கால நீட்டிப்பு :**

ஒரு விவசாயிக்கு மாற்றியமைக்கப்பட்ட கடன்கள் 2 இருந்தால் 3 ஆண்டுகளிலும், 3 இருந்தால் 5 ஆண்டுகளிலும், 4 இருந்தால் 6 ஆண்டுகளிலும் அவற்றைத் திருப்பிச் செலுத்தும் வகையில் அக்கடன்கள் ஒருங்கிணைக்கப்படும். அவ்வாறு ஒருங்கிணைக்கப்படும் கடன்களின் ஆண்டுத் தவணைகள் 30-6-80-ல் முடியும் கூட்டுறவு ஆண்டில் தொடங்கும்.

**இரசாயன உர விற்பனை**

விவசாயக் கூட்டுறவுச் சங்கங்களும்கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும்விவசாயத்திற்குத் தேவையான உரங்களையும் இதர பொருட்களையும் சுமார் 4,500 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலம் உறுப்பினர்களுக்கும் இதர விவசாயிகளுக்கும் விற்பனை செய்து வருகின்றன. 1976-77,ல் 49.20 கோடி ரூபாய் மதிப்புள்ள 3.03 இலட்சம் டன் இரசாயன உரங்கள் விற்கப்பட்டிருக்க, 1977-78-ல் 56.34 கோடி ரூபாய் மதிப்புள்ள 3.48 இலட்சம் டன் உரங்களும், 1978-79-ல் 38.83 கோடி ரூபாய் மதிப்புள்ள 2.53 இலட்சம் டன் உரங்களும் விற்கப்பட்டன. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் தவணை கடந்த பாக்கிகள் காரணமாக 1978-79-ல் பயிர்க் கடன்களைக் குறியீட்டு அளவிற்குக் கொடுக்க முடியாமல் போனதன் காரணமாக, அவ்வாண்டில் இரசாயன உர விற்பனையின் அளவும் குறைய நேரிட்டது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், துடியலூர் கூட்டுறவு விவசாயப் பணிச் சங்கமும் 9 கூட்டுறவுச் சங்கங்களும் சேர்ந்து 170.50 இலட்சம் ரூபாய் செலவில் நெல், பருத்தி, வேர்க்கடலை, தானியங்கள், பயிறு வகைகளின் தரமான விதைகளைப் பெருக்குவதற்கான விதை மேம்பாட்டுத் திட்டம் ஒன்றைச்


*கண்ணைக் கவரும் வண்ணப் புடவைகள் !*
*கருத்திற் கிசைந்த அழகிய டிசைன்கள் !*
*அத்தனையும் ஒருங்கே அமைந்த கைத்தறி ஆடைகளை*
*வாங்கச் சிறந்த இடம் !*

## அம்மாப்பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிமிடெட்,

**எண். 532, அம்மாப்பேட்டை : : சேலம்-636003.**

**அனைவரும் வாரீர் !** **ஆதரவு தாரீர் !!**

*எங்கள் கிளைகள்*

1. தேர் நிலையம், சேலம்-1.
2. 118, ராஜ வீதி, கோவை-1.
3. 292, அக்ரஹார வீதி, ஈரோடு.
4. 257, மெயின் பஜார், ஆத்தூர்.
5. கடை வீதி, அரூர்.
6. உஸ்மான் ரோட், தி. நகர், சென்னை-17.
7. மல்லேஸ்வரம், பெங்களூர்-3.
8. செவ்வாய்பேட்டை, சேலம்-2.
9. சின்னக்கடை வீதி, திருச்சி.
10. மேல ரத வீதி, திருநெல்வேலி டவுன்.
11. ஆலங்காயம் ரோடு, திருப்பத்தூர்.
12. சென்ட்ரல் பஜார், நெய்வேலி டவுன் ஷிப்.
13. தலைமை அலுவலக சில்லறை விற்பனை நிலையம்.

மொத்த விற்பனை நிலையங்கள் :—தலைமை அலுவலகம் மற்றும் சேலம்-1.

**எங்கள் சங்க தயாரிப்புகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.**

போ. வெ. சுப்பிரமணியன்,
துணிநூல் கட்டுப்பாடு அலுவலர்/துணைச் செயலாளர்.

கொ. அ. சின்னசாமி,
துணை இயக்குநர்/தனி அலுவலர்.

செயல்படுத்துகின்றன. 11 இடங்களில் 23,000 ஏக்கர் நிலத்தில் 25,000 டன் விதைகள் இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டத்தின் 93.50 இலட்சம் ரூபாய் செலவிலான முதற்கட்டம் விரைவில் நிறைவு பெற உள்ளது. இதற்காக இத்திட்டத்தை நிறைவேற்றும் சங்கங்களுக்கு அரசு 71.21 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது.

**நுகர் பொருட்கள் விற்பனை :**

பொதுமக்களுக்கு, குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ளவர்களுக்கும் நலிந்த பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இன்றியமையாத நுகர்பொருட்கள் தரமானவையாகவும், நியாய விலையிலும் சரியான எடையுடனும் கிடைக்கச் செய்யும் பொருட்டு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் பாடுபடுகின்றன. இச்சங்கங்கள் 1977-78-லும், 1978-79-லும் செய்த சில்லறை விற்பனையின் மதிப்பு முறையே 139 கோடி ரூபாயும் 155 கோடி ரூபாயும் ஆகும்.

**கிராமக் கடைத் திட்டம் :**

அரிசி, கோதுமை, கோதுமைப் பொருட்கள், மிளகாய், புளி, தனியா, கடலைஎண்ணெய் ஆகியவை கொண்ட கடைகள் ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும் திறக்கப்படும். சில்லறைக் கடைமூலம் விநியோகம் செய்து, கிராமப் புறப் பகுதிகளில், அத்தியாவசியப்பண்டங்கள் நியாயமான விலையில் தாராளமாகக் கிடைக்க மாநிலம் முழுவதிலும், பொது விநியோக முறையை அரசு கொண்டு வந்துள்ளது. செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை சேலம், கோயமுத்தூர், நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் கிராமக் கடைகள் திறக்கும் பொறுப்பு கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், தர்மபுரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இக்கடைகள் திறக்கும் பொறுப்பு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை, கூட்டுறவுச் சங்கங்கள் மேற்சொன்ன 10 மாவட்டங்களில், 6,009 ரெவின்யூ கிராமங்களில் புதுக்கடைகளைத் திறந்துள்ளன. இது தவிர, எல்லா மாவட்டங்களிலும், 4.369 நியாய விலைக் கடைகள் முழு அளவு நுகர் பொருள் விற்பனைக் கடைகளாக மாற்றப்பட்டு எல்லா அத்தியாவசியப் பண்டங்களையும், கிராமப்புற மக்களுக்கு வழங்கி வருகின்றன. இந்த 10,378 கிராமக் கடைகள், அத்தியாவசியப் பண்டங்களை, நியாய விலைகளில் விநியோகம் செய்வதன் மூலம் கிராமப் புறங்களில் ஒரு சாதனையைச் செய்துள்ளன. அரசு ஒவ்வொரு ரெவின்யூ கிராமத்திலும், புதுக் கடைகள் திறப்பதற்கு, ஒவ்வொரு கடைக்கும் தளவாட மற்றும் இதர சாதனங்கள் வாங்குவதற்கென மூலதன மானியமாக ரூ. 1,250-ம் சிப்பந்தி மானியமாக ரூ. 2,400 நிதி உதவியாக வழங்கியுள்ளது.

**சிமெண்ட் விநியோகம் :**


1-1-79 முதல் சிமெண்ட் விநியோகத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய அளவில் ஏற்று நடத்தி வருகின்றன. எல்லா கூட்டுறவுச் மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம விற்பனைச் சங்கங்கள், பிரதம பண்டகசாலைகள், பிரதம விவசாயக் கடன் சங்கங்கள் ஆகியவையும் சிமெண்ட் விற்பனையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் 1979 ஜனவரி முதல் மூன்று மாதங்களில் மட்டும் 38,000 டன் சிமெண்டை விநியோகித்துள்ளன. கிராமப் புறங்களில் தேவையுள்ளோருக்கு சிமெண்ட் கிடைக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன.

**சிறப்பு அங்காடிகள் திறத்தல்**

1977-78 மற்றும் 1978-79 ஆண்டுகளில் மூன்று சிறப்பங்காடிகளும் 39 சிறப்புச் சிற்றங்காடிகளும் நிறுவிட அரசு நிதி உதவி வழங்கியது.

**சிறு கிளைகள், மக்களங்காடிகள் திறத்தல் :**

சமூகத்தில் நலிந்த பிரிவினருக்குச்சேவை செய்வதற்காக, மத்திய அரசு நிதியுதவியுடன்



பின்தங்கிய பகுதிகளில், சிறு கிளைகளும், மிகவும் பின்தங்கிய பகுதிகளில் மக்களங்காடிகளும் நிறுவ நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ், ஒரு சிறு கிளை ஆரம்பிக்க, 25,000 ரூபாயும் ஒரு மக்களங்காடி ஆரம்பிக்க 14,000 ரூபாயும் நிதி உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஈராண்டுகளில் 50 சிறு கிளைகளும் 85 மக்களங்காடிகளும் நிறுவிட நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**பொதுச் சமையல் நிலையங்கள்**

விடுதியில் தங்கிப் பயில வசதி இல்லாமல் கிராமப் பகுதிகளில் இருந்து வந்து கல்லூரிகளில் பயிலும் வசதியற்ற மாணவர்களுக்குக் குறைந்த விலையில் மதிய உணவு வழங்கும் பொருட்டு பொதுச் சமையல் நிலையங்களை ஏற்படுத்துவதற்காக மத்திய அரசு நிதி உதவியுடன் மாநில அரசு கல்லூரிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளுக்கு நிதி உதவி அளித்துள்ளது. கடந்த ஈராண்டுகளில் 27 கல்லூரிகளில் பொதுச் சமையல் நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**மண்டல நுகர்பொருள் விநியோக நிலையம்**

சென்னை, செங்கற்பட்டு வடஆர்க்காடு மாவட்டங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கங்



ஒவ்வொரு வரிசையிலும்
இரண்டு முதற்பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூபாய்

# 50,000

3 இரண்டாவது பரிசுகள்
ஒவ்வொன்றும் ரூபாய்

**10,000.**

5 மூன்றாவது பரிசுகள்

ஒவ்வொன்றும் ரூபாய் 5,000.
மேலும் ஏராளமான இதர பரிசுகள்.

மொத்த பரிசுகள் : 7,965.

மொத்தப் பரிசுத் தொகை
ரூ. 11,70,000.

குலுக்கல் நாள் : 20.6.79.

பரிசுச் சீட்டின் விலை ரூ. 1/-

## கோடையிலே இளைப்பாற
## குளிர் தருவும்
## தரு நிழலும் போல்
## —வறுமை
## கோடையிலே இளைப்பாற
## தமிழக அரசு
## பரிசுச் சீட்டும்
## அது தரும்
## பரிசுத் தொகையும்.




வெளியிட்டோர் :
இயக்குநர்,
தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்
சென்னை 600 002.

ELEGANT

களுக்கு நுகர்பொருட்களை விநியோகிக்க சென்னையில் 72.50 இலட்சம் ரூபாய்மொத்த மதிப்பீட்டு செலவில், மண்டல நுகர்பொருள் விநியோக நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்காக முதல் தவணையாக 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

**கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம்**

கிராமப் பகுதிகளில் மின்சாரத்தைப் பரவலாக வழங்குவதற்கும், மின் இணைப்புக் கொடுப்பதை விரைவுபடுத்தவும், ஒருங்கிணைந்த பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்த உதவும் பொருட்டும், தமிழ்நாட்டில் முதன்முதலாக கும்பகோணத்தில் ஒரு கிராமப்புற மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இச் சங்கம் சுமார் 150 இலட்சம் ரூபாய் முதலீடு கொண்டிருக்கும்.

**நலிந்த பிரிவினருக்கான கூட்டுறவுச் சங்கங்களின் பணிகள்**

நலிந்த பிரிவினருக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், அவ்வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் தம் பணிகளைப் பெருக்கிடும் பொருட்டு அவற்றிற்கு உதவி செய்தல் ஆகியவற்றிலும் அரசு அக்கறை கொண்டுள்ளது.

**மலைக் குடியினருக்கான பெரிய அளவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள்**

மலைச் சாதியினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக ஒரே இடத்தில் கடன் மற்றும் விற்பனை வசதிகளுக்கும் ஏனைய ஒருங்கிணைந்த பணிகளுக்கும் வகை செய்யும் பொருட்டு (Lamps) என அழைக்கப்படும் பெரிய அளவிலான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் இரண்டு 1977-'78-ல் அமைக்கப்பட்டன. இவை வட ஆர்க்காடு மாவட்டத்தில் புதூர் நாட்டில் ஒன்றும் சேலம் மாவட்டத்தில் அருநூத்து மலையில் மற்றொன்றுமாக அமைக்கப்பட்டன. சேலம், தர்மபுரி, வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ள மலைச்சாதியினருக்காக ஏற்கெனவே 1976-'77-ல் அமைக்கப்பட்டு இயங்கி வரும் 7 சங்கங்கள் உட்பட இவ்வகைச் சங்கங்கள் ஒன்பது உள்ளன. இவையன்றி, தென்ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில் மலைச் சாதியினர் வசிக்கும் பகுதிகளில் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்கள் மூன்று செயல்பட்டு வருகின்றன. மலைச் சாதியினரின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு இச் சங்கங்கள் கிடங்கு கட்டுவது, வாகனங்கள் வாங்குவது போன்ற காரியங்களுக்கு அரசு தாராளமாக நிதி உதவி வழங்கியுள்ளது. இச் சங்கங்களிலிருந்து மலைச் சாதி உறுப்பினர்கள் பெறும் குறுகிய கால, மத்திய காலக் கடன்களுக்கு மிகக் குறைந்த வட்டியே, அதாவது 4 சதவீத வட்டியே வசூலிக்கப்படுகிறது. சாதாரணமாக வசூலிக்கப்படும் வட்டி வீதங்களுக்கும், இந்த வட்டி வீதத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அரசு ஈடு செய்கிறது. இதுவரை 15,062 பழங்குடியினரை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ள இச் சங்கங்கள் ஆற்றிய பணிகள் வருமாறு:—

**சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவுச் சங்கம்**

சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர்களை, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்காக நியாயமற்ற முறையில் வாடகை வாங்கும் தனி முதலாளிகளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கவேண்டி, அவர்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து எளிதான வகையில் அவர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் தரத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதற்படியாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லில் ஐம்பது சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்க ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் முப்பது சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இச்சங்கத்திற்கு அரசு 80,500 ரூபாய் நிதியுதவி அளித்துள்ளது. நடப்பு ஆண்டில் இது போன்ற இன்னொரு சங்கம் ஆரம்பித்து 30 உறுப்பினர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்:**

நவீன உலர் சலவைப் பிரிவுகளை அமைத்து உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்காக சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் 33,000 ரூபாய் வீதம் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இவ்வகையில் 1977-'78-ல் இரு சங்கங்களுக்கும் 1978-'79-ல் இன்னும் இரு சங்கங்களுக்கும் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**முடிதிருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள்**

நவீன முடிதிருத்தும் நிலையங்களை அமைப்பதற்காக முடி திருத்துவோர் கூட்டுறவுச் சங்கங்கள், ஒவ்வொன்றுக்கும் 21,000 ரூபாய் வீதம் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. 1977-'78-ல் இரு சங்கங்களுக்கும் 1978-'79-ல் இன்னும் இரு சங்கங்களுக்கும் இவ்வகை நிதியுதவி அளிக்கப்பட்டது.

**தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்:**

நலிந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் பணியை தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொண்டுள்ளன. இவ்வகைச் சங்கங்களுக்கு வேலை ஒப்பந்தங்களைத் தந்தும், நிதியுதவி செய்தும், கூட்டுறவு மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்களின் சேவைகளைத் தந்தும் அரசு உதவி வருகிறது. 1977-'78-ல் ஐந்து சங்கங்களுக்கும் 1978-'79-ல் மூன்று மலை வாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அரசு உதவியது.

**கூட்டுறவுக் கல்வியும் பயிற்சியும்**


சென்னையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி சுமார் 40 இலட்ச ரூபாய் செலவில் கல்லூரிக்காகவும், விடுதிக்காகவும், கட்டடம் கட்டி வருகிறது. இதற்காக மத்திய அரசும், மாநில அரசும் ஒவ்வொன்றும் பத்து இலட்சம் ரூபாய் மானியம் வழங்கியுள்ளன.

**கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு உதவி வழங்கும் புதிய திட்டங்கள்**

கூட்டுறவுச் சங்கங்கள் தமது பணிகளைச் செம்மையாக நிறைவேற்ற உதவும் பொருட்டு அவற்றிற்கு மானியமாகவும், கடனாகவும், அவற்றின் பங்குத் தொகையில் முதலீடு செய்தும், அவற்றிற்கு துறைப்பணியாளர்களின் சேவைகளைத் தந்தும் அரசு தொடர்ந்து உதவி புரிந்து வந்துள்ளது.

# நாங்கள் அவன் வயிற்றில் அடித்துவிட்டோம்!

## பிச்சைப்பாத்திரத்தைப் பிடுங்கியதன் மூலம்.



ஆம். அவன் பிச்சைப் பாத்திரத்தைப் பிடுங்கி எறிந்து விட்டோம். நாங்கள் அவனைச் சந்திக்கும்முன்...அவன் மனிதர்களின் இறுதிச் சடங்குகளில் பாடுவான். ஒரு வறண்ட ரொட்டிக்காக, அழுது கொண்டிருக்கும் உறவினர்களின் கால்களை முத்தமிடுவான்.

### தன் கையே தனக்குதவி:

உண்மைதான். ஆயின் ஒரு பிச்சைக்காரன், ஓரடி முன் வைத்தால், மற்றவர்கள் ஓரடி பின்வாங்குவார்கள்......பிச்சைக்காரனுடன் உறவு வைத்துக்கொள்ள யார்தான் விரும்புவார்கள்?

### நாங்கள் செய்வது என்ன:

கையில் காசில்லாத இந்த ஏழைகளில் சிலர், ஒவ்வொரு நாளும் எங்களிடமிருந்து பணவுதவி பெறுகின்றனர். ஒரு தொழிலைத் தொடங்க, வீடுகட்ட, புத்தகங்கள் வாங்க, சமுதாயத்தில் அவர்களும் மனிதர்களாய் தலைநிமிர்ந்து உலவ உதவுகிறோம்.

### புதுமையான பாங்கிங் முறை:

சமுதாயத்தில் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு உதவும் இத்தகைய தன்னிகரற்ற திட்டங்களை ஸ்டேட் பாங்கின் ஒரு விசேஷ அமைப்பு உருவாக்கித் தருகிறது.

நகர்ப்புறச் சேரிகள். பள்ளிகள். மருத்துவமனைகள். சிறைச்சாலைகள். துயரால் பாதிக்கப்பட்ட பகுதிகள். ஸ்டேட் பாங்கின் நேசக் கரம் எட்டாத இடமே இல்லை.

### பண்ணைகளும் விவசாயிகளும்:

விவசாய அபிவிருத்திக் கிளைகள் கொண்ட ஒரே பாங்க் இதுதான். விவசாயத்தின் அன்றாடத் தேவைகள், புதுமையான விவசாயத் திட்டங்கள் ஆகியவற்றுக்குப் பொருளுதவி செய்ய விசேஷ பாங்குகள் உண்டு.

### ஒவ்வொரு கனவையும் நனவாக்கும திட்டம்:

உங்கள் மகனை மேற்படிப்புக்கு வெளி நாடு அனுப்ப, தொல்லையற்ற ஓய்வுகால் வாழ்வுக்கு, சொந்த வீடு கட்ட, காய்கறித் தோட்டம் அமைக்க, புத்தம் புதிதாக மின்னும் வாடகைக்கார் வாங்கிவிட, நேர்மையான வியாபாரத்திற்கு நேர்மையான முதலீடு செய்ய......

### உலகிலேயே மிகப் பெருமளவு பாங்கிங் வசதி கொண்டது:

ஏறக்குறைய 5000 அலுவலகங்கள் கொண்ட ஸ்டேட் பாங்க், தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகப் பெருமளவு பொருளுதவி செய்கிறது. அதோடு சர்வதேச பாங்கிங் துறையில் பாரதத்தின் பிரதிநிதியாகப் பெரும்பங்கு வகிக்கிறது.

நாங்கள் வளர்கிறோம். அளவில் மட்டுமல்ல. எங்கள் ஈடுபாட்டிலும்தான்.

**ஸ்டேட் பாங்க்**

**நேசக் கரம் நீட்டி நெருங்கியே வளர்வோம்**

SB: 3955A

**வீட்டு பிரச்சினை இன்றைய பிரச்சினைகளுள் முக்கிய அங்கம் வகிக்கின்றது. எல்லாருக்கும் வீடுகள் என்ற நோக்கத்துடன் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகக் கிராமங்களில் உள்ளோர் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்கள் இன்று செயல் வடிவம் பெறுகின்றன.**

தமிழ்நாட்டில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1950-ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டன.

இத்திட்டம் 73-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தோடு நிறுத்தப்பட்டது. இத்திட்டத்தின் மூலமாக ரூ. 1.30 கோடி கடனாகக் கொடுக்கப்பட்டு 1960 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன.

## கிராம வீடுகட்டும் திட்டம்

'கிராம வீடு கட்டும் திட்டம்' என்று ஒரு திட்டம் மேற்பார்வைப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) மூலமாக 1966-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்தது. இத்திட்டத்திற்கு அரசே வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்து வந்தது.

இத்திட்டத்தின் மூலமாக 1966-ஆம் ஆண்டிலிருந்து 31-3-1976 வரை 8,584 வீடுகள் ரூ. 3.59 கோடி மதிப்பிற்குக் கட்டப்பட்டு இருக்கின்றன.

மேற்படி கிராம வீடு கட்டும் திட்டத்தை, நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று அரசு முடிவெடுத்தது. 1976 ஏப்ரலில் அதற்கான உத்தரவு பிறப்பித்தது. அந்த உத்தரவுப்படி 10 வட்ட கிராமியக்கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 1976-77ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. இதை மேலும் விரிவாக்கித் தமிழ்நாட்டிலுள்ள அத்தனைக் கிராம மக்களும் வீடு கட்டிக் கொள்ள வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடன், 50 கிராமிய கோட்ட அளவிலான கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 77-78-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டன. 10 கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மூலமாகவும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தச் சங்கங்களின் உறுப்பினர்கள் வீடு கட்டுவதற்கான கடன் தொகையைத் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் வழங்குகிறது.

ஒன்றரை சென்ட் நிலம் வைத்திருப்பவர்கள் இந்தச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர்ந்து வீடு கட்டக் கடன் பெறலாம்.

ஒரு நபர் ரூ. 5,000 வரை கடன் பெறலாம். இந்தக் கடனை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். மாத வருமானம் ரூ. 300 வரை உள்ளவர்களுக்கு $9\frac{1}{4}$ வட்டியும், ரூ. 300-லிருந்து 600 வரை உள்ளவர்களுக்கு $10\frac{3}{4}$ சதம் வட்டியும் வசூலிக்கப்படுகிறது. அரிசனங்களுக்குவட்டி கிடையாது. உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு வீடு கட்டலாம். இந்தச் சங்கங்களின் மூலமாக 78-79-ஆம் ஆண்டிற்கு 20,000 கடன்கள் ரூ. 10 கோடி மதிப்பிற்கு அனுமதி வழங்கி 10,000 வீடுகள் 5 கோடி மதிப்பிற்கு 30-6-79 முடிய முடிக்கப்பட வேண்டுமென்று குறியீடு நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது.




இதுவரை 2511 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. 6580 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. சுமார் ரூ. 8 கோடி மதிப்பிற்கு 16,800 கடன் மனுக்கள் மத்திய சங்கத்திற்கு அங்கீகாரத்திற்காகப் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டிருக்கின்றன.

## அரசு உத்தரவு

தவிரவும், தமிழ்நாடு அரசு தனது 16-2-79 தேதியிட்ட ஆணையில், வருகின்ற 5 ஆண்டுகளில் ஒரு இலட்சம் வீடுகள் கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 3000-க்குள் வீடு கட்டும் அரிசனங்களுக்கும், பெருவாரியான அரிசனங்கள் குடியிருக்கும் பகுதிகளில் ரூ. 3000-க்கு மேற்படாமல் வீடு கட்டிக் கொள்ள விரும்பும் மற்ற வகுப்பினர்களுக்கும் கடன் தொகையில் 20 சதம் அல்லது ரூ. 600 இதில் எது குறைவோ அத்தொகையை மானியமாக வழங்கப்படும். மற்றும் ரூ. 5,000 வரை வீடு கட்டிக் கொள்ளக் கடனாகப் பெறும் எல்லா அரிசனங்களும் செலுத்த வேண்டிய வட்டியை அரசு செலுத்த இசைந்துள்ளது.

அரசு ஆணைப்படி 1979-80, 80-81 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 20,000 வீடுகளும், 1981-82, 1982-83 ஆண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 25,000 வீடுகள் வீதம் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

# மேலுரமிட்டு மகசூல் பெருக்குவீர்!
# மேலுரமிட மேன்மையான உரம்
# ஸ்பிக் யூரியா






* அழகிய வெண்முத்து வடிவங்கள்
* அதிகத் தழைச்சத்து 46.2%
* மிகக் குறைவான பையூரெட்-0.3% தான்
* ஆசியாவிலேயே மிகப் பெரிய, ஸ்பிக் தொழிற்சாலையில் தயாராகிறது.

CAS SPIC 4 TM 77

சிறப்பான யூரியா வேண்டுமா? **ஸ்பிக் யூரியா** என்று கேட்டுவாங்குங்கள்.

இந்த இரண்டாண்டில், பொதுப்பணித்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் புதிய சகாப்தம் படைப்பதாக அமைந்தன!





# பொதுப் பணித் துறையின் புதிய சகாப்தம்

பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவு, பெரும்பாலான அரசுத்துறைகளின் கட்டடங்களின் கட்டுமானம், பராமரிப்பு போன்றவற்றிற்குப் பொறுப்புடையதாக இருந்து வருகிறது. இவற்றின் மிகுதியான வேலைகள் மருத்துவம், கல்வி, காவல், சிறை, வேளாண்மை, கால்நடைத் துறைகளுக்குச் செய்யப்படுகின்றன. மேலும், உள்ளாட்சி அகங்கள், அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் கட்டடங்கள் கட்டுவதில் முகமை ஏற்றுச் (Agency Basis) செயல்பட்டு வருகிறது.

கடலரிப்புத் தடுப்பு வேலைகளும், கட்டடப் பிரிவின் பொறுப்பில் உள்ளது. மேற்குக் கரையில் கன்னியாகுமரியிலும், கிழக்குக் கரையின் சில இடங்களில் முக்கியமாகச் சென்னையிலும், அதனைச் சார்ந்துள்ள பகுதியிலும் கடலரிப்பு தொடர்ந்து ஏற்படும் ஒரு பிரச்சினையாகும். கன்னியாகுமரி கடலோரப்பகுதியில் ரூபாய் 250 இலட்சம் செலவில் பாறையினால் ஆகிய தடுப்புச்சுவர் கட்டுவதற்கான திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் இம்மாதிரியான கடலரிப்புத் தடுப்புத்திட்டங்களை ,அடிக்கடி பாதிக்கக்கூடிய இடங்களில் நிறைவேற்றுவது பற்றியும் அரசின் பரிசீலனையில் உள்ளது. வெள்ளத் தடுப்பு மற்றும் கடலரிப்புத் தடுப்பு வேலைகளுக்காக நீர்ப்பாசன வரவு-செலவு (1979-80) திட்டத்தில் ரூ. 150 இலட்சத்திற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மெரினா கடற்கரையை மேலும் அழகுபடுத்துவதற்காக இக்கடற்கரையின் பாதுகாப்பு, பராமரிப்பு போன்ற பொறுப்புகளை பொதுப்பணித்துறையின் கட்டடப் பிரிவின் வசம் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தேவையான துணைப் பணியாளர்களுடன் ஒரு சிறப்புக் கோட்டத்தையும் அரசு இதற்காக அனுமதித்துள்ளது.

## மின்சாரம்

### நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம்:

பன்முறை மாநில அரசு கேட்டுக்கொண்டதற்கிணங்க மைய அரசு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கான அனுமதியை 22.2.78-அன்று வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட இருக்கும் அனல் மின் திட்டம் 630 மெகா வாட்டுகள் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கும். இதற்காகும் செலவு ரூ. 214 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

### தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டம்:

மாநில அரசின் வேண்டுகோளுக்கிணங்க தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் 210 மெகா வாட் திறன் கொண்ட மூன்றாவது மின் நிலையத்தை நிறுவுவதற்கான அனுமதியை 14.9.77 அன்று மைய அரசு வழங்கியது.

### காடம்பாறை நீரேற்றுச் சேமிப்பு புனல் மின் திட்டம் :


400 மெகாவாட் திறன் கொண்ட காடம் பாறை நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டத்திற்கு மைய திட்டக்குழு 1973-ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. என்றாலும் இத்திட்டத்தின் தொழில் நுட்பங்கள் குறித்து மேலும் விவாதிக்கப்பட்டதால், இத்திட்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட வில்லை. டிசம்பர் 1977-ல் இத் திட்டப்பணிகளை மேற்கொள்ளுமாறு மின்வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்தது. மின்வாரியமும் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளை எடுத்துக்கொண்டுள்ளது.

### விவசாயக் காரியங்களுக்கான மின் கட்டணக் குறைப்பு :

செப்டம்பர் 1975-ஆம் ஆண்டில் முந்தைய அரசு வேளாண்மைக் காரியங்களுக்கான மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 12 காசிலிருந்து 16 காசாக உயர்த்தியது. விவசாயிகளின் இன்னல்களைக் குறைக்கும் பொருட்டு, இவ்வரசு பெரிய விவசாயிகளுக்கு விவசாய மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து, 14 காசாகவும், சிறு விவசாயிகளுக்கு யூனிட் ஒன்றுக்கு 16 காசிலிருந்து 12 காசாகவும் குறைத்துள்ளது. 5 ஏக்கர் வரை புன்செய் நிலமோ அல்லது 2½ ஏக்கர் நன்செய் நிலமோ வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் எனக் கருதப்படுவார்கள். விவசாயிகளுக்கு மீட்டர் வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ 5-லிருந்து ரூ 4-ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

### பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு விதி முறை:

தமிழ்நாட்டில் 12 இலட்சம் வேளாண்மைக் கிணறுகளுக்கு உரிய மின்சார விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குதல் என்று திட்டமிட்டதில் சுமார் 8.43 இலட்சம் வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் மின் இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரி வந்த விண்ணப்பங்களில் 2.5 இலட்சம் விண்ணப்பங்கள் குறித்து இன்னும் மின் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. இத் தேக்கத்தை விரைவாகப் போக்கும் நோக்கோடு, விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு வழங்குவது குறித்த கொள்கைகள், நடைமுறைகளை வாரியம் திருத்தி அமைத்துள்ளது. இதுவரையில், மின் இணைப்பு வழங்குவதற்கான திட்டங்களின் பேரில் 10 சதவீத வருவாய் கிடைக்க வேண்டும் என்று வாரியம் வலியுறுத்தி வந்தது. நடைமுறையில் கண்ட சில சிக்கல்களைக் களையும் பொருட்டும், வேளாண்மைத் துறைக்கு இயன்றவரை எல்லா வகையான ஊக்கத்தையும் அளிக்கும் நோக்கத்துடனும், மேற்சொன்ன இந்த வரையறையை வருங்காலத்தில் வலியுறுத்துவதில்லை என்று மின்வாரியம் தற்போது தீர்மானித்துள்ளது. 1978-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30-ஆம் நாள் நிலவரப்படி முடிவுறாமல் உள்ள விண்ணப்பங்கள் அனைத்தும், நிறுவன நிதி உதவி பெற்ற விண்ணப்பங்கள், வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்களின் கீழ்வரும் விண்ணப்பங்கள் ஆகியவற்றிற்கு, உயர் முன் உரிமை வழங்கப்படுவதற்கு உட்பட்டு, முன்னுரிமை அடிப்படையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு முடிவு செய்யப்படும்.




1978-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ஆம் நாளிலிருந்து புதிய விண்ணப்பங்கள் அனைத்தும் மனுச் செய்த நாளின் அடிப்படையில் மட்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு முடிவு செய்யப்படுகின்றது. இருப்பினும், கம்பம் நடுதல், மின் மாற்றிகளின் திறனை அதிகரித்தல், ஃபீடர்களை இரட்டித்தல், கண்டக்டர்களை வலுப்படுத்துதல், கம்பித் தொடரை விரிவாக்குதல், முதலிய பணிகள் இல்லாமல் இருக்கும் மனுக்கள் தனியாகப் பதிவு செய்யப்பட்டு மின் இணைப்பு நேரடியாக வழங்கப்படும்.

### குடிசைவாசிகளுக்கு மின் இணைப்பு :

200 சதுர அடிக்கு அதிகப்படாமல் மண் சுவரும், கீற்றுக்கூரையும் கொண்ட கிராமப்புற குடிசைகளுக்கு ஒரு விளக்கு மட்டும், மீட்டர் வைக்காமல் மின்சாரம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மின் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 2.50 ஆகும். வைப்புத்தொகை ரூ. 2.50. குடிசைவாசிகள் விரும்பினால் ரூ. 10- வசூலித்து-குடிசையில் ஒரு விளக்குக்கான ஒரு முனை வயரிங் செய்து ஒரு பல்பும் (40 வாட்டு) மின்வாரியம் வழங்கும்.

### இடப்பட்டியல் முறை :

உயர் அழுத்த மின் பயனீட்டாளர்களுக்கு, அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப்பட்டியல்கள், கொடுக்கும் முறை பற்றி உத்தரவு இடப்பட்டுள்ளது. மேலும், சென்னை நகர மின் துய்ப்பாளர்களுக்கு அந்தந்த இடத்திலேயே மின் கட்டணப் பட்டியல் தயார் செய்து கொடுக்கவும், பாங்குகள் மூலம் கட்டணம் செலுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின்சாரப் பயனீட்டாளர்களிடம் முந்தைய 12 மாத கால அளவில் 3 திங்கள் உயரளவு மின்பயனுக்கான கட்டணத்தொகையை பிணையமாகக் கேட்பதற்குப் பதிலாக 1½ திங்கள் உயரளவு மின் பயனுக்கான தொகையைப் பிணைய வைப்பீட்டுத் தொகையாக வசூலிக்கலாம் என்று நவம்பர் 1978-ல் ஆணையிடப்பட்டது.



**தாமே முன் வந்து தகவல் தந்தால்...**

பயனீட்டாளர்கள் ஒப்பந்தப்படி பயன் படுத்த வேண்டிய மின் சுமைக்குக் கூடுதலாக வும், அங்கீகாரமில்லாமல் பயன்படுத்துகிறார் கள். இவற்றால் மின் அழுத்தக் குறைவு ஏற்படுகிறது. இதற்கு, பயனீட்டாளர்களுக் குத் தண்டனை அளிக்க மின்வாரியத்திற்கு அதிகாரம் உள்ளது. அப்படி அதிகாரத்தைப் பயன்படுத்தினால், பயனீட்டாளர்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அவர்களுக்கு வாய்ப்பளிப்பதற்காக 31.7.79-க்கு முன் தாங் கள் உண்மையாகப் பயன்படுத்தும் மின்சுமை பற்றிய விவரங்களை அவர்களாகவே மின் வாரியத்திற்கு அளித்தால் எவ்வித நடவடிக் கையும் எடுக்காமல் அவற்றைச் சரிசெய்து உண்மையான மின்சுமைக்கு அங்கீகாரம் அளிக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டுள் ளது.

**வீடுகளுக்கு மின் இணைப்பு :**

வீடுகளுக்கு மின் இணைப்பு கேட்டு வரும் மனுக்கள், ஏற்கெனவே இருக்கும் கம்பித் தொடரிலிருந்து மின்சாரம் பெறுதல், மற் றொன்று புதிதாக கம்பித் தொடர் போட்ட பின் மின்சாரம் பெறுதல் ஆகிய இரண்டு வகையில் பரிசீலனை செய்து மனுக்கள் கிடைக்கப்பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியலின்படி மின் இணைப்பு வழங்கப்படும். இதற்கு 10 சதவீதம் வரு வாய் வற்புறுத்தப்படமாட்டாது.

**சிறுதொழில்களுக்கு ஊக்கமளித்தல் :**

குறைவழுத்த மின்சாரத்தைப் பயன் படுத்தும் தொழில்கள் அனைத்திற்கும், 10 சதவீத வருவாய் வற்புறுத்தாமல், மின் இணைப்புகள் மனுக்கள் பெற்ற தேதியின் அடிப்படையில் முன்னுரிமை அளித்து மின் சாரம் வழங்கப்படும். இம் மின் இணைப்புக் களுக்கு உள்ளாட்சி மன்றங்களிலிருந்து அல் லது இதர அதிகாரிகளிடமிருந்து உரிமங்கள் தரப்பட வேண்டும் என்ற விதியையும் ரத்து செய்ய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

**தெருவிளக்கு மற்றும் குடிநீர் பம்புசெட்டுகளுக்கு மின் வழங்கல் :**

வீதிகளுக்கு, புதிதாக விளக்குப் போடுவ தற்கும், குடிநீர் பம்பு செட்டுகளுக்கும் மின் சாரம் வழங்குவதற்கு இதுவரை உள்ள 10 சதவீத வருவாய் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**பாசனக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மின் கட்டணம் :**


130 குதிரை சக்தித் திறனுக்கு அதிக மான மின் பளு கொண்ட நீரேற்றுப் பாசன கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 1.6.1978 முதல் 35 காசு முதல், 37 காசுவரை இருந்த கட்ட ணத்தை யூனிட் ஒன்றுக்கு 14 காசு என்று குறைத்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.


தெருவிளக்குகளைப் பராமரிப்பது பற் றிய சாத்தியக் கூறுகளைப் பரிசீலனை செய்து புதிய வழிமுறைகளை அரசு வகுத்துள்ளது. இதன்படி பஞ்சாயத்துக்களுக்குத் தேவை யான பல்புகள் மற்றும் குழல் விளக்குகளை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியம் வாங்கி வழங்கும். நகராட்சிகளுக்குத் தேவையான வற்றை அவையே வாங்கிக் கொள்ளும். பழு தடைந்த பல்புகளை மாற்றியமைக்க ஒரு பல் புக்கு 50 காசு வீதமும், குழல் விளக்கு ஒன் றுக்கு ரூ. 1-வீதமும் பெற மின்வாரியத் தொழி லாளிகள் தகுதியுடையவராவர். இந்தத் தொகையை மின் வாரியம் ஊராட்சி ஒன்றி யத்திடமிருந்து வசூல் செய்யும்.


**ஐந்தாண்டுத் திட்டத்தில் உள்ள புதிய திட்டங்கள் :**

**பெரியாறு வைகை பாசனத் திட்டங்களை நவீனப்படுத்துதல் :**

பெரியாறு வைகைப் பாசனத் திட்டத் திற்கு 41.04 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத் தின் மூலம், முக்கிய கால்வாய்கள், கிளைக் கால்வாய்கள், துணைக் கால்வாய்கள் கண்ணி வாய்க்கால்கள் ஆகியவற்றின் இரு கரைகளை யும் 10 ஹெக்டேர் பகுதி வரையில் சிமிட்டிக்







கற்கலவை கொண்டு கட்டுவதன் மூலம் பெரியாறு-வைகைப் பாசனத்திட்டத்தின் தற்போதுள்ள முறையை முழுவதும் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 21 கோடி ரூபாயை வழங்க உலக வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. தற்போதுள்ள பாசனத்திற்கு நீர்கொண்டு செல்லும் முறையில் ஏற்படும் நீர் இழப்பைக் குறைக்கும் வண்ணமும், பாசனம் பெறும் பகுதியை 35 சதவீதம் அதிகரிக்கவும், அதாவது சுமார் 56,000 ஏக்கர் பரப்பளவில் அதிகரிக்கவும் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் முக்கிய ஐந்து கூறுகள் பின்வருமாறு:—**

(1) **வைகை ஆற்றுக்குக் குறுக்கே தற்போதுள்ள வைகை அணைக்குக் கீழே சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சிற்றணையிலிருந்து தற்போதுள்ள பேரணை ரெகுலேட்டர் வரை காரை பூசப்பட்ட, இணைப்புக் கால்வாய் அமைத்தல்.**

(2) தற்போதுள்ள பெரியாறு முக்கியக்கால்வாய்க்குக் கரை பூசுதல்.

(3) பெரியாறு முக்கியக் கால்வாய்த் திட்டத்தின் கீழ் விரிவாக்கக் கால்வாயைத் தோண்டுதலும், காரை பூசுதலும்.

(4) தற்போதுள்ள காரை பூசப்பட்ட திருமங்கலம் முக்கியக் கால்வாயை மேம்படுத்துதல், தற்போதுள்ள கிளைக் கால்வாய்கள், துணைக் கால்வாய்கள், தற்போது செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள விரிவாக்கக் கால்வாய்கள் ஆகியவற்றிற்குக் காரை பூசுதல்.

(5) பெரியாறு-வைகைப் பாசனத் திட்டத்தின் கீழ் வரும் சுமார் 600 ஏரிகளை மேம்படுத்துதல் முதலியன.

**1979-80-ம் ஆண்டிற்கான திட்டம்:**

**இணைப்புக் கால்வாயில் 33 கிலோ மீட்டரில் 10 கிலோ மீட்டர் தூரத்திற்கும், அதன் கிளைக் கால்வாய்களில் 40 கிலோ மீட்டரில் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கும் பணியைச் செய்து முடிப்பது என்று திட்டமிடப்பட்டுள்ளது.**

பெரியாறு முக்கியக் கால்வாயில் 1.50 கிலோ மீட்டர் தூரத்திற்கு இப்பணி முடிக்கப்பட்டுவிடும். இத்துடன் முக்கியக் கால்வாயின் நீளம் 58 கி.மீ. முழுவதும் முடிக்கப்படும். பெரியாறு கிளைக் கால்வாய்களில் மொத்தமுள்ள 109 கிலோ மீட்டர் தூரத்தில் 43 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், அதன் துணைக் கால்வாய்களில் 583 கிலோ மீட்டர் தூரத்தில் 113 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் இப்பணி முடிக்கப்படும்.

பெரியாறு விரிவாக்கக் கால்வாயில் 6.8 கிலோ மீட்டர் தூரம் வரையில் இப்பணியை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விரிவாக்கக் கால்வாயின் மொத்தத் தூரமான 59 கிலோ மீட்டரில் 25 கிலோ மீட்டர் தூரம் வரையிலும், துணைக் கால்வாய்களில் 103 கிலோ மீட்டர் தூரத்தில் 40 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் இப்பணி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருமங்கலம் முக்கிய கால்வாய்க்கு 1978-79-ல் மேம்பாடுகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. கிளைக் கால்வாய்களில் மொத்தமுள்ள 23 கிலோ மீட்டர் தூரத்தில் 12 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் விரிவாக்கக் கால்வாயில் மொத்தமுள்ள 16 கிலோ மீட்டர் தூரத்தில் 6 கிலோ மீட்டர் தூரம் வரையிலும் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கும் பணியை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. 230 ஏரிகளையும், 290 கிலோ மீட்டர் தூரமுள்ள சாலைகளையும் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80-ல் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ள தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:

| | | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|
| 1. | இணைப்புக் கால்வாய் | 2.00 |
| 2. | பெரியாறு முக்கியக் கால்வாய் | 2.95 |
| 3. | விரிவாக்கக் கால்வாய் | 1.16 |
| 4. | திருமங்கலம் முக்கியக் கால்வாய் | 0.37 |
| 5. | ஏரிகளும் சாலைகளும் | 1.22 |
| 6. | வேளாண்மை விரிவாக்கத் திட்டம் முதலியவைபோன்ற பல்வேறு பணிகள் | 2.85 |



இத்திட்டம் 1976-77-ல் தொடங்கப்பட்டது. இது 1981-82-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**காவிரி நீர்ப்பிரச்சினை :**


கருநாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் பாய்கின்ற அனைத்து மாநில ஆறு காவிரியாறு. காவிரி நீரைப் பயன்படுத்துவது குறித்து 1892-ஆம் ஆண்டு 1924-ஆம் ஆண்டுகளில் தமிழ்நாடு, மைசூர் மாநிலங்களுக்கிடையே ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப் பட்டன. தமிழ்நாட்டில் இந்த ஆற்றின் மூலம் பாசனம் பெறும் ஆயக்கட்டுகளுக்கு தொன்று தொட்டே பாசன உரிமைகள் இருந்ததால், இந்த ஒப்பந்தங்கள் அந்தப் பாசன உரிமைகளைப் பாதுகாக்கும் முறையில் இருந்தன.

கருநாடக அரசு, இந்த ஒப்பந்தங்களுக்குப் புறம்பாக காவிரியிலும், அதன் கிளை ஆறுகளிலும் பாசனத் திட்டங்களைத் நிறைவேற்றுகின்ற நடவடிக்கையினால் தமிழ்நாட்டுக்கும், கருநாடக மாநிலத்திற்கும் இடையே தகராறு எழுந்தது.

1977-ஆம் ஆண்டு மக்களாட்சி அமைக்கப்பட்ட பின்னர் தமிழக அரசால் இப்பிரச்சினை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. காவிரி நதி நீர்ப்பிரச்சினையில், தமிழ்நாட்டின் நிலையைப் பற்றி முடிவுசெய்ய முதலமைச்சர் தலைமையில் 29.8.78-ல் சட்டமன்ற சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கொப்ப இப்பிரச்சினையில் தமிழ்நாட்டின் கொள்கை என்ன என்பதைப் பற்றிய விவரமான குறிப்பு ஒன்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. 3.9.1978-ல் டில்லியிலும், 9.10.78-ல் பெங்களூரிலும், மத்திய விவசாய அமைச்சரின் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் வழிமுறை சம்பந்தப்பட்ட மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மாநாட்டில் இது குறித்து விவாதிக்கப்பட்டது. ஆனால் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. தமிழ்நாட்டிலுள்ள காவிரி ஆற்றின் ஆயக்கட்டினுடைய நலன்களை முழுமையாகப் பாதுகாக்கின்ற வகையில் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு ஆய்ந்து வருகின்றது.

**சென்னை நகருக்குக் கிருஷ்ணா ஆற்றுத் தண்ணீரைக் கொண்டு வருதல்:**

ஸ்ரீ சைலம் நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை மாநகருக்குக் குடிதண்ணீருக்காக 15 ஆயிரம் மில்லியன் கனஅடி கிருஷ்ணா ஆற்று நீரைக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் குறித்து 1978-ஆம் ஆண்டு ஜூன்



திங்கள் 15-ஆம் நாளன்று ஆந்திர மாநில முதலமைச்சரும், தமிழக முதலமைச்சரும் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வினை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. ஆந்திர அரசு தனது பகுதியில் ஆய்வினை மேற்கொள்வதற்கென நான்கு கோட்டங்களைக் கொண்ட ஒரு வட்டத்தினை அமைத்துள்ளது. அதே போன்று தமிழ்நாட்டு எல்லைக்குள் ஆய்வினை மேற்கொள்ளுவதற்கென ஒரு சிறப்புக் கோட்டம் இவ்வரசினால் அமைக்கப்பட்டுள்ளது. இரு மாநிலங்களிலும் ஆய்வு வேலைகள் மிக வேகமாக நடந்து வருகின்றன. இவ்வேலையின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதற்கென இரு மாநிலங்களின் அரசு அதிகாரிகளைக் கொண்ட ஒரு தொடர்புக் குழு (Liaison Committee) அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு அவ்வப்பொழுது, வேலைகளில் ஏற்படும் முன்னேற்றம் குறித்துப் பரிசீலிக்கறது.

**கடந்த இரண்டு ஆண்டு (1977-79) நீர்ப் பாசனத்திட்ட முன்னேற்றம் :**

கடந்த இரண்டு ஆண்டுகளில் பருவ மழை சாதகமாக இருந்ததன் பொருட்டு எல்லா நீர்த்தேக்கங்களும் முழுமையான நீரைப் பெற்றன. உண்மையில் சில இடங்களில் வெள்ளமும், வெள்ளச் சேதமும் பிரச்சினையாகவே இருந்தது. 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தை ஈடுகட்டவும் நீர்ப்பாசன அமைப்புக்களைப் பலப்படுத்தவும் எல்லாவிதமான நிவாரணப் பணிகளும் சிறந்த முறையில் செய்யப்பட்டன.

பயிர்களுக்காக பயிர்க்காலங்கள் முழுவதும் எல்லா நீர்ப்பாசன முறைகளும் குறித்த காலத்தில் திறந்துவிடப்பட்டன. நீர்த் தேக்கங்களில் கூடுதலாகச் சேமிக்கப்பட்ட நீரினால் சில முறைகளில் கூடுதல் பயிர் விளைவிக்கப்பட்டன.

பெரிய மற்றும மத்திய நீர்ப்பாசனத் திட்டங்களில் முன்னேற்றம் பொதுவாக வழக்கம் போலவே இருந்தது. இந்த ஆண்டுகளில் கூடுதலாக உள்ளடங்கிய 15.46 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பு பாசனத்திற்காக ஏற்பளிக்கப்பட்டது.

தருமபுரி மாவட்டத்தில் ஒசூர் அருகில் தென்பெண்ணையாற்றின் குறுக்காக அமைந்துள்ள கிளவரப்பள்ளி அணைத் திட்டமும் 41 கோடி ரூபாய் செலவில் பெரியாறு-வைகை நவீன மேம்பாட்டுத் திட்டமும் நல்ல முன்னேற்றத்தில் இருக்கின்றன. முக்கிய கால்வாய் முழுவதும் காரை பூசப்பட்டு, உடைந்த கரைகளிலும் காரை பூச எடுத்துக்கொள்ளப்பட இத்திட்டம் உலக வங்கியின் உதவியுடன் கூடியதாகும்.

வறட்சிப் பகுதிகளான தருமபுரி மாவட்டத்துக்கும் இராமநாதபுர மாவட்டத்திற்கும் முறையே இரண்டு திட்டங்கள் வீதம் மொத்தம் 4 புதிய திட்டங்களுக்கு சமீபத்தில் அரசு ஒப்புதல் அளித்தது. . அவை கீழ்வருமாறு:—

(1) திட்ட மதிப்பீடு (இலட்சத்தில்)


(2) பயனடையும் பரப்பளவு (ஏக்கர்களில்)

## உரிமை!

என் அபிப்பிராயத்தை மறுக்க உங்களுக்கு உரிமை உண்டு. அதே நேரத்தில்—என் அபிப்பிராயத்தை வெளியிடவும் எனக்கு உரிமை உண்டு!

—தந்தை பெரியார்.





| | | | |
|---|---|---|---|
| 1. | தும்பளஹல்லி நீர்த்தேக்கத் திட்டம், தருமபுரி மாவட்டம் | 112.70 | 2280 |
| 2. | வானியார் நீர்த்தேக்கத்திட்டம், தருமபுரி மாவட்டம் | 560.00 | 8550 |
| 3. | குள்ளூர் சந்தை நீர்த்தேக்கத்திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் | 127.00 | 2556 |
| 4. | வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் | 296.00 | 8100 |

பெரிய மற்றும் நடுத்தரப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்த போதுமான அளவு தொகை வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டது. இதன் நோக்கம் புது வேலைகளை எடுப்பதற்கு முன் கையில் உள்ள வேலைகளை முடிப்பதாகும்.

மேற்கு நோக்கி ஓடுகின்ற ஆறுகளைக் கிழக்கு திசையில் திருப்பிவிடுவதற்கான திட்டங்கள் குறித்துப் பரிசீலனை செய்ய மத்திய அரசு அமைத்த குழு ஐந்து தடவை கூடிப் பரிசீலனை செய்தது.


சென்னை மாநகருக்குக் குடிதண்ணீருக்காக கிருஷ்ணா ஆற்றில் இருந்து நீரைக் கொண்டு வரும் திட்டத்திற்கு சென்னை மாநகர எல்லைக்குள் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதிரி ஆந்திரப்பிரதேச அரசும் அதன் எல்லைக்குள் இதற்கான ஆய்வு வேலைகளை மேற்கொண்டுள்ளது. இவ்வேலைகளின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்யவும், மற்றும் பல நோக்கங்களுக்காகவும் நீரைக்கொண்டு வருவதற்கு, அவ்வப்போது கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

சிறப்புச் சிறுபாசனம் மற்றும் தூர்வாரி நில மீட்புத் திட்டம் சிறுபாசனத் திட்டத்தில் அடங்கும். இங்கும் தொடர்ந்துவரும் திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இந்த இரண்டு வருடங்களிலும் 209 திட்டங்கள் முடிக்கப்பட்டு,7127 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்துள்ளன. விரைவு செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் 875 வேலைகள் ரூ. 185 இலட்சத்தில் இந்த இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்பட்டுள்ளன.

பொது மக்களின் தேவைகளைக் கருத்தில் கொண்டும், தொழில் நுட்ப முன்னேற்றம் மற்றும் எல்லா வகைகளிலும் ஒருங்கிணைக்கப்பட்டு இந்த அரசு பொதுப்பணித் துறைக்கு ஒரு புதிய சகாப்தம் அளிக்கும் நோக்கத்தில் உறுதியாக உள்ளது. பொதுப்பணித்துறை கட்டடம் மற்றும் நீர்ப்பாசனம் என்ற துறைகளாகப் பிரிக்கும் திட்டமும் அரசின் ஆய்வில் உள்ளது.

இந்த இரண்டாண்டுக காலத்தில்-உணவுப் பொருள் உற்பத்தியில் நிறைவும், நிம்மதியும், ஆக்கமும் ஊக்கமும் கண்ட பெருமையுடையது தமிழக அரசு!

# உணவுத் துறையில் உயரிய பணிகள்



இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் உணவு முனையில் மத்திய அரசின் கொள்கை முடிவுகளின் காரணமாக, எதிர்பாராத பல திருப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன.

1976 அக்டோபர் முதற்கொண்டு, கேரளம் நீங்கலாக, ஆந்திரம், கர்நாடகம், பாண்டிச்சேரி ஆகிய பகுதிகள் உள்ளடங்கிய தென் உணவு மண்டலத்தில், தமிழ்நாடு இணைக்கப்பட்டிருந்தது. 1977ஆம் ஆண்டில் கேரளத்தையும் தென் உணவு மண்டலத்துடன் சேர்த்துக்கொள்ளலாமா என்பது குறித்து மாநில அரசுகளின் கருத்து கோரப்பட்டது.

தமிழ்நாட்டிலும் கேரளத்திலும் பெரிதும் புழங்கப்படுவது புழுங்கல் அரிசியே. ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலும் தயாரிக்கப்படுவதும் புழங்கப்படுவதும் பச்சரிசியே. இந்நிலையில் கேரளத்தைத் தென் உணவு மண்டலத்துடன் இணைத்து விட்டால், தமிழகத்தின் நலன்கள் பாதிக்கப்படும் என்று இந்த அரசு அஞ்சியது. தமிழ்நாட்டிலிருந்து புழுங்கல் அரிசி பெருமளவு கேரளத்திற்குச் சென்றுவிட்டால், அதற்கு ஈடுசெய்யும் அளவுக்கு ஆந்திரம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களிலிருந்து புழுங்கல் அரிசி வருவதற்கு வாய்ப்பு இராது என்பதையும், ஆகவே தமிழகத்தின் உணவு நிலைமை பாதிக்கப்படும் என்பதையும் எடுத்துக்காட்டி, அதுவரை இருந்ததுபோலவே, தென் உணவு மண்டல ஏற்பாடு தொடர்ந்து இயங்கலாம் என்ற கருத்தை இந்த அரசு, மத்திய அரசிடம் வற்புறுத்தியது.

**சீரிய வெற்றி**


இக்கருத்துப் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த நேரத்திலேயே, மாநில அரசைக் கலக்காமலும், மாநில அரசுக்கு எந்தவிதமான முன்னறிவிப்பும் இல்லாமலும் நாடு முழுவதையும் ஒரே உணவு மண்டலமாக அமைத்து மத்திய அரசு 1977 அக்டோபரில் ஆணையிட்டது. சாதாரண பருவ காலத்தில் தன்னுடைய அரிசித் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவுக்கு உற்பத்தியைப் பெற்றிருந்த தமிழ்நாடு, இந்த ஏற்பாட்டினால் பற்றாக்குறை மாநிலமாக ஆகி விடுமோ என்ற அச்சத்தையும், இதன் விளைவுகள் தமிழகத்திற்குப் பாதகமாக அமையக் கூடும் என்ற கவலையையும், தமிழக அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்தது. ஆயினும், அகில இந்திய உணவுக் கொள்கை அடிப்படையில் எடுக்கப்பட்டுள்ள இந்தக் கொள்கை முடிவைத் தமிழகமும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எடுத்துக் காட்டி, இதனால் தமிழகத்திற்குப் பாதிப்பு வராமல் பார்த்துக்கொள்ள மத்திய அரசும் உதவும் என்ற உறுதிமொழி கூறப்பட்டதன்பேரில், மத்திய அரசு முடிவெடுத்து அறிவித்த இந்தப் புதிய ஏற்பாட்டினை முழு மனத்துடன் செயல்படுத்தத் தமிழக அரசு முன்வந்தது. பல ஆண்டுகளாகத் தனி உணவு மண்டலமாகவும், 1976 அக்டோபருக்குப் பின்பு கேரளம் நீங்கலாகத் தென் மண்டலத்தின் ஒரு பகுதியாகவும் இயங்கி வந்த தமிழ்நாட்டில், நாடு முழுவதையும் பொது உணவு மண்டலமாக அறிவித்ததனால் என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை அறுதியிட்டுக் கூற இயலாத நிலை இருந்தது.

இருந்தும் கூடத் தமிழகத்தின் உணவு நிலையைச் சீராகச் சமாளிக்க முடிந்துள்ளது. இது, இந்த அரசு முன்னெச்சரிக்கையாக மேற்கொண்ட பல நடவடிக்கைகளுக்கும், நிலைமைக்கும் ஏற்றவாறு நெறிமுறைகள் வகுத்து நிர்வகித்த தமிழக அரசின் கொள்கைகளுக்கும், சீரிய வெற்றியாகும்.

உணவுக் கொள்கையில் ஏற்பட்ட இந்த அடிப்படை மாறுதலுக்கு ஈடு கொடுப்பதில் தமிழக அரசு முனைந்திருந்த நேரத்திலேயே








1977ஆம் ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வரலாறு காணாத வெள்ளமும் புயலும் மேலும் ஒரு பயங்கரச் சோதனையை உருவாக்கின. அந்த அறைகூவலையும் ஏற்று, அமைதியாகவும் ஆக்க பூர்வமாகவும் அவசியமான நடவடிக்கைகளைத் துணிவுடன் மேற்கொண்டதன் பயனாக, சோதனையையும் சாதனைக்கு ஒரு வாய்ப்பாக மாற்றி, தமிழக அரசு உணவு முனையில் மகத்தான வெற்றியைக் கண்டுள்ளது. 1977ஆம் ஆண்டு இறுதியில் வெள்ளத்தாலும் புயலினாலும் ஏற்பட்ட பாதிப்பிற்குப் பின்பும் தமிழகத்தில் அரிசியைப் பொறுத்தவரையில், எந்தவிதத் தட்டுப்பாடு இல்லாமலும், விலை உயர்வு இல்லாமலும், வெளிச்சந்தையில் அரிசிப் புழக்கம் இயல்பாகவும், பொது விநியோக முறையின் கீழ் அரிசி வழங்குதல் சீராகவும், நடந்து வருகின்றன. உணவு நிலைமை கவலைக்கிடமாக இருந்த நிலையை மாற்றிப் பொதுமக்களுக்குப் பிரச்சினையே எழாதவாறு உணவு நிலைமையை நிர்வகித்து வந்துள்ளது இந்த அரசின் அரிய சாதனைகளில் ஒன்றாகும்.

**சீரான உணவு நிலைமை**

உணவு உற்பத்தியைப் பெருக்க மேற்கொள்ளப்பட்டுள்ள பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளின் பயனாக, 1978-79ஆம் பசலி ஆண்டில் 64 இலட்சம் டன்கள் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது. இது நமது மாநிலத்தின் தேவைகளுக்குப் போதுமானதாகும். வெளிச்சந்தையில் அரிசியின் விலைவாசிகள் உயர்ந்துவிடாமல் காக்கும் பொருட்டும், வெளிச்சந்தை வியாபார மாற்றங்களுக்கும் விலை ஏற்றங்களுக்கும் உட்படாமல், ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட நியாயமான விலைகளில் அரிசி மக்களுக்குக் கிடைக்க வழி செய்வதற்காக, பொது விநியோக முறையைத் தொடர்ந்து நடத்த இந்த அரசு முடிவு செய்தது.

இந்த அரசு நிர்வாகப் பொறுப்பேற்ற இரண்டாண்டு நிறைவு பெறும் இக்கட்டத்திலே உணவு நிலைமை சீராக அமைந்துள்ளது. என்பது குறித்தும், அறுவடை இல்லாத நேரங்களிலும் தட்டுப்பாடு ஏற்படாமலும், விலை ஏறாமலும், பொதுமக்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் நிர்ணய விலைகளில் அரிசி வழங்குவதற்கு அரசிடம் கணிசமான கையிருப்பு உள்ளது என்பது குறித்தும் அரசு மட்டுமல்ல, தமிழக மக்களும் மன நிறைவு கொள்ளலாம்.

பொது விநியோகத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்று முடிவு செய்யப்பட்ட அதே நேரத்தில், வெளிச்சந்தை வர்த்தகம் சுதந்திரமாகவும் சுமுகமாகவும் செயல்படுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளையும் இந்த அரசு உருவாக்கியுள்ளது. விவசாயப் பெருமக்களுக்கு இடர்ப்பாடு ஏற்படாத வகையிலும் தன்னுடைய கொள்முதல் கொள்கையிலும் மாற்றங்கள் செய்துள்ளது.

1979க்கு முந்தைய ஆண்டுகளில் விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது விவசாயிகளி



டமிருந்து கட்டாயக் கொள்முதல் எதுவும் செய்யப்படுவதில்லை. முன்பு ஒவ்வொரு மாவட்டமும் ஒரு தனித்தொகுதியாகப் பாவிக்கப்பட்டு அந்த மாவட்டத்தை விட்டு அசிரியையும் நெல்லையும் வெளியே எடுத்துச் செல்வதற்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தன. இன்றோ மாவட்டத்திற்கு மாவட்டம் நெல், அரிசிக்கு இது போன்ற நடமாட்டத் தடைகள் எதுவும் கிடையாது. 1978 மே மாதம் 11ஆம் தேதி முதற்கொண்டு எல்லாக் கட்டுப்பாடுகளும் அடியோடு நீக்கப்பட்டு, தமிழகம் முழுவதிலும் நெல்லும் அரிசியும் தாராளமாகப் புழங்குவதற்கு வகை செய்யப்பட்டது. முன்பு கட்டாயக் கொள்முதல் நடந்து கொண்டிருந்ததையொட்டி தனியார் வியாபாரிகள் நெல்லிலும் அரிசியிலும் மொத்த வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டிருந்தது. அந்நிலையில் கொள்முதலுக்கு நெல்லை அளந்த பின்பு தங்களது உபரி நெல்லை, மாவட்டங்களுக்குள்ளாகவே, அரசுக்கே விவசாயிகள் விற்க வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலை உருவாக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நெல்லிலும் அரிசியிலும் தனியார் மொத்த வியாபாரம் செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்



பட்டு விட்டது. மொத்த வியாபார உரிமங்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன. ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த மொத்த வியாபாரி மற்றொரு மாவட்டத்திற்குச் சென்று நெல்லையும் அரிசியையும் தாராளமாக வாங்கித் தமிழகத்திற்குள்ளாக எங்கு வேண்டுமானாலும் எடுத்துச் செல்லும் நிலை இப்பொழுது நிலவி வருகிறது. முன்பு சில்லறை வர்த்தகர்கள் கூட, விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்குவதில், பல நிபந்தனைகளும் தடைகளும் விதிக்கப்பட்டிருந்தன.

இப்பொழுது அத்தடையும் நீக்கப்பட்டுச் சில்லறை வியாபாரிகளும் விவசாயிகளிடமிருந்து நேரடியாகவே நெல்லையும் அரிசியையும் வாங்குவதற்கு வ செய்யப்பட்டுள்ளது. சொந்தத் தேவைக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லையும் அரிசியையும் பொறுத்தவரையிலே அதிகாரிகளிடமிருந்து சான்றிதழ் பெற்ற பின்பே அவற்றை எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிபந்தனை முன்பு விதிக்கப்பட்டிருந்தது.

இப்பொழுது அந்த நிபந்தனைகளும் நீக்கப்பட்டு விட்டன. இவற்றின் காரணமாகத் தமிழகத்தில் நெல்லும் அரிசியும், தாராளமாகவும் தடை எதுவுமின்றியும் மாநிலம் முழுவதும் புழங்குவதற்கும் விவசாயிகள் தங்கள் நெல்லை இலாபகரமான விலைக்கு வெளிச்சந்தையில் விற்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

## தட்டுப்பாடும் கட்டுப்பாடும்

தட்டுப்பாடு உள்ள நேரத்தில்தான் கட்டுப்பாடுகள் அவசியம். கட்டுப்பாடுகளினால் பொதுமக்களுக்கு இடர்ப்பாடுகள் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாது. தட்டுப்பாடுகளும் கட்டுபபாடுகளும் இடர்பாடுகளும் தான் முந்தைய ஆண்டுகளின் உணவு நிர்வாகத்தின் அம்சங்களாக அமைந்திருந்தன. தட்டுப்பாடு இல்லாத நிலையை உருவாக்கி, கட்டுப்பாடுகளைத் தேவையற்றதாக்கி, அவற்றை நீக்கி, அவற்றால் ஏற்பட்டு வந்த இடர்ப்பாடுகளிலிருந்து பொது மக்களை விடுவித்து, செழிப்பும் செம்மையும் இணைந்த - வளமும் வசதியும் ஒன்று சேர்ந்த, இயல்பான இங்கிதமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது, இந்த அரசின் சிறப்பான சாதனைகளில் ஒன்றாகும்.

நெல்லின் உற்பத்திச் செலவுக்கு ஏற்ப நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மத்திய அரசு. மத்திய விவசாய விளைபொருள்கள் விலைவாசி ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு இந்த விலைகளை நிர்ணயிக்கின்றது.

*1977-78*ஆம் ஆண்டுக்கு விலை நிர்ணயப்பிரச்சினை எழுந்தபோது நெல் கொள்முதல் விலைகளைக் கணிசமாக உயத்தவேண்டுமென்று தமிழக அரசு வன்மையாக வற்புறுத்யதிது. தற்போது மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுகக்கு ரூ. 74 என்று நிர்ணயிக்கப்பட்டிருந்த கொள்முதல் விலையை ரூ. 85 என்ற அளவில் உயர்த்தி மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அனைத்திந்திய அடிப்படையில் மத்திய அரசு நிர்ணயிக்கும் இந்தக் கொள்முதல் விலைகள் எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும். தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்துகூட மாநில அரசுகள் இந்தக் கொள்முதல் விலைக்கு மேலாக போனஸாகவோ வேறு எந்த இனத்திலோ கூடுதல் தொகை வழங்கக் கூடாது என்பதும் மத்திய அரசால் தெளிவாக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு மனநிறைவு

*1977-78*ஆம் ஆண்டுக்கு நெல் கொள்முதல் விலை நிர்ணயப் பிரச்னை *1978* செப்டம்பரில் ஆய்வுக்கு வந்தது. அக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு மனநிறைவு ஏற்படும் வகையில் கொள்முதல் விலைகளை உயர்த்த வேண்டுமென்ற கருத்தைத் தமிழக அரசு மீண்டும் மத்திய அரசிடம் வலியுறுத்தியது. நெல்லின் கொள்முதல் விலையை உற்பத்திச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கவேண்டுமென்று மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. குறைந்த பட்சம் கோதுமைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கொள்முதல் விலையானது நெல்லுக்கு நிர்ணயிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டு வருகிறது.

நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்ற நிலையில், வெளிச்சந்தையில் விவசாயிகள் நெல்லை இலாபகரமாக விற்றுக்கொள்ள வசதியான சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கித் தந்துள்ளது. 1975ஆம் ஆண்டு சம்பாப் பட்டம் வரை, கட்டாயக் கொள்



முதல் நடத்தப்பட்டு வந்ததை அனைவரும் அறிவார்கள். இப்பொழுது கட்டாயக்கொள் முதல் இல்லை, மாவட்டங்களை விட்டு நெல்லையும் அரிசியையும் எடுத்துச் செல்லக் கூடாதென்று ஒரு மட்டத்தில் தடைகள் விதிக் கப்பட்டிருந்தன. இப்போது அந்தத் தடை களும் நீக்கப்பட்டுவிட்டன. 1977ஆம் ஆண்டு குறுவைப்பட்டத்தில் உபரி மாவட்டங்களிலி ருந்து மற்ற மாவட்டங்களுக்கு எடுத்துச் செல் லப்பட்ட நெல்லுக்கு 10 விழுக்காடும், அரி சிக்கு 20 விழுக்காடும் வர்த்தக லெவி விதிக் கப்பட்டிருந்தது. ஆலைகள் லெவியும் விதிக் கப்பட்டிருந்தது. 11.5.1978 முதல் தமி ழகத்திற்குள் வர்த்தக லெவி, ஆலை லெவி அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. ஆகவே இப்போதுள்ள நிலைமைப்படி, தமிழகத்திற் குள் அரிசி, நெல் நடமாட்டத்திற்கு எந்தவிதத் தடையும் இல்லை. இதனால் பற்றாக்குறை மாவட்டங்களிலிருந்து வர்த்தகர்கள் உபரி மாவட்டங்களுக்குச் சென்று, விவசாயிகளிட் மிருந்து நெல்லை நேரடியாக வாங்குவதற்கு வசதி ஏற்பட்டுள்ளது. தமிழகத்திற்குள்ளாக எந்தவித நடமாட்டக் கட்டுப்பாடோ தடையோ, லெவி நிபந்தனையோ இல்லாமல் உணவு வர்த்தகம் சுமுகமாகவும், சுதந்திர மாகவும் இயங்குவதற்கு வசதி செய்யப்பட் டுள்ளது.

### அரசின் கொள்கை

வெளிமாநிலங்களுக்கு எடுத்துச்செல்லப் படும் நெல், அரிசியில் மட்டுமே லெவி வசூ லிக்கப்பட்டு வருகிறது. இந்த லெவியும் முன்பிருந்த 50 சதவீதத்திலிருந்து 1978ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7ஆம் நாள்முதற் கொண்டு, 20 சதவீதமாகக் குறைக்கப்பட் டுள்ளது. 1978ஆம் ஆண்டுக் குறுவையின் போது தஞ்சைக் குறுவை வெளி மாநிலங் களுக்கு எந்தவித லெவியும் செலுத்தாமல் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. வெளிச் சந்தையில் விவசாயிகள் இலாபகர மான விலைக்கு நெல்லை விற்றுக்கொள்ள வசதி செய்யும்பொருட்டே இந்த அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. தமிழ கத்தின் உணவு நிலைமையைப் பாதுகாப்ப தற்கும், நுகர்வோர் நலனை முன்னிட்டும், அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு ,அதே சமயத்தில் நெல், அரிசி வர்த்தகம் சுதந்திரமாகவும் தடைகளின்றியும் இயங்குவதற்கு எல்லா வசதிகளையும் செய்து தருவதும், விவசாயிகள் இலாபகரமான விலையில் நெல்லை விற்க வாய்ப்புகள் அளிப் பதுமே தான் இந்த அரசின் கொள்கையாகும்.

இந்த அடிப்படையில்தான் அரிசி அரைவை ஆலையாளர்கள், நெல், அரிசி மொத்த வியாபாரிகள் ஆகியோர் ஒரே சம யத்தில் விபாயபாரத்திற்காக வைத்துக் கொள்ளக் கூடிய நெல், அரிசி உச்சவரம்பும் அக்டோபர் 1978க்குப் பின்பு, மிகக் கணிச மாக, உயர்த்தப்பட்டுள்ளது. அரிசி அரவை ஆலையுள்ள மொத்த வியாபாரிகள் ஒரே சம யத்தில் 2,400 குவிண்டால் நெல்லும் மற்ற மொத்த வியாபாரிகள் 750 குவிண்டால் நெல் லும் வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட் டுள்ளனர். விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்கும் நிலையை உறுதிப்படுத்துவதற் காகவே, இந்த நடவடிக்கையும் எடுக்கப்பட் டுள்ளது.


கொள்முதல் விலைகளை உயர்த்த மா நில அரசுக்கு வழியில்லை என்ற போதிலும் இலாபகரமான விலைக்கு விவசாயிகள் நெல்லை விற்றுக்கொள்ள செய்துதரக்கூடிய வசதிகளை யெல்லாம் தமிழக அரசு செய் துள்ளது என்பது இதிலிருந்து தெள்ளத் தெளி வாகும்.

இயல்பான சூழ்நிலையை உருவாக்க நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதே நேரத்தில், நுகர்வோரின் நலனுக்கு ஒவ்வாத முறையில் விலைவாசிகள் ஏறிவிடாமல் காக்க வும், கண்காணிக்கவும் விழிப்பான பல நட வடிக்கைகளைத் தமிழக அரசு இந்த இரண் டாண்டுக் காலத்தில் தீவிரமாக மேற்கொண் டுள்ளது.

1978-ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை சர்க் கரைக் கட்டுப்பாட்டுக் கொள்கையை மத்திய அரசு பின்பற்றி வந்தது. அதன்படி நாட் டிலே உற்பத்தியான சர்க்கரையில் 65 விழுக் காடு லெவி முறையின்கீழ் விநியோகத்திற்கும், 35 விழுக்காடு சர்க்கரை வெளிச்சந்தை விற் பனைக்காகவும் ஒதுக்கப்பட்டு வந்தது. அத் திட்டத்தின் கீழ் சுமார் 19,000 டன்கள் லெவி சர்க்கரை ஒவ்வொரு மாதமும் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்டு வந்தது. லெவி சர்க்கரையின் விலை கிலோ ரூ. 2.30 ஆக நிர்ணயிக்கப் பட்டிருந்தது. 1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சர்க்கரை விநியோகக் கொள்கை யில் மத்திய அரசு மாற்றம் செய்து லெவி முறையை நீக்கிவிட்டது. இதையொட்டி சர்க்கரை ஆலைகளுக்குப் பெரும் பிரச்சினை கள் எழுந்துள்ள போதிலும் விவசாயிகள் கரும்புக்குப் பெற்று வந்த விலை குறைந்து விட்ட போதிலும், நுகர்வோரைப் பொறுத்த வரையில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 2.10 முதல் ரூ. 2.60 அளவில் தாராள மாகக் கிடைத்து வருகிறது. சர்க்கரையில் விலை ஏறிவிட்டால் விலையைக் கட்டுப்படுத் துவதற்காகத் தமிழக அரசிடம் சர்க்கரை கையிருப்பும் கணிசமாக உள்ளது.

### அரிசியின் விலை

அரிசியைப் பொறுத்தவரையிலே பெரும் பாலான மக்கள் பயன்படுத்தும் நடுத்தரப் புழுங்கல் அரிசியின் விலை 1975ஆம் ஆண் டில் கிலோ ரூ. 2.40 முதல் ரூ. 3.90 வரை இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூ.1.40 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சன்ன ரகப் புழுங்கல் அரிசியின் விலையும் இப்போது ரூ. 1.50 முதல் ரூ. 1.90 வரை உள்ளது. சென்ற நான்கு ஆண்டுகளின் விலைகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய




விலை மிகக் குறைவானது. அரிசியின் பிற வகைகளிலும் இத்தகைய விலை இறக்கப் போக்கேகாணப்படுகிறது.

கேழ்வரகு, கம்பு, சோளம், முதலிய சிறு தானியங்களின் விலைகளும் கிலோ ரூ.0.80 முதல் கிலோ ரூ. 1.20 வரை அமைந்துள்ளன. சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் நிலவிய விலைகளைவிட, தற்போதைய விலை குறைவானதே.

பருப்பு வகைகளைப் பொறுத்த வரையில் தமிழ்நாடு பற்றாக்குறை மாநிலமாகும். தமிழ்நாட்டில் துவரம் பருப்பிற்கான தேவை 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். தமிழ் நாட்டின் அதன் உற்பத்தியோ 35,000 டன்கள்தாம். கடலைப் பருப்பின் தேவையும் 2 இலட்சம் டன்களுக்கும் அதிகம். அதன் உற்பத்தியோ இங்கு 5,000 டன்கள்தான். பாசிப்பருப்பின் தேவை 50,000 டன்களுக்கும் மேற்பட்டது. தமிழ்நாட்டில் அதன் உற்பத்தியோ 22,000 டன்கள்தான். உளுத்தம் பருப்பின் தேவை ஒன்றரை இலட்சம் டன்களுக்கும் அதிகம். இங்கு அதன் உற்பத்தியோ 32,000 டன்கள்தான். மொத்தத்தில் பருப்பு வகைகளின் தேவை, தமிழ்நாட்டில் ஆறு இலட்சம் டன்கள் என்று மதிப்பிட்டால், இங்கு அவற்றின் உற்பத்தி ஒரு இலட்சம் டன்களுக்கும் குறைவாகவே உள்ளது. ஏறக்குறைய ஐந்து இலட்சம் டன்கள் பற்றாக்குறையை ஈடு செய்ய பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், ஆந்திரம் முதலிய மாநிலங்களிலிருந்து பருப்பு தமிழகத்திற்கு வரவேண்டியுள்ளது. துவரம்பருப்பின் விலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கிலோ ரூபாய் 4.20 முதல் ரூபாய் 5.20 வரை இருந்ததற்கு மாறாக, இப்போது கிலோ ரூபாய் 3.65முதல் ரூபாய் 5.00 வரை உள்ளது. கடலைப் பருப்பின் விலை சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 2.70 முதல் ரூபாய் 3.10 வரை விற்றது. இப்பருப்பின் விலையில் இந்த ஆண்டு சற்று ஏற்றம் காணப்பட்டு, கிலோ ரூபாய் 2.80 முதல் ரூபாய் 3.20 வரை உள்ளது. பருப்பு வகைகளின் விலைகளைச் சீர்படுத்தும் நோக்கத்துடன், கூட்டுறவு அமைப்புகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும், உற்பத்தியாகும் உபரி மாநிலங்களிலிருந்து விளைச்சல் காலத்தில் அதிக அளவில் வாங்கி இங்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன.

**எண்ணெய் விலைகள்**

கடலை எண்ணெய்யைப் பொறுத்தவரையில், கிலோ ரூபாய் 10.10 முதல் ரூபாய் 11.65 வரை 1977ஆம்-ஆண்டில் விற்று வந்ததற்கு மாறாக இப்போது கிலோவிற்கு ரூபாய் 6.60 முதல் ரூபாய் 7.60 வரை விலை குறைந்துள்ளது. இந்த விலையில் தாராளமாகக் கடலை எண்ணெய் கிடைத்து வருகிறது. அயல் நாடுகளிலிருந்து எண்ணெய்களைத் தாராளமாக இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு வசதி செய்துள்ள காரணத்தால் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெயின் விலைகளும் இப்போது நிதானமாகவே உள்ளன. நல்லெண்ணெய்யின் விலை சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 9.00 முதல் ரூபாய் 10.40க்கு விற்று வந்ததற்கு மாறாக இப்போது கிலோ ரூபாய் 7.15 முதல் 8.80 வரை விற்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய்யின் புழக்கம் தமிழ்நாட்டில் குறைவாய் உள்ளது.



மாநிலத்தின் தேவைகளுக்கான தேங்காய் எண்ணெய்யைக் கேரளத்திலிருந்தே பெரும் அளவிற்கு நாம் பெற்று வருகின்றோம். சென்ற ஆண்டிலிருந்த விலைகளைவிட இந்த ஆண்டில் விலை ஏற்றம் காணப்படவில்லை.

மிளகாய் வற்றல் சென்ற ஆண்டு கிலோ ரூபாய் 8 முதல் ரூபாய் 11 வரை விற்கப்பட்டு வந்ததற்கு மாறாக இப்போது ரூபாய் 7முதல் ரூபாய் 10 அளவில் விற்கப்பட்டு வருகிறது. புளியின் விலையில் சென்ற ஆண்டு விலையை விட ஏற்றம் காணப்படுகிறது. சென்றஆண்டு கிலோ ரூ.2.80 முதல் ரூ. 4.50 வரை விற்கப்பட்டு வந்த புளி, இந்த ஆண்டு ரூ. 3.50 முதல் ரூ. 5.50 வரை விற்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் புளியைப் பொறுத்தவரையிலும் பற்றாக்குறை உண்டு. நமது தேவையில் பெருமளவு கர்நாடகம், ஆந்திரம், பீகார் ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலிருந்தும் புளியை வரவழைத்துப் பொது விநியோக அமைப்பில் குறைந்த விலையில் விற்பதற்கான நடவடிக்கைகளில் கூட்டுறவு அமைப்புகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. தனியாவின் தற்போதைய விலை கிலோ ரூபாய் 2.40 முதல் ரூபாய் 3.50 வரை உள்ளது. இந்த விலை சென்ற ஐந்து ஆண்டுகளில் காணப்பட்ட விலைகளைவிட மிகக் குறைவானதாகும்.

**வர்த்தக சுதந்தரம் நுகர்வோர் நலன்**

பதுக்கல், நடுத்தரகர்கள், கொள்ளை இலாபம் அடித்தல், வியாபாரச் சூதாட்டம் ஆகிய சமூக விரோதச் செயல்களைக் கட்டுப்படுத்த பல வர்த்தக ஒழுங்குமுறை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பயனாக வர்த்தகர்களின் சுதந்திரத்தில் தேவைக்கு மீறி குறுக்கிடாத அதே நேரத்தில் நுகர்வோரின் நலனையும் பாதுகாக்கக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.



## "டாமின்"

"டோலிரைட்" என அழைக்கப்படும் கருப்பு கிரானைட் கற்களை வெட்டியெடுக்கும் உரிமங்களை அரசே மேற்கொண்டிருந்தது. எனினும் இக்கற்களை ஏற்றுமதி செய்வதில் ஏராளமான இலாபம் கிடைப்பதை அறிந்து கொண்ட தொழில் அதிபர்கள் கள்ளத்தனமாக இக்கற்களை வெட்டி எடுக்க முனைந்தனர். ஆகவே, அரசே இத் தொழிலை மேற்கொள்ள முடிவு செய்தது. இதன்படி "டாமின்" எனப்படும் தமிழ்நாடு கனிப்பொருள் நிறுவனத்தை 1978 ஏப்ரல் திங்களில் அரசு துவங்கியது. இந்நிறுவனத்தின் வரையறை செய்யப்பட்ட மூலதனம் ஒரு கோடி ரூபாயாகும்.

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக இவ்வரசு பொறுப்பேற்றவுடன் கிராமந் தோறும் ஒரு நியாயவிலைக்கடை திறக்கப்பட வேண்டுமென்று முடிவெடுத்து, அத்திட்டத்தினைச் செயல் படுத்தி வருகிறது. கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பயன்படுத்தும் பல இன்றியமையாப் பொருட்களை நயமான விலைகளில் கிடைக்க வழிவகை செய்வதே அரசின் எண்ணமாகும். தமிழ்நாட்டில் 16,660 வருவாய் கிராமங்கள் உள்ளன. இவற்றில் குடியிருப்புகள் இல்லாத கிராமங்கள் 925. அவை நீங்கலாக 15735 குடியிருப்புகள் உள்ள வருவாய்க் கிராமங்கள். இவற்றில் ஏற்கனவே சுமார் 5800 கடைகள் இயங்கி வந்தன. இக்கடைகளில் அரிசி, கோதுமை, சர்க்கரை போன்ற உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்தன. மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு இன்றியமையாத மற்றப் பொருள்களையும் இக்கடைகளில் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 5800 கடைகளில் 5600க்கு மேற்பட்ட உணவுப் பங்கீட்டுக் கடைகள் பல பொருள் நியாயவிலைக் கடைகளாக மாற்றப் பட்டு விட்டன. கடைகள் இல்லாத கிராமங்களில் புதியதான கடைகளைத் திறப்பது என்பது அடுத்த முக்கியப் பணியாகும். இத்திட்டத்தின் படி சுமார் 10,000 கிராமங்களில் புதிய நியாய விலைக்கடைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தைச் செயல் படுத்தும் பொறுப்பு தஞ்சை, தென்னார்க்காடு, நெல்லை, தர்மபுரி மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் எஞ்சிய மாவட்டங்களில் கூட்டுறவு அமைப்புகளிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதியதாகத் திறக்கப்பட வேண்டிய 10,000 கிராமங்களில் 9381 கிராமங்களில் இப்போது கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. ஓரிரு மாதங்களில் இப்பணி நிறைவு பெற்று விடும். அறுவடைக் காலத்தில் உற்பத்தியாகும் பொருட்களை உற்பத்தி செய்யும் இடங்களிலேயே வாங்கி, தரமானவற்றை நயமான விலைகளில் விற்க இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் கூட்டுறவு அமைப்புகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

### மண்ணெண்ணெய்

மண்ணெண்ணெய்யைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது. 1979ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் சனவரித் திங்களில் நமது மாநிலத்துக்குச் செய்யப்பட்ட ஒதுக்கீட்டைவிட பிப்ரவரி-மார்ச் மாதங்களில் ஒதுக்கீடு குறைவாகவும் ஏப்ரல் மாத ஒதுக்கீடு மார்ச்சு மாத ஒதுக்கீட்டைவிட மேலும் குறைவாகவும் இருந்தன. இவ்வாறு ஒதுக்கீடுகள் நமது தேவைக்குப் பெரிதும் குறைவாக இருந்தமையால், கிடைக்கும் மண்ணெண்ணெய்யைச் சீராக விநியோகிப்பது அவசியமாகியது. ஆகவே, ஏப்ரல் மாதம் முதல் வாரம் முதற்கொண்டு மண்ணெண்ணெய்யைக் குடும்ப அட்டைகளின் பேரில் வழங்க முடிவு செய்து, அவ்வாறே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் ஆகியவற்றின் மூலம் சென்னையிலும் அதன் புறநகர்ப்பகுதியிலும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதனால் மண்ணெண்ணெய்த் தட்டுப்பாடு ஓரளவு நீங்கி, எல்லோருக்கும் சமமான முறையில் தற்போது கிடைக்கிறது.



விவசாயிகள், வர்த்தகர்கள், நுகர்வோர், ஆகிய பல்வேறு சாராரின் நலன்களையும் பாதுகாக்கும் முறையில், ஒருங்கிணைந்த உணவுக் கொள்கையைத் தமிழக அரசு பின்பற்றி வருகிறது.

அமைதிக்கு உலை வைக்கக்கூடிய பிரச்சினையாக உணவுப் பிரச்சினை இருந்த ஒரு காலம் மாறி உணவு முறையில் நிறைவும் நிம்மதியும், ஆக்கமும் ஊக்கமும் நிலவும் சூழ்நிலையை விவசாயிகள், வர்த்தகர்கள், பொது மக்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன் இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் உருவாக்க முடிந்தது பற்றித் தமிழக அரசும் மக்களும் பெருமிதம் கொள்ளலாம்.

**தமிழ்நாட்டிலுள்ள ஊர்ப்பகுதிகளும், நகர்ப் பகுதிகளும் ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சி பெறத் தேவையான திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்திவரும், நகர் ஊரமைப்புத்துறை இந்த இரண்டாண்டில், முக்கியமான சில புதிய திட்டங்களை உரு வாக்கியுள்ளது.**

# நகர் ஊரமைப்புத் துறையின் நற்பணிகள்

மதுரை, கோயம்புத்தூர் போன்ற தமிழகத்தின் முக்கிய நகர் மையங்களுக்கு 'ஒருங் கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களையும், தமிழ்நாட்டில் புயலும் வெள்ளமும் பாதிக்கும் பகுதிகளுக்குப் பேரழிவுத் தடுப் புத் திட்டத்தையும் உருவாக்கி யுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத் தக்க பணியாகும்.

**நோக்கமென்ன ?**

நகர மக்களுக்குத் தேவை யான இன்றியமையா வசதிகளின் பற்றாக் குறைகளை நீக்கி, தொழிலாளர் மற்றும் பொரு ளாதாரத்தில் பின்தங்கிய மக்க ளின் வாழ்வுச் சூழலை மேம்படுத் துதலே முதலில் குறிப்பிட்ட ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச் சித் திட்டத்தின் நோக்கமாகும்.

புயல், பெரு வெள்ளம் போன் றவை நிகழ்வதற்கு முன்பும், பின் பும் அறிவியல் அடிப்படையாக மேற்கொள்ள வேண்டிய ஏற் பாடுகளையும் எச்சரிக்கைகளை யும் திட்டமிட்டுச் செயற்படுத்து தல் மூலம் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் இயற்கை இழைக்கும் பெருங்கேட்டின் விளைவுகளைக் குறைப்பதே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பேரழிவுத் தடுப்புத் திட்டத்தின் நோக்க மாகும்.

மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களுக்காக இத்துறை உருவாக்கிய தனி அறிக்கை களை அடிப்படையாகக்கொண்ட திட்டங்களை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, நெடுஞ்சாலை மற் றும் கிராமப் பணித் துறை போன்ற அரசு நிறுவனங்கள் ஊக்கத்துடன் மதுரையிலும், கோயம்புத்தூரிலும் செயற் படுத்தி வருகின்றன.

**ஒருங்கிணைந்த திட்டம்**

மதுரை மாநகருக்கான ஒருங் கிணைந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 7.76 கோடி. கோயம்புத்தூருக்குரிய திட்டங் களின் மொத்த மதிப்பீடு ரூபாய் 7.86 கோடி. இந்த மொத்த மதிப்பீட்டின் பாதித் தொகையை மத்திய அரசு. 5.5 சதவிகித குறைந்த வட்டிக்குக் கடனாக வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இத்துடன்தொகை, முன் தவணை யாக 5 ஆண்டுகள் கழித்து, இருபது ஆண்டுகளில் மத்திய அர சுக்குத் திருப்பித் தரப்பட வேண் டும். திட்டத்தினைச் செயற் படுத்த முதல் தவணையாக மத் திய அரசும், தமிழ்நாடு அரசும் ரூ. 3.56 கோடிக்கும், இரண்டா வது தவணையாக ரூ. 1.54 கோடிக்கும் என்று மொத்தம் ரூ. 5.10 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

மதுரையில் ஏழை நெசவா ளர்கள் வாழும் இஸ்மாயில்புரத் தில் நிலமட்டத்தின் கீழ் வடிகால் அமைத்தல் - சந்தைப்பேட்டை யில் கூடுதலாக மூன்றாவது பம்பு செட் அமைத்தல்-அவனியாபுரத் தில் மாநகராட்சியின் கீழ் கழிவு நீர்ப் பண்ணையில் கூடுதலாகக் கழிவு நீரைத் தூய்மையாக்கும் குளங்களை அமைத்தல்-மதுரை யில் வடபகுதிக்குக் குடிநீர் வசதியை மேம்படுத்துதல் — மதுரையில் மத்தியப் பகுதி யிலுள்ள சாலைகளின் நடை பாதைகளைச் சீராக்குதல் - மத் தியப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள சாலைகளில் மக்கள் நடமாட்டமும், ஊர்திகளின் போக்குவரத்தும் மிகுதியாக உள்ளதால், போக்குவரத்து நெரி சலைக் குறைக்கச் சாலைச் சந் திப்பில் சுரங்கப்பாதை அமைத் தல், பேருந்து நிலையத்தை மேம்படுத்துதல், திருப்பரங்குன் றம் சாலையை ஒட்டிய பழைய மாநகராட்சி அலுவலக இடத் தில், நன்கு திட்டமிடப்பட்ட பன்மாடிக் கட்டடம் (அங்காடி) அமைத்தல்-புதிய எல்லிஸ் நகர்ப் பகுதியில் குடியிருப்பு வசதிகள் செய்தல் ஆகியன மதுரை ஒருங் கிணைந்த நகர வளர்ச்சித் திட் டத்தின் குறிப்பிடத்தக்க அம்சங் களாகும்.

கோயம்புத்தூரில் சிங்காநல் லூர், குறிஞ்சிப் பகுதிகளில் தொழிலாளர்களுக்கான, வீட்டு வசதி மற்றும் குடிநீர்த் திட் டங்கள்-பேரூர் சாலையின் வடக் கிலும் தெற்கிலும் குறைந்த வரு வாய் உள்ள மக்களுக்காகக் குடி யிருப்புகள் கட்டுதல்-காவல் துறையினர் தற்போது குடியுள்ள பகுதிகளில், நவீனமான பன் மாடி அங்காடிக் கட்டடங்களும், குடியிருப்புக் கட்டடமும் அமைத் தல் ஆகியன கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச் சித் திட்டத்தில் அடங்கியுள்ளன.



**சமநீதி!**

***ஒரு பொறுப்பை நிர்வ கிப்பது என்றால், எல்லா மக்களுக்கும் சரிசமமாக உரிமை கொடுத்து அது பறிபோகாமல் சமநீதியின் படி நிர்வகிப்பதேயாகும்!***

***—தந்தை பெரியார்***

**உறுதுணையான பணி**

இத்துறை, சேலம் நகர்ப்புற நிலையை மேம்படுத்த அப்பகுதிக்காக ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் ஒன்றையும் தயாரித்துள்ளது. மேலும், இதுபோன்ற திட்டங்களைத் தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி போன்ற நகரங்களுக்கும் தயாரித்து வருகிறது.

புயலும் வெள்ளமும் பாதிக்கும் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் மக்களைக் காக்க ஏறத்தாழ ரூபாய் இரண்டு இலட்சம் மதிப்பீடுள்ள பாதுகாப்பான காப்புக்கூடங்களை அமைக்கும் திட்டத்தை உருவாக்கியது இத்துறையின் குறிப்பிடத்தக்கப் பணியாகும்.

பேரழிவு ஏற்படும் சமயங்களில் ஏறத்தாழ 500 பேர்களுக்கு இக் காப்புக்கூடம் இடமளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, சமையலறை, இன்றியமையாத மருத்துவ வசதி, உணவுப்பொருள் சேமித்து வைக்கத் தேவையான இட வசதி ஆகியன இக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**காப்புக் கூடங்கள் :**

மாநில அரசின் பண உதவியில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு காப்புக் கூடமும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மற்றுமொரு கூடமும், மகாராஷ்டிர மாநிலத்தின் புயல் நிவாரண மக்கள் குழுமனமுவந்தளித்த நன்கொடைப் பணத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் ஐந்து காப்புக் கூடங்களும் அமைக்கப்படும்.

தமிழகக் கடலோரப் பகுதிகளில் இத்துறை தேர்ந்தெடுத்துள்ள 25 இடங்களில் உலக நாடுகளின் செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில், 25 காப்புக் கூடங்களையும், அக்கூடங்களைச் சுற்றித் தேவையான வசதிகளையும் அமைக்கும் திட்டத்திற்கு, தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மாமல்லபுரத்திற்கு அருகில் சாலவான் குப்பத்தில் அரிசனக் குடியிருப்புகளுக்காக வலுவுள்ள வீடுகள், தொடக்கப் பள்ளிஆகிய வற்றைக் கட்டி அப்பகுதியை மறு சீரமைக்கும் பணிக்கு உலக நாடுகளின் ரோட்டரி (Rotary International) நிறுவனத்தின் உதவி கிடைத்துள்ளது.

**எச்சரிக்கை கருவி :**

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் நிவாரணப் பணிகளை நிர்வாகம் செய்யும் மையங்களுக்கும், தலைமையிடங்களுக்கும் இடையே விரைவான செய்திப் போக்குவரத்து ஏற்படுத்த நவீனமான கருவிகளைப் பயன்படுத்தவும், புயல் கடலோரப் பகுதியை நெருங்கியதை எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்யும் எளிய கருவி ஒன்றை, கடலோரப் பகுதியில் ஒவ்வோர் ஊரிலும் அமைக்கும் திட்டத்தையும் இத்துறை தயாரித்துள்ளது.

சென்னைப் பெருநகர் எல்லைக்குத் தெற்கிலும், பாலாற்றின் கரைக்கு வடக்கிலும் புகழ் பெற்ற மாமல்லபுரத்தைச் சுற்றிய பகுதியில் திட்டமிடப்பட்ட முறையான வளர்ச்சியை ஏற்படுத்த மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமத்தை ஏற்படுத்தியிருப்பது இத்துறையின் சிறப்பான பணியாகும்.

மேலும் மதுரை, கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகரங்களின் எதிர்காலத் திட்ட அமைப்பிற்காக நிலப் பயன்பாடு வரைபடம் (Land use maps) தயாரிக்க வேண்டி, தமிழ்நாடு அரசு ஒப்புதலுடன் தேசீய தொலைபுல ஊர்வு செயலாண்மை நிலையத்தின் (National Remote Sensing Agency) ஒத்துழைப்புடனும், அப்பகுதிகளின் வான்வெளிப் படங்களுக்கு (Aerial Photos) ஏற்பாடு செய்து அப்படங்களை அடிப்படையாகக் கொண்டு, நிலப் பயன்பாடு விளக்கப்படங்களைத் தயாரிக்க இத்துறைப் பணியாளர்களுக்கு டேராடூனிலும் ஐதராபாத்திலும் உள்ள பயிற்சிக் கூடங்களில் சிறப்புப் பயிற்சி பெறச் செய்துள்ளது இவ்வியக்கத்தின் புதிய முயற்சியாகும்.




**சிறப்புப் பயிற்சி :**

அடிக்கடி, புயலின் தாக்குதலுக்குள்ளாகும் தன் எல்லைக்குள் உள்ள கடற்கரைப் பகுதி முழுவதையும் புயல் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும், மறுசீரமைப்புச் செய்து, வாழ்வு நல வசதிகளை ஏற்படுத்தவும், சுற்றுலா வளர்ச்சி நோக்கில் பாதுகாப்பான ஒரு சூழ்நிலையை இப்பகுதியில் உருவாக்கவும் மாமல்லபுரம் உள்ளூர்த் திட்டக் குழுமம் பல்வேறு திட்டங்களைத் தொடங்கியுள்ளது.

இந்நாட்டிலேயே முதலாவதாக ஏற்படுத்தப்பட்ட ஊரமைப்புத் துறைகளில் ஒன்றாக, 1920-ஆம் ஆண்டிலிருந்து பணியாற்றிவரும் இத்துறை, மீண்டும் பல நல்ல திட்டங்களை உருவாக்கி தமிழகத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகச் செயல்பட்டு வருகிறது என்று பெருமையோடு சொல்ல வேண்டும்.

காக்கப்பட இந்த இரண்டாண்டில் நடந்த ஆக்கப்பணிகள் அளவற்றவை!

## ஈட்டுறுதித் திட்டம்: இணையற்ற வளர்ச்சி!

சேலம், வடஆர்க்காடு, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, இராமநாதபுரம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளிலுள்ள உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகள், கடைகள், திரையரங்குகள், பத்திரிக்கை நிறுவனங்கள் ஆகிய புதிய பிரிவுகளைச் சேர்ந்த 30,900 ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு முறையே 12-2-'78 மற்றும் 14-5-'78 நாட்களிலிருந்து தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன 30,900 ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதற்குத் தேவையான பணியாளர்களை நியமனம் செய்வதற்கும் மருந்துச் செலவிற்குமாக மொத்த வருடச் செலவு தொகை ரூ. 19,54,700. இந்தத் தொகையைச் செலவு செய்ய இந்த அரசு 1978 அக்டோபர் மாதத்தில் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஈட்டுறுதித் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் சித்தமுறைப்படி மருத்துவ வசதி அளிப்பதற்கு சித்த மருந்தகங்களை, சென்னையிலுள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையிலும் கோயம்புத்தூரில் உள்ள தொழிலாளர் ஈட்டுறுதி மனையிலும். திறப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. அதற்குத் தேவையான பணியாளர்களை இந்திய மருத்துவத் தில்பட்டம் பெற்ற மருத்துவரின் தலைமையில் நியமனம் செய்வதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கூறிய இரண்டு சித்த மருந்தகங்களும் செயல்படத் தேவையான மருந்துகளுக்காக 20,000 ரூபாயையும் மரச் சாமான்கள் வாங்குவதற்காக 5,000 ரூபாயையும் செலவு செய்வதற்கு இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேற்கூறிய செலவினங்களைத் தவிரப் பணியாளர்களை நியமனம் செய்யத் தேவைப்படும் செலவுத் தொகை வருடத்திற்கு ரூபாய் 58,000 ஆகிறது.

தற்போது காப்பீடு (Insure) செய்து கொண்டுள்ள உறுப்பினர்களின் குடும்பத்தினர் அனைவரும் முழு மருத்துவ மனையில் தங்கி முழு மருத்துவ வசதி எடுத்துக் கொள்ள நான்கு இடங்களில் தொழிலாளர் காப்பீடு நிறுவனத்தின் மூலம் வசதி செய்யப்பட்டு உள்ளது. அமல் செய்யப்பட்ட எஞ்சிய 40 இடங்களில் காப்பீடு செய்து கொண்டுள்ள உறுப்பி



சட்டம் என்பது தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்ளவும், அறிவாற்றல் பெறவும் உறுதுணையாக இருக்கவேண்டும். யாரையாவது எதற்காவது கட்டுப்படுத்தி, சுதந்திரத்தைப் பறித்து, ஆடும் பொம்மையாக மாற்றுவதற்கு ஒரு கருவி என்ற வகையில் சட்டங்கள் இருக்கக்கூடாது! சட்டங்கள், காலத்திற்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும்!



**முதல்வரின் முத்துக்கள்**

* யார் எதிர்த்தாலும், தாக்கினாலும் அதுவும் நம் நன்மைக்கே என்று எடுத்துக் கொள்ள வேண்டும். சிரித்துச் சிரித்துப் பேசுபவர்களை விட, நமது முன்னேற்றத்திற்காகவும், நல்வாழ்விற்காகவும் இடித்துக் கூறுபவர்களே நல்ல நண்பர்கள்!

* சில நேரங்களில் எந்தத் தொழிலாக இருந்தாலும் தொடர்ந்து சோதனைகள் வருவதுண்டு. அவைகளை அச்சத்தோடு சந்திக்கக்கூடாது. அதிர்ச்சியடையக்கூடாது. சிலர் ஒன்று சேர்ந்து தாக்கும் நிலை ஏன் ஏற்பட்டது? எதற்காக அவர்கள் நம்மைத் தாக்குகிறார்கள்?- என்று ஆராய்ச்சி செய்யவேண்டும். பதட்டத்தோடு எந்த முடிவுக்கும் வராமல், ஆராய்ச்சி அறிவோடு ஆழ்ந்து அமைதியாகச் சிந்தித்தால் என்றும் வெற்றி கிட்டும்!

* அன்பினால் ஒருவரோடு ஒருவர் கட்டுப்பட வேண்டும். அதிகாரத்தினாலும், பயமுறுத்தலாலும் கட்டுப்படுத்த முடியாது. சட்டத்தின் மூலம் தண்டனை தரமுடியுமே தவிர திருத்த முடியாது!

* நடிகர்கள், வாழ்க்கையிலும் நடிக்க வேண்டுமா என்ற கேள்வி எழலாம். நல்ல மனிதனாக நடிப்பவர்கள் நல்லவிதமாக நடந்து கொள்ளவும் வேண்டும். அதைத் தெளிவாகச் செய்து காட்டும்போதுதான் நல்ல மனிதன் என்ற பெயரும் புகழும் வந்து சேருகிறது!

---

னர்களின் குடும்பம் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை செய்து கொள்வதைத் தவிர ஏனைய அனைத்து மருத்துவ வசதிகளும் பெற்று வந்தனர்.

தற்போது இந்த 40 மருத்துவமனைகளில் காப்பீடு செய்து கொண்ட உறுப்பினர்களின் குடும்பத்தினர் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறலாம் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இத்திட்டம் 1979-ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வந்துள்ளது. மேற்குறிப்பிட்ட 40 மருத்துவமனைகளில் முழு மருத்துவ வசதி அளிப்பதால் சுமார் 22.75 இலட்சம் ரூபாய் வரை அரசுக்குச் செலவாகும். இதனால் 2,51,335 குடும்ப உறுப்பினர்கள் பயனடைவார்கள்.

அரக்கோணம், தஞ்சாவூர், சங்கரி ஆகிய மூன்று பகுதிகளுக்கும் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம் இந்த வருடத்தில் நீட்டிக்கப்படும்.

மொத்தமுள்ள 4 மருத்துவமனைகள், 104 மருந்தகங்களில், 4 மருத்துவமனைகளும், 46 மருந்தகங்களும் கழகத்திற்குச் சொந்தமான கட்டடங்களிலும் ஏனையவைகள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்குகின்றன. தாம்பரம், வேலூர் மணப்பாறை திண்டுக்கல் ஆகிய இடங்களில் தனியார் வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கி வரும் மருந்தகங்கள் புதிய கட்டடங்களில் இயங்குவதற்கான அரசாங்க ஒப்புதல் பெற்று, மேற்படி கட்டுமான வேலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 206 படுக்கை வசதிகள் கொண்ட சென்னை, கே. கே. நகர் மருத்துவமனையில் 500 படுக்கைகள் வசதியுடன் மற்றொரு தளம் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. மேற்படி கட்டட வேலைகளின் வளர்ச்சி, முன்னேற்றத்தில் உள்ளது. தனியார் வாடகைக் கட்டடங்களில் தற்போது இயங்கும் இரண்டு மருத்துவர்களும் அதற்கு மேலும் உள்ள 51 மருந்தகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கக் கழகம் ஒத்துக் கொண்டுள்ளது.

தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் மருந்தகங்களுக்கான நிலையங்களை நில ஒப்படை செய்து கட்டடம் கட்டுவதற்கான வேலையைத் துரிதப்படுத்த தனி துணை மாவட்ட ஆட்சியர் ஒருவரையும் அவருக்குத் துணை புரிய இதர பணியாளர்களையும் அமர்த்த அரசு அனுமதி அளித்துள்ளது. ●

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' என்றார் வள்ளுவர். அத்தகு சிறப்புடைய வேளாண்மையின் மேம்பாட்டுக்குச் சீரிய திட்டங்கள் பல இந்த அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

---

வேளாண்மைக்குத் தமிழகத்தில் முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு வேளாண் பெருமக்களின் வாழ்வு மலர, விவசாயிகளிடம் அதிக அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு கடந்த இரண்டு ஆண்டுகளில் எண்ணிலடங்காத திட்டங்களை செயலாற்றியதோடு விவசாயிகளின் துயர் துடைத்திடப் பல சலுகைகளையும் அளித்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு சோதனையாகப் புயலும், மழையும் பெருத்த சேதத்தை விளைவித்துள்ளது அனைவரும் அறிந்ததே. எனினும் உடனுக்குடன் அரசு மேற்கொண்ட மீட்பு நடவடிக்கைகளால், பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிக்கப்பட்டன. தேவையான நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாக மேற்கொண்டது.



# வேளாண்மை வளர்ச்சி

புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்ட பயிர் உற்பத்தி இழப்புகளை ஈடுசெய்ய கோடைப் பருவத்தில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும் ஏரிகளிலும் கிணறுகளிலும் உள்ள தண்ணீர் வசதியைக் கொண்டு கூடுதலாக உணவுப் பயிர்கள் சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கப்பட்டதோடல்லாமல், அரசின் உதவிகளும் காலத்தே வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கு அரசு அளித்துள்ள குறிப்பிடத்தக்க சலுகைகளையும் வேளாண்மை உற்பத்தியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் செய்துள்ள சாதனைகளையும் கோடிட்டுக் காட்டுவது சாலப் பொருத்தமுடையதாகும்.

### அரசு வழங்கிய சலுகைகள்

விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் அளவு சலுகைகள்

இதுவரை எந்த அரசும் முனைந்து வேளாண் மக்களின் நீண்ட காலப் பிரச்சனைகளை ஆய்ந்து அறிந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளவில்லை. இந்த அரசு அமைத்த உயர் மட்டக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் உடனடியாக விவசாயிகளுக்கு 40 கோடி ரூபாய் கீழ்க்கண்ட சலுகைகளை அளித்துள்ளது.



## லெவி நீக்கம்

வெளி மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் நெல்லுக்கும், அரிசிக்கும் இப்போது மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டு வரும் 20 சதவிகித லெவியைக் கூட ஜூன் மாதம் முதல் தேதி முதற்கொண்டு அடியோடு நீக்கி விட அரசு முடிவு செய்துள்ளது.

## அரசுக் கடன்கள் ரத்து

அரசு வழங்கியுள்ள தக்காவிக் கடன்கள், விவசாயக் கடன்கள் சட்டத்தில் கீழும், மேம்பாட்டு சட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட கடன்கள், கிணறு வெட்ட வழங்கிய கடன்கள், மற்றும் கூட்டுறவுக் கடன்கள் ஆகியவற்றில் பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த மட்டில் சலுகைகள் காரணமாக ஏறத்தாழ 16 இலட்சம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாயும், தக்காவிகக் கடன்களைப் பொறுத்த வரையில் 15 இலட்சம் விவசாயிகளுக்கு 13 கோடி ரூபாய் அளவிலும் பல நிவாரணங்கள் அளிக்கப்பட்டுள்ளன.


## தக்காவிக் கடன்கள்

நிலமில்லாத விவசாயிகளுக்கு விவசாயப் பொருள்களுக்காக வழங்கப்பட்டுள்ள கடன்கள் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

மற்ற விவசாயிகளுக்கு முதல் 500 ரூபாய் முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அடுத்த 5000 ரூபாய் தொகை வரையில் 50 சதவிகிதம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

விவசாயக் கடன்கள் சட்டத்தில் கீழும் மேம்பாட்டுச் சட்டத்தின் கீழும் வழங்கப்பட்டுள்ள கடன்கள் அசலாகவோ, வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ வாங்கிய கடனுக்கு சமமான தொகை செலுத்தப்பட்டிருந்தால் கணக்குத் தீர்ந்துவிட்டதாக கருதப்படும். இதில் வணிகப் பயிர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களும் அடங்கும்.

மூலதன வசதிகளை உருவாக்க வழங்கப்பட்ட கடன்கள் அசலாகவோ வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ கடன் வழகப்பட்ட தொகைக்கு இரு மடங்கு செலுத்தப்பட்டிருந்தால் கணக்குத்தீர்ந்ததாக கருதப்படும்.



கிணறு தோண்டவும், குழாய்க் கிணறு அமைக்கவும் வழங்கப்பட்ட கடன்களுக்கும் இரு மடங்கு தொகை அசலாகவோ வட்டியாகவோ இரண்டும் சேர்ந்தோ செலுத்தியிருந்தால் கணக்குத் தீர்ந்ததாக கருதப்படும்.

கிணறு தோண்டக் கடன் வாங்கி அத்தொகைக்கு ஈடான தொகையை கிணறு வெட்ட செலவு செய்தபின் அக்கிணறு பொய்த்துவிட்டிருந்தால் முதல் ரூபாய் 10000வரை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மைத் துறை மூலம், மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களில் மண்வளப் பாதுகாப்பு, நிலத்தில் பூச்சி மருந்து அடித்தல் ஆகியவை தவிர மற்ற இனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தும் வசூல் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது.

மண்வளப் பாதுகாப்பிற்கான கடனில், அசலில் 50 சதமும் நிலத்திற்குப் பூச்சிமருந்து அடித்தலுக்கான கடனில் அசலுக்குச் சமமான தொகையும் செலுத்தப்பட்டு இருந்தால் கணக்குத் தீர்ந்ததாக கருதப்படும்.

மேலே குறிப்பிட்ட இனங்களைத் தவிர மற்ற இனங்களில் கடன் தொகைக்கு சமமாகச் செலுத்தப்பட்டிருந்தால் கணக்கு தீர்ந்ததாக கருதப்படும்.

இச்சலுகைகளுக்குப் பின்பும் செலுத்த வேண்டிய தொகை இருப்பின் அதை இரு தவணைகளாகச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவுக்கடன்கள்:

30.6.1978 அன்று தவணை தவறி நிலுவையில் இருந்த குறுகிய கால, மத்திய கால, நீண்ட கால விவசாயக் கடன்களுக்கு 30.6.1979 வரை உரிய அபராத வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப் பட்டுள்ளது. 30.6.1977 க்குப் பின் செலுத்தப்பட்ட அபராத வட்டி உறுப்பினர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கடன்கள் மத்திய காலக் கடன்களாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் ஒன்றோ அதற்கு மேற்பட்டோ இருப்பின் அக்கடன்களுக்கு 30.6.1978 வரை உரிய வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மாற்றி அமைக்கப்பட்ட கடன்கள் மொத்தமாக ஒரே கடனாக்கப்பட்டு அவைகளைத் திருப்பி செலுத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இச்சலுகைகள் தவிர 1.1.1979-க்கு முன் மாற்றியமைக்கப்பட்ட மத்திய காலக் கடன்களாக நிலுவையில் உள்ள கடன்களும் ஒன்றாக்கப்பட்டுத் திருப்பிச் செலுத்துவதற்



கான கால நீடிப்பு கொடுக்கப்பட இருக்கும் கடன்களுக்கும் வட்டி விகிதம் குறைக்கப்படும். மேற்படி கடன்களுக்குத் தற்போதுள்ள விதிகளின்படி 1.1.1979 முதல் சிறு விவசாயிகளின் கடன்களுக்கு 10.5 சதவிகித வட்டியும் இதர விவசாயிகளுக்கு 12 சதவிகித வட்டியும் நிர்ணயிக்கப்படும்.

## மிகக் குறைவான மின்சாரக் கட்டணம் :

முன்பு யூனிட்டிற்கு 16 காசாக இருந்ததை 14 காசாக குறைத்திட்ட அரசு, சிறு உழவர்களுக்கு யூனிட்டிற்கு 12 காசாகவும் இதர உழவர்களுக்கு 14 காசு என்றும் மாற்றி அமைத்தது. இதனால் ஆண்டுக்கு 6 கோடி ரூபாய் அளவு அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும் இந்தச் சலுகை 1.6.1978 முதல் செயலாக்கப்பட்டு வருகிறது.

மீட்டர் கட்டணம் ரூ. 5-லிருந்து ரூ. 4-ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் அளவு இழப்பு ஏற்படுகிறது.

## புயலும் நிவாரணமும் :

கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டு விவசாயிகள் புயலினாலும் வெள்ளத்தினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர், எனினும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடன் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகளால் அப்பயிர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சேதமும், உற்பத்தியில் ஏற்படவிருந்த பெருமளவு இழப்பும் தவிர்க்கப்பட்டன. கீழ்கண்ட நிவாரண நடவடிக்கைகளை அரசு உடனடியாகச் செயல்படுத்தியது.

## 1977-ஆம் ஆண்டில் நிவாரண நடவடிக்கைகள் :

## இலவச விதை விநியோகம் :

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காக தரமான நெல் விதைகள் சிறு உழவர்களுக்கும், குத்தகைச் சாகுபடியாளர்களுக்கும் 30 இலட்சம் ரூபாய் அளவிற்கு இலவசமாக வழங்கப்பட்டது.

## சிறு விவசாயிகளுக்கு மானியம் :

கரும்பு பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கு ரூபாய் 87,300- மானியமாக வழங்கப்பட்டது.

வாழை சாகுபடியாளர்களில் சிறு உழவர்களுக்கும் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூ. 5,43,600- மானியமாக வழங்கப்பட்டது.

வெற்றிலை பயிரிட்டிருந்த சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கும் ரூ. 10,27,000- மானியமாக வழங்கப்பட்டது.

எல்லா பயிர்களுக்கும் எல்லா விவசாயிகளுக்கும் ரூ. 100 இலட்சம் அளவிற்கு பூச்சி மருந்துகள் 25% மானிய விலையில் வழங்கப்பட்டன.

98200 தென்னங் கன்றுகள் இலவசமாக சிறு விவ்சாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மண் மேடிட்டுப்போன நிலங்களில் 7,064 ஹெக்டேரில் சிறு உழவர்கள் மற்றும் குத்தகை சாகுபடியாளர்களுக்கு இலவசமாகவும் ஏனைய உழவர்களுக்கு 50 சதவீத மானியச் செலவிலும் நிலச் சீர்திருத்தம் செய்து தரப்பட்டது.

## 1978-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட நிவாரண நடவடிக்கைகள் :

தாளடி, சம்பா பயிர் செய்வதற்காகச் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் ரூ. 2,11,770 பெறுமான தரமான நெல் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

பாதிக்கப்பட்ட வாழை மற்றும் கரும்புப் பயிர்களை புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் உதவித் தொகையாக ஏக்கருக்கு ரூபாய் 100 வீதம் ரூ. 79,400-வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட வெற்றிலை கொடிக்கால்களைப் புதுப்பிக்க சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 500- வீதம் ரூ. 3,51,370- அளிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குப் பதிலாக சிறுவிவசாயிகளுக்கு இலவசமாக 10042 தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன.

நீலகிரியில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 25 சதவிகித மானிய விலையில் ஏக்கருக்கு ரூ 250- வீதம் ஒரு நபருக்கு ரூ. 1000- வரை உருளைக் கிழங்கு விதைகள் வழங்கப்பட்டன. இந்த வகையில் ரூ. 38,600 மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இலவசமாக ரூ. 54,000- பெறுமான காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.

மண் மேடிட்ட நிலங்களையும், கிணறுகளையும் சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும் மற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்திலும் ரூபாய் ஆயிரம் உச்சவரம்பிற்கு உட்பட்டு வேளாண்மைத்துறை மூலம் சீர்திருத்தம் செய்து கொடுக்கப்பட்டது. இந்தவகையில் 35.53 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது.

## வரி விலக்கு:

புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நிலத்தீர்வை, இதர நீர்வரிகள் வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## கரும்புக்கு அதிக விலை :

மத்திய அரசு கரும்பின் விலையை டன்னுக்கு ரூ.35- ஆக நிர்ணயித்திருந்தாலும், கூட்டுறவு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் டன்னுக்கு ரூ. 100- முதல் ரூ. 125- வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

## உற்பத்தியில் உபரி :

இவ்விரு ஆண்டுகளில் விளை பொருட்களின் உற்பத்தியில் கணி

சமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1977இல் 62 இலட்சம் டன் அரிசியும், 19 இலட்சம் டன் சிறு தானியங்களும் 3 இலட்சம் டன் பயறு வகைகளும் 14 இலட்சம் டன் வெல்லமும் 4.04 இலட்சம் பேல் பருத்தியும் 12.29 இலட்சம் டன் எண்ணெய் வித்துக்களும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டு 64 இலட்சம் டன்கள் அரிசியும் 20 இலட்சம் டன்கள் சிறு தானியங்களும் 3.25 இலட்சம் டன்கள் பயறு வகைகளும் 14.07 இலட்சம் டன்கள் எண்ணெய் வித்துக்களும் 19.50 இலட்சம் டன்கள் வெல்லமும், 4.96 இலட்சம் பேல்கள் பருத்தியும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 1976 - 77இல் 1277 கிலோ என்று இருந்தது ஏக்கருக்கு சராசரி நெல் உற்பத்தி 1978-79 ஆம் ஆண்டு 1350 கிலோ என்ற அளவிற்கு உயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சிறப்புக் கோடை சாகுபடி திட்டம்:

புயலினாலும், வெள்ளத்தினாலும் ஏற்பட்ட பயிர் உற்பத்தி இழப்புகளை ஈடு செய்ய ஏரிகளிலும், கிணறுகளிலும் உள்ள தண்ணீர் வசதிகளைக் கொண்டு 1977-78 ஆம் ஆண்டில் கூடுதலாக 1.00 இலட்சம் ஹெக்டேர் நெல்லும், 0.41 இலட்சம் ஹெக்டேர் சிறு தானியங்களும், 1.55 லட்சம் ஹெக்டேர் நிலக்கடலையும் கோடையில் பயிரிடப்பட்டன.

இந்த ஆண்டும் கூடுதலாக 0.40 இலட்சம் ஹெக்டேர் நெற்பயிரும் 0.32 இலட்சம் ஹெக்டேர் சிறு தானியங்களும், 0.10 இலட்சம் ஹெக்டேர் பயறுவகைகளும் 0.35 இலட்சம் ஹெக்டேர் நிலக்கடலையும் 0.05 இலட்சம் ஹெக்டேர் எள்ளும் 0.42 இலட்சம் ஹெக்டேர் பருத்தியும் சாகுபடிக்கு கொண்டுவரத்திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

## குறைந்த செலவில் அதிகத் திறன் வாய்ந்த தொழில் நுட்பங்கள்:

சிறு விவசாயிகள் மற்றும் மிகச் சிறிய விவசாயிகளுக்கு சாகுபடிச் செலவைக் குறைத்து உற்பத்தித் திறனை உயர்த்தவல்ல குறைந்த செலவுள்ள உற்பத்தி நுணுக்கங்கள் உள்ள நவீன சாகுபடி முறைகள் விவசாயிகளிடையே பரவலாக்கப்பட்டுள்ளன.

உற்பத்திச் செலவைக் குறைக்கும் கருவிகளாக நஞ்சைக்கு 'கிராவிடர் அப்ளிகேட்டர்' மற்றும் மானாவாரி சாகுபடிக்கு புஞ்சைக்கேற்ற பலநோக்குக் கருவியும் விவசாயிகளுக்குச் சலுகை விலையில் அளிக்கப்படுகின்றன.

## பயறுவகைகள் விதை உற்பத்தி:

பயறுவகைகளின் விதைகள் உற்பத்தியை அதிகப்படுத்த 5 விதை உற்பத்தி நிலையங்கள், வட ஆர்க்காடு, திருநெல்வேலி மதுரை புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் துவக்கப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியுடன் கோவையில் மேலும் ஒரு விதை உற்பத்தி நிலையம் துவங்கப்பட்டுள்ளது.

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி:

நீர்த் தேக்கத்திலுள்ள சாதகமான தண்ணீர் வசதியைப் பயன்படுத்தி முதன்முறையாக பெருமளவு எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் இவ்வாண்டு கீழ் பவானி திட்டத்தின் கீழ் கூடுதலாக 32,000 ஹெக்டேரில் எள் பயிரிடப்பட்டுள்ளது.

## தென்னங்கன்றுகள் விநியோகம்:

ஆண்டுக்கு 12 இலட்சம் தென்னங் கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகித்து வந்ததை அதிகப்படுத்தி 1978-79 — ஆம் ஆண்டில் 14,30,000 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது ஒரு சிறந்த சாதனையாகும்.

தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க கோயம்புத்தூர், கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தென்னை தீவிர அபிவிருத்தி சாகுபடித் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குட்டை நெட்டை ஒட்டுத் தென்னங் கன்றுகள் தஞ்சை மாவட்டத்திலுள்ள பட்டுக்கோட்டையில் ஆண்டுக்கு ஒரு இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## இரசாயன உர விநியோகம்:


1976-1977 ஆம் ஆண்டு 2 இலட்சம் டன் தழைச் சத்தும் 0.45 இலட்சம் டன் மணிச்சத்தும், 0.57 இலட்சம் டன் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

1978-79-ஆம் ஆண்டு 2.90 இலட்சம் டன்கள் தழைச்சத்தும் 0.94 இலட்சம் டன்கள் மணிச் சத்தும், 1.07 இலட்சம் டன்கள் சாம்பல் சத்தும் தரவல்ல இரசாயன உரங்களை விநியோகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## பயிர்ப் பாதுகாப்பு:

நெற்பயிரைத் தாக்குகிற புகையான், தண்டுத் துளைப்பான் மற்றும் நிலக்கடலையில் தோன்றும் சிகப்பு கம்பளிப் புழுவினை ஒழிக்க ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் 1977-78இல் நெற் பயிரில் 34,000 ஹெக்டேர் பரப்பிலும், மணிலாவில் 53,000 ஹெக்டேர் பரப்பிலும், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 மானியம் அளிக்கப்பட்டு இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

1978-79-ஆம் ஆண்டு நெற் பயிரில் 41,000 ஹெக்டேர் பரப்பிலும், மணிலாவில் 88,000 ஹெக்டேர் பரப்பிலும் பயறு





வகையில் 38,400 ஹெக்டேர் பரப்பிலும் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

உடுமலை, பொள்ளாச்சி மற்றும் பெரியகுளம் பகுதிகளில் பெருமளவில் தோன்றி சேதம் விளைவித்து வரும் 'புரோடீனியா' புழுக்களை ஒழிக்க 1977-78 ஆண்டு 25 சதம் மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வகையில் மானியமாக ரூ. 53,148 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பணி 4378 ஹெக்டேர் பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டு புதிய முறையில் 'புரொடீனியா'வைக் கட்டுப்படுத்த முதன் முறையாக வைரசு வினியோகம் செய்து எந்தவித செலவுமில்லாமல் அறவே ஒழித்து மிகச் சிறந்த ஒரு செயலாகும்.

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் 10,500 ஹெக்டேரில் கையாளப்பட்டு பருத்தியில் அதிக சேதத்தை விளைவிக்கும் கார்ப்புழுக்களை திறமையாக கட்டுப்படுத்தியதோடு மருந்து தெளிக்கும் செலவினை பாதி அளவிற்கு குறைக்கச் செய்தது ஒரு சிறந்த சாதனையாகும்.

நெல்லைத் தாக்கி பெருமளவில் சேதப்படுத்தும் புகையான் பூச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக 1977-78—ஆம் ஆண்டு 20,000 ஹெக்டேரில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1978-79-ஆம் ஆண்டு 18,000 ஹெக்டேரில் இப்பூச்சிகளை ஒழிக்க குறிப்பாக மதுரை மாவட்டத்தில் சோழவந்தான் பகுதியிலும் தஞ்சை மாவட்டம் முழுவதிலும் கோவை மாவட்டத்தில் கோபிச் செட்டி பாளையம் பகுதியிலும் 8 இலட்சம் ரூபாய் மானியத்தில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டது.

## தோட்டக் கலை வளர்ச்சி :

தோட்டக் கலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தியை அதிகப்படுத்த தோட்டக் கலை இயக்ககம் ஒன்று தனியே அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

பழ உற்பத்தியை அதிகரிக்கவும், மாதிரி பழப் பண்ணையாக விளங்கவும், புதுக்கோட்டையில் 1,000 ஏக்கர் அளவில் ஒரு மாபெரும் பழப்பண்ணை துவக்கப்பட்டுள்ளது.



திருச்சி மாவட்டம் முதலைப் பட்டியிலும் வட ஆர்க்காடு மாவட்டத்தில் நவ்லாக்கிலும் இரண்டு வாழை நாற்றங்கால்கள் புதிதாக நிறுவப்பட்டுள்ளன.

## புதிய ரகங்கள் :

பயிர்களின் உற்பத்தியை உயர்த்தவல்ல 16 புதிய ரகங்களை விவசாயிகளுக்காக வேளாண்மைத் துறை 1977-78 இல் வெளியிட்டது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் 8 புதிய ரகங்களை வெளியிட்டது.

1978-79-இல் வேளாண்மைத் துறை 12 புதிய ரகங்களையும் வேளாண்மைப் பல்கலைக் கழகம் 13 புதிய ரகங்களையும் விவசாயிகளுக்காக வெளியிட்டுள்ளது.

## விதை சான்றிதழ் திட்டம் :

1978-79 ஆம் ஆண்டில் 4600 ஹெக்டேரில் நெல்லும் 1600 ஹெக்டேரில் வீரிய ஒட்டுச் சிறு தானிய ரகங்களும், 390 ஹெக்டேரில் வீரிய ஒட்டு பருத்தி ரகங்களும் சான்றிதழ் விதைத் திட்டத்தின் கீழ் சான்றிதழ் வழங்கப்பட்டன. இதன் மூலம் விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கிடைக்க வாய்ப்புள்ளது. மேலும் இந்த அரசு விதைச் சான்றிதழ் திட்டத்தை ஒரு தனி இயக்கமாகச் செயல்படுத்துகிறது.

தமிழ்நாட்டிலிருந்து சான்றிதழ் பெற்ற விதைகளை வெளி மாநிலங்களிலுள்ள விவசாயிகள் விரும்பி வாங்குகிறார்கள். இதன் மூலம் தமிழ்நாட்டில் விதை உற்பத்தியை அதிகப்படுத்தவும் விவசாயிகளுக்கு அதிக வேலை



வாய்ப்புகள் பெருகவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

**விதை சுத்திகரிப்பு நிலையங்கள் :**

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கோவை மாவட்டத்திலுள்ள பவானியிலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளத்திலும், திருச்சி மாவட்டத்திலுள்ள இறுங்கூரிலும் மூன்று புதிய பெரிய விதை சுத்திகரிப்பு நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் வருடத்திற்கு சுமார் 4,000 டன் விதைகள் அதிகப்படியாகச் சுத்தம் செய்து விநியோகிக்கப்படுகின்றன.

**பரிசோதனை நிலையங்கள் :**

1978-79ஆம் ஆண்டு விவசாயிகளுக்குத் தரமான விதை கிடைக்க வழி செய்யும் வகையில் புதுக்கோட்டையில் மேலுமொரு விதைப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு அனுமதித்துள்ளது.

உரங்களைப் பரிசோதனைச் செய்ய கோயில்பட்டியிலும், பூச்சி மருந்துகளை பரிசோதனை செய்ய காஞ்சிபுரத்திலும் புதிய பரிசோதனை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**உழவர்களுக்குப் பயிற்சி :**

1977-78 ஆம் ஆண்டு புதுக்கோட்டை, கன்னியாகுமரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் 1978-79 ஆம் ஆண்டில் சேலம், இராமநாதபுரம், நீலகிரி மாவட்டங்களிலும், உழவர் பயிற்சி நிலையங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனால் தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களிலும் உழவர் பயிற்சி நிலையங்கள் செயல்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**விற்பனையும் தரக் கட்டுப்பாடும்:**

வேளாண்மை விளை பொருள் விற்பனை இயக்ககம் ஒன்றை தனியான 1977-ஆம் ஆண்டு அக்டோபர் 14-ஆம் தேதி அரசு ஏற்படுத்தியுள்ளது. விற்பனைக் குழுக்கள் தங்களது பணிகளை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் விற்பனை வசதிகளை அதிகப்படுத்தவும் விவசாயிகளின் விளை பொருள்களுக்கு நல்ல விலையைப் பெறுவதற்கும் இந்த தனித்துறை மிக உதவியாக இருக்கும்.

**ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தி திட்டம்:**

சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளின் வாழ்வு மலர 1978-79 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் சுமார் 50 சதவிகித வட்டாரங்களில் செயல்படத் தொடங்கியது. இத்திட்டம் படிப்படியாக எல்லா வட்டாரங்களுக்கும் விரிவாக்கப்படும்.

**வறட்சிச் சார்புப் பகுதி திட்டம் :**

வறட்சிச் சார்பு மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்ட நலனுக்கெனச் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கென 1978-79ஆம் ஆண்டு 342 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1979-80 ஆம் ஆண்டிற்கு 464 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இந்த நிதி ஒதுக்கீடு குறிப்பாக அம்மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகள் மிகச் சிறு விவசாயிகள் நிலமற்ற விவசாயிகள் வாழ்வு மலரச் செலவிடப்படும்.

**பெரிய விளக்கப் பண்ணைகள் :**

மானாவாரி விவசாய மக்களின் வருமானத்தைப் பெருக்க மண் வளப் பாதுகாப்பு, மற்றும் நீர் பராமரிப்பு முறைகள் 400 ஹெக்டேர் ஒருங்கிணைந்த தனைகளில் புதிய முறையில் முதல் முறையாக செயல்படத் தொடங்கியுள்ளது. இந்த விளக்கப் பண்ணைகள் 100-க்கும் மேற்பட்ட இடங்களின் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## பொறியியல் பிரிவு

**கசிவுநீர்க் குட்டைகள் :**

நில நீர் வளத்தை பெருக்க 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளில் 257 கசிவு நீர் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளன.

**காற்றரிப்புத் தடை திட்டம் :**

மதுரை மாவட்டம் போடி நாயக்கனூர் பகுதிகளில் காற்றரிப்புத் தடை அமைக்கும் திட்டம் 1977-78 ஆம் ஆண்டில் 1633 ஹெக்டேர் நிலத்திலும் 1978-79-ஆம் ஆண்டில் 1632 ஹெக்டேர் நிலத்திலும் மேற்கொள்ளப்பட்டது.

**மண்வளப் பாதுகாப்பு :**

சமவெளிப் பகுதிகளிலும் மலைப் பகுதிகளிலும் 1977-78-ம் ஆண்டு 39620 ஹெக்டேரிலும், 1978-79 ஆம் ஆண்டு 42820 ஹெக்டேரிலும் மண்வளம் பாதுகாப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

**சிறு பாசனம் :**

1977-78-ஆம் ஆண்டு 4172 குழாய்க் கிணறுகளும் 2689 வடிமுனைகுழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. 1978-79 ஆம் ஆண்டு 4692 குழாய்க் கிணறுகளும் 2587 வடிமுனைக்குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டன. மேலும் 1977-78 ஆம் ஆண்டு 2215 கிணறுகளும் 1978-79 ஆம் ஆண்டு 2573 கிணறுகளும் ஆழப்படுத்தப்பட்டன.

அரிசன பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் அரசு ஆற்றி வரும் அரும்பணிகள் பல.

# அரிசன மக்கள்- பழங்குடியினர் நல்வாழ்வுக்கு

தமிழகத்திலுள்ள அரிசன- பழங்குடியினரின் எண்ணிக்கை 76 இலட்சமாகும். இது, நமது மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில், 18 சதவீதமாகும்.

அரிசன, பழங்குடியினர் சிறு தொழில்கள் நடத்துவதற்கு வட்டியில்லாக் கடன் தொகை வழங்க அரசு அனுமதித்துள்ளது.

## பாசனக் கிணறுகள் வெட்ட உதவித்தொகை

வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டு இருக்கும் அரிசன,பழங்குடி மக்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு உதவித் தொகை வழங்குவதன் மூலம் அவர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களை மேம்படுத்த அரசு முயன்று வருகிறது. இதற்காக, பாசனக் கிணறு வெட்டுவதற்குரிய உதவித் தொகைத் திட்டத்தைத் திருத்தி அமைத்துள்ளது. இதன் விளைவாக கிணறு வெட்டப்படுவதற்குரிய மொத்தச் செலவில் 1/3 பாகம் உதவித் தொகையாகவும் 2/3 பாகம் நில வள வங்கிகளின் மூலம் கடனாகவும் வழங்கப்படுகிறது. 1979-80ல் அரிசனங்களுக்கு ரூபாய் 7.50 இலட்சமும், பழங்குடியினருக்கு ரூபாய் 1.9 இலட்சமும் இந்த வகையில் செலவிடப்பட்டது. கிறித்துவராக மாறிய அரிசன மக்களுக்கும் இதே வகைச் செலவுக்காக ரூபாய் 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது

## பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் :

ஏழை அரிசன மக்களுக்கு உதவுவதற்காகவும் அவர்களுக்கு கூடுதல் வருவாய் ஏற்படுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பால் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களை அரசு உருவாக்கி உள்ளது. இச்சங்கத்தில் உறுப்பினராக உள்ள ஒவ்வொரு அரிசன உறுப்பினருக்கும் கால்நடை ஒன்றுக்கு 1500 ரூபாய் வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு 500 ரூபாய் அரிசன நிதியிலிருந்து மான்யமாக வழங்கப்படுகிறது. நாட்டுடமை ஆக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1000 ரூபாய் கடனாகவும் வழங்கப்படுகிறது. இப்பணிக்கு 1979-80ஆம் ஆண்டிற்கு ரூபாய் 10.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## தனிப்பயிற்சித் திட்டம்

அரசுக் கல்லூரிகளிலும் அரசின் உதவி பெறும் கல்லூரிகளிலும், புகுமுக வகுப்பு-மூன்றாண்டுப் பட்ட வகுப்பு ஆகியவற்றில் பயிலும் அரிசன பழங்குடி மாணவ, மாணவியர்க்குத் தனிப் பயிற்சி அளிப்பதற்கு 1978-79 ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்ச ரூபாயை அரசு செலவிட்டு உள்ளது. இந்தத் தனிப் பயிற்சி அவர்கள் பயிலும் கல்லூரிகளிலேயே - கல்லூரி நேரத்திற்குப் பின்னர் அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் உள்ள 169 கல்லூரிகளில் இந்தத் திட்டம் அமல் செய்யப்படுகிறது.

20 அரிசன, பழங்குடி இனப் பெண்களுக்கு வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி பெட்டி சம்பந்தப்பட்ட தொழில் நுட்பப் பயிற்சி அளிப்பதற்காக அரசு 1978-79 ஆம் ஆண்டுக்கு 17,000 ரூபாய் செலவிட்டது.

## தீண்டாமை ஒழிப்பு

தற்போது குடிஉரிமைகளைப் பாதுகாக்கும் பணியை மாநிலம் முழுவதும் முனைப்பாகவும், வலுவாகவும் நடத்துவதற்குரிய வகையில் சுற்றும் காவல் படைகள் மேலும் 7 அமைக்க 1979 ஜனவரியில் அரசு அனுமதியளித்துள்ளது.

1977-78ஆம் ஆண்டில், தமிழ்நாடு முழுதும் அரிசனங்களுக்கு 5000 வீடுகளை தமிழ்நாடு அரிசன வீட்டு வசதிக் கழகத்தின் மூலம் அரசு கட்டித் தரும். 79ஆம் ஆண்டிற்கு 1000 வீடுகள் கட்டப்படும்.

1977-78ல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலையில் பழங்குடியினருக்கு 42 வீடுகளைக் கட்டித் தந்துள்ளது.

1978-79ல் சேலம் மாவட்டத்தில் உள்ள சின்ன கல்ராயன் மலையில், பழங்குடியினருக்கு 22 வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

## பழங்குடியினர் நலன்

பழங்குடியினர் 1.46 இலட்சம்பேர்கள் வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்து வருகிறார்கள்!

வேளாண்மை - கால் நடை வளர்ப்பு-மண்வளப் பாதுகாப்பு-சிறு பாசனம்-சாலை அமைப்பு-வேளாண்மை இடுபொருள்கள் விநியோகம், புதுவாழ்வுப் பணிகள், பள்ளிகள், அரசு மருத்துவமனை உருவாக்கல், மகப்பேறு நிலையங்கள், உரங்கள், கோழி வளர்ப்பு - தேனீ வளர்த்தல் ஆகிய திட்டங்களுக்காக 1977-78க்கு ரூ. 153 இலட்சம் செலவிடப்பட்டது. 1978-79ல் ரூ. 200 இலட்சம்செலவிடப்பட்டது.


1977-78ஆம் ஆண்டு வரை அரிசன -பழங்குடி மாணவர்களுக்கும் மதம் மாறிய அரிசன மாணவர்களுக்கும், மெட்ரிக்படிப்புக்கு முந்திய படிப்புக்கும், புத்தகச் செலவுக்கும், சிறப்புக் கட்டணத்துக்கும்தேர்வுக்கட்டணத்துக்கும், படிப்புதவித் தொகை பணமாக வழங்கப்பட்டது. இந்த உதவித் தொகையை வழங்குவதற்கு பெற்றோர் அல்லது காப்பாளரின் ஆண்டு உச்ச அளவு வருமான வரையறை 3000 ரூபாயாக இருந்தது. 1978-78ஆம் ஆண்டிலிருந்து பெற்றோரின் ஆண்டு வருமானத்தைக் கருத்தில் கொள்ளும் அளவுகோல் முறை ஒழிக்கப்பட்டு விட்டது.

உடற் பயிற்சிக் கல்லூரி, பி.லிட் வகுப்பு உள்ள கல்லூரி, சமையற் கலைக் கல்லூரி,மைய போதகர் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் பயிலும் அரிசன, பழங்குடி- மாணவர்களும் கிறித்துவராக மதம் மாறியவர்களும் படிப்புக் கட்டணங்கள் செலுத்த வேண்டியதில்லை.

## இறுதிச் சடங்குகளுக்குத் தொகை கொடுத்தல்

மிக ஏழையாக உள்ள அரிசன பழங்குடி மக்கள்,குடும்பத்தினரில் ஒருவர் இறந்துவிட்டால்-இறுதிச் சடங்கிற்காக ரூ. 50 நிதியுதவியை 1978ஆம் ஆண்டிலிருந்து அரசு வழங்கி வருகிறது. 1978-79ஆம் ஆண்டில் 3857 பேருக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 4.33 இலட்சம் வழங்கப்பட்டது. 1979-80ஆம் ஆண்டுக்கு ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

# ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி




## செலவு குறைவு தரமான வண்டி

நீங்கள் வாங்கும் டிரக் நன்றாக உழைக்கவேண்டும், அதற்கு டீஸல் அதிகமாகச் செலவழியக்கூடாது, எஞ்சின் அருமையானதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்பார்க்கிறீர்கள் அல்லவா? உங்கள் எண்ணப்படியே அமைந்த வண்டிதான் ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி.

ஒரு லிட்டர் டீஸலுக்கு ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டி 11 கிலோமீட்டருக்கும் அதிகமாக ஓடுகிறது. எனவே ஒவ்வொரு முறை டீஸல் போடும்போதும் உங்களுக்கு எவ்வளவு பணம் மிச்சமாகும் என்று யோசித்துப் பாருங்கள்.

## திறமை அதிகம்

ஸ்டாண்டர்ட்-20 டீஸல் வண்டியில் ஒரு டன் சுமையை ஏற்றலாம். அல்லது 12 ஆட்களுக்கு மேல் பிரயாணம் செய்யலாம். உங்கள் விருப்பப்படி டெலிவரி வேன், மினி பஸ், பிக்கப் வேன் அல்லது ஆம்புலன்ஸ் வண்டியாகப் பயன்படுத்துங்கள். கண்ணைக் கவரும் அழகான பாடியுடன் கிடைக்கிறது இந்த வண்டி.

மேல்நாட்டு தரங்களுக்கேற்றபடி எஞ்சின் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் வண்டியில் அநாவசியக் குலுக்கல்கள் இருக்காது. அதிர்வுகளும் இருக்காது. அதிக ஓசையும் கிடையாது. குளிர்ந்த நிலையிலிருந்தும் சட்டென்று வண்டியை ஸ்டார்ட் செய்யலாம்.

இப்போது இந்த வண்டி டி.ஜி.எஸ். & டி. ரேட் காண்ட்ராக்ட்படியும் கிடைக்கிறது.

**ஸ்டாண்டர்ட்-20 டீஸல்**

**சிக்கனமான வண்டி!**

**ஸ்டாண்டர்ட் மோட்டார் பிராடக்ட்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்**

**மவுண்ட் ரோடு, சென்னை 600 002,**

FDS SMPI 2282 TAM

ஊரகப்பகுதிகள் வளர்ச்சிதான் சமுதாயத்தின் உண்மையான மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக அமையும், எனவே, ஊரகப் பகுதிகள் முன்னேற்றத்தில் இந்த அரசு பெருங்கவனம் செலுத்தி வருகிறது.

# ஓங்கி வளரும் ஊரகப் பகுதிகள்

ஊர்ப்புற மக்கள் வாழ்வில் அனைத்து முன்னேற்றங்களையும் ஏற்படுத்தும் உயர்ந்த நோக்குடன் சமுதாய வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அத்தகைய திட்டம், வாழ்க்கையில் உயர் நிலைகளை எய்துவதற்காக மக்களை விழித்தெழச் செய்து, ஊக்குவித்து, உழைக்கத் தூண்டும் ஒரு திட்டமாகும்.

தனி மனிதன் தன்னைத்தானே உயர்த்திக் கொள்ளும் திட்டம்தான் இது எனினும், மக்களின் ஆக்கங்களிலும் ஊக்கங்களிலும், அரசு பெரும் பங்கேற்று அம்மக்களின் வருவாயைப் பெருக்குவதற்கு வழி வகுக்குகிறது.

பொருளாதார சமூக மற்றும் பண்பாட்டு நிலைகளில் சமுதாயம் மேம்பட்டுத் திகழச் செய்வதே இதன் இன்றியமையா நோக்கம். எனினும், ஆண்டுகள் உருண்டோடும்போது, பலவகையாகப் பிரிவு பெற்று இயங்கிக் கொண்டிருக்கும் சமுதாய நீரோடைகள், நாட்டு முன்னேற்றம் என்ற ஆற்றில் ஒன்று சேர்ந்து கலக்க, அந்த நாட்டின் வளத்திற்கு அவைகள் இறுதியில் தம்மை முழுவதும் ஈடு படுத்திக் கொள்கின்றன.

மக்கள் தமக்குரிய திட்டங்களைத் தாமே வகுத்து தாமே நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணத்தைச்செயலில் காட்டும் முன்னேற்றப் பாதையைத்தான் ''சமுதாய வளர்ச்சி'' என்ற கைகாட்டி காட்டுகிறது. எனவே, அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணியில் அவர்களையே ஈடுபடுத்தினால் தேவைப்படும் நேரத்தில் தேவைக்கும் அதிகமான முன்னேற்றம் ஏற்படும் என்ற எண்ணம், சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இதயமாகும். மேலும், இத்திட்டம், ஒருங்கிணைந்த ஒத்துழைப்பை மக்கள் மனமுவந்து அளிக்கின்ற திட்டமாகவும் அமைவதால், வளர்ச்சிப் பணிகளில் தளர்ச்சியின்றித் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள சமுதாயம் முழுவதுமே தூண்டி விடப்படுவதற்கான வாய்ப்பு அப்போது உருவாகிறது. இத்தகைய சாதனை எல்லைகளை அடைய உறுதி அளிக்கும் சட்டபூர்வமான அமைப்புகளாக ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் திகழ்கின்றன.

ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு திட்டங்களை நிர்வகிப்பதற்கு இந்த இரண்டு ஆண்டுகளில் நிதி முதலீடுகளின் அளவு சுமார் ரூ. 276 கோடி ஆகும்.


## நிதிநிலை மற்றும் திட்டங்களின் சாதனைகள்

ஊர் வளர்ச்சித் திட்டங்களுக்காகும் நிதிச் செலவு படிப்படியாக உயர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. 1974-75 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு மற்றும் வட்டாரத்திற்கென வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

| ஆண்டு | நிதி ஒதுக்கீடு | ஒரு வட்டாரத்திற்கு வழங்கப்பட்ட சராசரி நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | (ரூ. இலட்சத்தில்) | |
| 74—75 | 1,04,22,05 | 27.87 |
| 75—76 | 1,11,23.87 | 29.74 |
| 76—77 | 1,16,25.40 | 31.08 |
| 77—78 | 1,32,55.30 | 35.44 |
| 78—79 | 1,43,07.36 | 38.25 |
| 79—80 | 1,81,56.90 | 48.55 |

மக்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு. ஊரக வளர்ச்சிக்கென அரசு அளிக்கும் முக்கியத்துவத்திற்கு இவை வெளிப்படையான சான்றுகளாகும்.





# உங்களுடைய மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர் அடிக்கடி பெட்ரோல் பங்கிற்கு போக வேண்டியிருந்தால்


ஐபெக்ஸ் கார்புரேட்டர் பொருத்துவது உங்கள் வண்டியை புதியதாக்குவதற்கு ஒப்பாகும்.

விஜய் டீலக்ஸ், விஜய் புஷ்பக், லாம்பி, சுவேகா, சுஜாதா, வினய் வண்டிகளுக்கு ஐபெக்ஸ் கார்புரேட்டர்கள் ஒரிஜினலாகப் பொருத்தப்படுகின்றன.

ஆகவே உங்கள் கார்புரேட்டரை மாற்றும் நேரம் வரும் போது ஐபெக்ஸ் கார்புரேட்டரையே தேர்ந்தெடுங்கள்—ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், மொபெட் தயாரிப்பாளர்கள் புதிய வண்டிகளில் பொருத்த அதையே தேர்ந்தெடுக்கிறார்கள்.




'ஐபெக்ஸ்' கார்புரேட்டர்—
சிக்கனத்துக்கு மறு பெயர்.



உடனே அதற்குத் தேவை
'ஐபெக்ஸ்' கார்புரேட்டர்.

IBEX

கார்புரேட்டர்ஸ் லிமிடெட்,
118, மவுண்ட் ரோடு, சென்னை 600 002

FDS/C/2772/TAM

''உள்ளூர் செஸ் மேல்வரி''யின் மூலம் ஊராட்சி ஒன்றியங்கள் தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. அதை ஊக்குவிக்கும் வகையில் உள்ளூர் செஸ்மேல் வரி இணை மானியமாக அரசு அளிக்கும் ஊக்குவிப்புத் தொகை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவது இதற்குச் சான்றாகும். 1979-80 ஆம் ஆண்டில் மட்டும் உள்ளூர் செஸ்மேல் வரி இணை மானியத்திற்காக மட்டும் ரூபாய் 1,700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்கள் வரி விதிக்கின்றன. 1979-80ஆம் ஆண்டு அத்தகைய வரி மட்டும் ரூ. 115 இலட்சத்தை எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது.

**குடிநீர் வசதி :**

இந்த அரசினுடைய முதல் தலையாய குறிக்கோளான கிராமப் புறங்களில் இருக்கின்ற மக்களுக்கு நல்ல பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் எல்லாருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளிற்கிணங்க (இது வரை) முடிவடைகின்ற கடந்த இரண்டாண்டில் கீழ்க்கண்டுள்ளதுபோல் வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

1. தரை மட்ட நீர் தேக்கத் தொட்டிகள்: — 454
2. மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகள்: — 440
3. தானியங்கு அழுத்தத் தொட்டி — 91
4. கைப் பம்புகள்: — 3034
5. திறந்த கிணறுகள்: — 1488
6. ஆழ் குழாய்க் கிணறுகள் — 602
7. முன்பே உள்ள கிணறுகளை ஆழப் படுத்தியது — 5[illegible]2

**இணைப்புச் சாலைகள் :**

இணைப்புச் சாலைகள் இல்லாத இன்னும் சில கிராமங்கள் உள்ளதால் அக் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்தப் படவேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்க்கைத் தரம் உயருவதற்கு வாய்ப்பு வசதி ஏற்படும் என்கிற அடிப்படையில் மாநில, மற்றும் மத்திய அரசு, மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்து 1978-ஆம் ஆண்டு சுமார் 80 இலட்சம் ரூபாயும், 79ஆம் ஆண்டுரூ 80 இலட்சம் இணைப்பு மதிப்புள்ள சாலைகள் எல்லா மாவட்டங்களில் உள்ள எல்லா ஒன்றியங்களில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இணைப்புச் சாலைகளுக்கான நிதி ஒதுக்கீட்டினைப் புதிய சாலைகளை அமைப்பதற்குப் பயன்படுத்தாமல், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்துவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் கடந்த இரண்டாண்டுகளில் கீழ்வருமாறு சாலைகள் அமைத்துப் பராமரித்து வருகிறது:

1. மண் சாலை சரல்போட்ட சாலையாக மாற்றியமைக்கப் பட்டுள்ளது — 436 கி. மீ.
2. சரல்போட்டசாலை சல்லி போட்ட சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது — 348 கி. மீ
3. சல்லி போட்ட சாலை தார் போட்ட சாலையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. — 22கி. மீ.
4. சிறு பாலங்கள் — 69 கி.மீ.
5. தாம்போகிகள்: — 7 கி. மீ.

**பள்ளிக் கட்டடங்கள் :**

தொடக்க, முதல் தொடக்கப்பள்ளிக் கட்டடங்கள், உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் ஆகியவற்றிற்கு முறையே ரூ. 20,000 ரூ. 30,000-த்தை உயர் மதிப்பீடாகக் கொண்டு அரசு மான்யம் வழங்கப்பட்டுவருகின்றது. இது தவிர கீழ்வரும் பள்ளிக் கட்டடங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

சொந்தக் கட்டடம் இல்லாப் பள்ளிகள் (தொடக்கப்பள்ளி) — 436

சொந்தமாகக் கட்டப்பட்ட புதுப் பள்ளிக் கட்டடங்கள் (உயர்தர தொடக்கப்பள்ளிகள்) — 31

**புயல் மற்றும் வெள்ள நிவாரண வேலைகள் :**

எதிர்பாராத பயங்கரமான புயல், வெள்ளத் தாக்குதல்களின் காரணமாக ஏற்பட்ட சிறுபாசன வசதிகள், ஏரிகள், ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடங்கள் ஆகியவைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் மொத்தமாக பலகோடி ரூபாய் மதிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சேதங்களுக்குட்பட்டவைகளைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு அரசு ரூ.36.8 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது. செப்பனிடும் வேலைகள் தொடங்கி விட்டன.

**முறைசாராக் கல்வி:**

ஒவ்வொரு ஆண்டும் பள்ளி சேர்கின்ற குழந்தைகள் தொடர்ந்து படிப்பினை மேற்கொள்ளாமல் நடுவில் தங்களால் இயன்ற வருமானம் ஏற்படும் என்கின்ற வேலைகளைச் செய்ய வேண்டுமென்று பள்ளியிலிருந்து விடுபட்டுச் சென்று விடுகின்றனர். சுமார் 20 முதல் 30 சதவிகிதம் இப்படி பிள்ளைகள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளிகளிலிருந்து கல்வி பெறாமல் விடுபடுகின்றனர். இவர்களுடைய அறிவு செம்மைப்பட முறைசாராக் கல்வித் திட்டத்தை அமல்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியமும் ஒவ்வொரு கல்வி நிலையம் நிறுவ வேண்டும் என்ற அரசு ஆணையின்படி 780 முறை சாராக் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. இதனால் பல மாணவர்கள் பெரும் பயனை அடைந்து வருகின்றனர். மேற்படி நிலையங்களைப் பராமரிக்க ரூ.4.68 இலட்சம் செலவழிக்கப்படுகிறது. இன்னும் 220 நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

ஊராட்சி உள்ளாட்சித்துறையின் மூலமாக ஆக்கப்பணிகளுக்குத் தேவையான மேம்பாட்டுத் திட்டங்கள், நலப்பணித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு நடைபெற்று வருகின்றன.

# மக்கள் நலங்காக்கும் மகத்தான பணி!

**நாடு நலம் பெற வேண்டுமெனின், நாட்டு மக்களின் நலம் காக்கப்பட வேண்டுமெனப் பாடுபட்டுவருவது மக்கள் நல்வாழ்வுத் துறை!**

வலிமையான உடல்நலத்துடன் ஒவ்வொரு குடிமகனும் சுக வாழ்வு நடத்தி, ஒளிமயமான நல் வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகக் கடந்த இரு ஆண்டுகளில் மக்கள் நல்வாழ்வுத் துறை, பல்வேறு திட்டங்களைத் துரித கதியில் இயக்கிக் கொண்டிருக்கிறது.

தற்போது ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஆண்டு ஒன்றிற்கு மருந்துகள் வாங்குவதற்கென ரூ. 14,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**நடமாடும் மருத்துவப் பணிகள்**

கிராம மக்களுக்கு அவர்கள் இருப்பிடங்களிலேயே மருத்துவ வசதிகள் அளிக்கும் நோக்குடனும், இந்நாட்டிலேயே முதன்மையான புதிய ''நடமாடும் மருத்துவக் குழுத்'' திட்டத்தை, 1977-'78-ஆம் ஆண்டில் 24 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இவ்வரசு துவக்கியுள்ளது. 1978-'79-ஆம் ஆண்டில் இத் திட்டம் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளது, 1979-'80-ஆம் ஆண்டில் ரூபாய் 62.43 இலட்சம் செலவில் மேலும் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளது.

ஒன்றியத்திலுள்ள எல்லா கிராமங்களுக்கும் மருத்துவ அலுவலர்கள் ஒரு வார காலத்தில் ஒரு முறை சென்று வருவார்கள். சிக்கலான நோயாளிகளை அருகிலுள்ள மருத்துவ மனைகளுக்கு சிறப்புச் சிகிச்சைக்கு அனுப்பி வைப்பார்கள்.

**பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டம்**

மத்திய அரசு உதவித் திட்டமான பலநோக்கு நல்வாழ்வுப் பணியாளர் திட்டத்தின்கீழ், செயல்முறைகளில் அடிமட்ட அளவில் ஒருங்கிணைப்பு இருக்கும். இத் திட்டம் கன்னியாகுமரி, மதுரை, தென்னார்க்காடு, சேலம், செங்கற்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.



**தாய்-சேய் நல நிலையங்கள் :**

தாய்-சேய் நலத் திட்டத்தின் கீழ் கிராமப் பகுதிகளில் அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களால் ஏற்படுத்தப்பட்டுப் பராமரிக்கப்படும் பல மகப்பேறு நிலையங்கள் மூலமாக இப்பணி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகளில் 2,983 மகப்பேற்று நிலையங்கள் உள்ளன. மானிய உதவித் திட்டங்களின் கீழ், ஊராட்சி ஒன்றியங்களால் ஏற்படுத்தப்பட்ட 2880 நிலையங்களும் இதில் அடங்கும்.

**மக்கள் நிலையை உயர்த்துதல் :**

நல்ல சத்துணவு இல்லாமல் நோய்க்கு ஆளாகின்ற மக்களுக்கு இந்தச் சத்துணவுத் திட்டத்தின் கீழ், நல்ல சத்துணவு அளிக்கப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாய்-சேய் நல நிலையங்கள், குழந்தைகள் காப்பகங்கள், பள்ளிகள் ஆகியவற்றிலும் குறிப்பாகத் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும், சத்துணவு பற்றிக் கற்பிப்பது இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் பின்வரும் சத்து

ணவுத் திட்டங்கள் செயல்படுத் தப்படுகின்றன :—

1. குழந்தைகள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்.

2. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் குன்றுகளில் மலைச் சாதியினர் மேம்பாட்டுத் திட்டம்.

3. குழந்தைகளுக்கு சத்துண வின்மை, வைட்டமின் 'ஏ' குறைவு காரணமாகக் கண் பார்வை யற்றுப் போவதைக் கட்டுப் படுத்துதல் அல்லது தடுத்தல்.

4. சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

5. சத்துணவுச் செயல் திட்டம்.

**குழந்தைகள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்**

இத் திட்டம் தளி வட்டாரத்திலும் (மக்கள் தொகை 1.13 இலட்சம்), நிலக்கோட்டை வட்டாரத்திலும் (மக்கள் தொகை 1.14 இலட்சம்), சென்னை நகரில் சில குடிசைப் பகுதிகளிலும் 1976-ஆம் ஆண்டில் செயல் படுத்தப்பட்டது.

**இத்திட்டத்தின் நோக்கங்கள்**

(1) பிரசவமான குழந்தையிலிருந்து 6 வயதில் உள்ள குழந்தைகளின் சத்துணவு பெறும் நிலையையும் உடல் நலத்தையும் மேம்படுத்துதல்.

(2) குழந்தையின் உள்ளம், உடல், சமூக வளர்ச்சிக்கு ஏற்ற அடிப்படைச் சூழ்நிலையை உருவாக்குதல்.

(3) குழந்தைகள் இறந்து போதல், உடல் உறுப்புகளில் நோய் பற்றுதல், சத்துணவின்மை, தொடக்கப் பள்ளிக் கல்வியை இடையிலேயே விட்டு விடுதல் ஆகியவற்றைக் குறைத்தல்.

**சிறப்புச் சத்துணவுத் திட்டம் :**

இத்திட்டம் இரு மாநகராட்சிகளிலும், 33 நகராட்சிகளிலும், 25 ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகரக் குடிசைப் பகுதிகளிலும், பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும், கருவுற்றிருக்கும் மகளிருக்கும், பிள்ளைத் தாய்ச்சிகளுக்கும், ஆறு மாதம் முதல் ஆறு வயது வரை உள்ள, பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்கும் ஊட்டச் சத்துணவு அளிப்பதே இதன் நோக்கமாகும்.



இத்திட்டத்தின் கீழ் 1,46,530 பேர் பயனடைகின்றனர். இத் திட்டம் முழுவதற்கும் இப்போது தமிழ்நாடு அரசு, நிதி உதவி அளிக்கிறது.

**வைட்டமின் A மற்றும் ஊட்டச் சத்துக் குறைபாடுத் திட்டம்**

இத்திட்டம் (நடைமுறைச் சத்துணவுத் திட்டம் செயல்படாத) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு வட்டாரத்தில் சமூக நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றப்படுகிறது. தாய்மார்கள் குழந்தைகளிடையே ஊட்டச் சத்துணவு தொடர்ந்து இருப்பதற்கு தேவைப்படும் கல்வி விளக்கத்தை அளிப்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

**மருத்துவக் கல்வி :**

தமிழ்நாட்டில் 8 அரசு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. எட்டுக் கல்லூரிகளில் மூன்று கல்லூரிகள் சென்னை மாநகரிலும், ஏனைய 5 கல்லூரிகள் மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. எட்டு மருத்துவக் கல்லூரிகளில் எம். பி. பி. எஸ். வகுப்புகளில் ஆண்டுதோறும் மொத்தம் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இதில் 30 இடங்கள் வேறு மாநிலத்தைச் சார்ந்தோருக்காக ஒதுக்கப்படுகின்றன. மூன்று இடங்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கும், பத்து இடங்கள் விதவைகளுக்கும் ஒதுக்கப்படுகின்றன.

**புறநகர் மருத்துவ மனைகள் :**

சென்னை கே. கே. நகரில் உள்ள புறநகர் மருத்துவமனை ஏற்கெனவே முடிக்கப்பட்டு அக மற்றும் புற நோயாளி சிகிச்சை வசதியுடன் செயல்படத் தொடங்கியுள்ளது. அறிஞர் அண்ணா நகரிலும், தண்டையார்ப் பேட்டையிலும் புறநகர் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இவை சீக்கிரம் செயல்படும்.

**1978-'79-ஆம் ஆண்டு சாதனைகள் :**

இம்மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் இருக்கின்றன. 1977-'78-ஆம் ஆண்டில் இம் மருத்துவ மனைகளின் படுக்கைகளின் எண்ணிக்கை 4,054 ஆக இருந்தது. 1978-'79-ஆம் ஆண்டில் இம் மருத்துவ மனைகளில் பொதுப் பிரிவுகளில் 281 படுக்கைகளும், தொழுநோயாளிகளுக்கான தற்காலிக சிகிச்சை அளிக்கக்கூடிய பிரிவுகளில் 120 படுக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இதனால் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 4,455 ஆக உயர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் 108 வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் இருக்கின்றன. 1977-'78-ஆம் ஆண்டு வரை இம் மருத்துவமனைகளில் மொத்தப் படுக்கைகளின் எண்ணிக்கை 5653. இம்மருத்துவ மனைகளில் 31-12-'78 வரை 130 படுக்கைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மொத்த எண்ணிக்கை 5,783 ஆக உயர்ந்துள்ளது.

1978-'79 ஆம் ஆண்டில் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு 2,76,700 கருத்தடை அறுவைச் சிகிச்சைகளைச் செய்ய வேண்டுமென்று இந்திய அரசு நிர்ணயித்தது. 15-3-'79 வரை 1,89,464 கருத்தடை அறுவைகள் செய்யப்பட்டன.

14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் வட்டத் தலைமையிடம் மற்றும் வட்டத் தலைமையிடம் அல்லாத ஊர்களிலுள்ள 59 மருத்துவ மனைகளிலுமாக தற்போது மொத்தம் 73 சித்த மருத்துவப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இதில் 1978 '79-ல் தொடங்கப்பட்ட 10 சித்த மருத்துவப் பிரிவுகளும் அடங்கும்.

இவ்வாறு மக்கள் நல்வாழ்வுத் துறை மகத்தான பணிகளை ஆற்றி வருகின்றது.

# ஸ்பென்ஸர்ஸ்
# டீ வாங்கினால் பழரசத்தில் லாபம்







ஒரு 500 கிராம் ஸ்பென்ஸர் தேநீர் பாக்கெட் வாங்கி ஸ்பென்ஸர் பழரச பாட்டில் வாங்கும்போது ஒரு ரூபாய் லாபம் பெறுங்கள்.

முக்கியமாக இந்த இரண்டு பண்டங்களிலும் முதல் தரத்தை பெறுகிறீர்கள். ஒரு 500 கிராம் ஸ்பென்ஸரின் கிரீன் லேபல், ரெட்பாண்ட் அல்லது பீகோ டஸ்ட் தேயிலை பாக்கெட் வாங்கினால், நீங்கள் பெறுவது நீலகிரி மலையின் உயர்ந்த சாரலில் பயிராகும் தேயிலையை மட்டுமல்ல, ஒரு ரூபாய் பெறுமான தள்ளுபடி கூப்பன் ஒன்றும் பெறுவீர்கள்.

இந்த கூப்பனைக் கொண்டு நீங்கள் ஸ்பென்ஸரின் தரமான பழரசங்களை வாங்கும்போது பாட்டிலின் விலையில் ஒரு ரூபாய் தள்ளுபடி பெறுவீர்கள்.

இப்பொழுதே முந்திக் கொண்டு டீ மற்றும் பழரச லாபகர பேரத்தில் பங்கு கொள்ளுங்கள்.







**ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்**
சென்னை மற்றும் கிளைகள்

*இந்த சலுகையை சென்னை, பெங்களூர் மற்றும் ஹைதராபாத் நகரங்களில் மட்டுமே பெறலாம்.*

# இமய மாப்புகழ்ச் சின்னங்கள்

புலவர் புலமைப்பித்தன் எம்.எல்.சி.,


இயற்கையின் உற்பா தங்கள்
எத்துணை; வஞ்ச கத்தால்
செயற்கையாய்ப் போராட் டத்தைத்
தூண்டியே மக்கள் ஆட்சி
இயக்கத்தைத் தடுப்போர் சூழ்ச்சி
எத்துணை! இவற்றைத் தாங்கி
வியத்தகு வண்ணம் நல்ல
வெற்றிகள் குவித்தோம், இங்கே!

பெரியார்க்கு விழாவெ டுத்த
பெருமையும் செந்த மிழ்ச்சீர்
உரியார்க்குக் கொடைகொ டுத்த
உயர்தனிச் சிறப்பும் அண்ணா
இருமொழிக் கொள்கை தன்னை
இடைவிடாத் திறமும், இந்த
இரண்டாண்டில் ஆட்சி செய்த
இமயமாப் புகழ்ச்சின் னங்கள்!

சோற்றினுக் கில்லை என்னும்
சோகங்கள் இல்லை; அண்ணா
ஆற்றினை விலகிச் செல்லும்
அவலமும் இல்லை; மக்கள்
பேற்றினும் பேறாய் இன்று
பிறங்கிடும் ஆட்சி, தென்றல்
காற்றினைப் போல்எல் லோர்க்கும்
கனிவான இனிய ஆட்சி.

கல்வியை வளர்ப்ப தற்கும்
கலைகளைப் பேணு தற்கும்
தில்லியின் மொழித்தி ணிப்பால்
தீந்தமிழ் விழாத வண்ணம்
வல்லமை யாகக் காக்கும்
மாட்சியும், மக்கள் மன்றில்
சொல்லுமே இரண்டாண் டாட்சி
தோற்காத சரித்தி ரத்தை!


எழுத்துச்சீர் திருத்தம் தன்னை
ஏற்றதும் செயற்ப டுத்த
அழுத்தமாய் முனைந்து நிற்கும்
ஆற்றலும், இந்த ஆட்சி
முழுமையாய்ப் பெரியார் பாட்டை
விலகாத ஆட்சி என்று
வழுத்துமே! குறைசொல் வோர்கள்
மறுப்பாரா? வரட்டும் இங்கே!





நூல் ரகம்
கைத்தறித்துணி
பட்டு ரகம்
வழக்கமாகப் பண்டிகைக்
காலங்களில் மட்டுமே கைத்தறித்
துணிக்கு வழங்கப்பட்டு வந்த
சிறப்புத் தள்ளுபடி பெரியார்,
அண்ணா, காமராசர் ஆகிய தலைவர்களின் பிறந்த நாட்களை
முன்னிட்டும் இப்போது வழங்கப்பட்டு வருகிறது.


ஓய்வு பெறும் வயது
55
58
ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க
வேண்டும் என்று அரசு ஊழியர்களின்
நீண்ட நாள் கோரிக்கையை அரசு
ஏற்று, அரசு ஊழியர்கள்
ஓய்வு பெறும் வயதை 55-
லிருந்து 58 ஆக உயர்த்தியது.
தென் மாநிலங்களிலேயே
தமிழ் நாட்டில்தான் ஓய்வு
பெறும் வயது உயர்த்தப்பட்
டுள்ளது.


ஏழை மக்களின்
வாகனமான சைக்கிள்
வண்டியில் இரண்டு பேர்
செல்வதற்கு அனுமதி
அளிக்கப்பட்டது.


தலைமை ஆசிரியர்
தமிழாசிரியர்கள் உயர் துவக்கப் பள்ளித் தலைமையாசிரியர்களாக நியமனம் பெற வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளது.
அரிசி நடமாட்டத்தைக் கண்காணிக்கும் சோதனைச் சாவடிகள் (செக்-போஸ்ட்) அனைத்தும் 1-6-79 முதல் நீக்கப்பட்டன.
சோதனை சாவடி
கிராம மக்களுக்கு மருத்துவ வசதிகள் எளிதில் கிட்டும் வகையில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் என்ற புதிய திட்டம் உருவாக்கப்பட்டது.
நடமாடும் மருத்துவக் குழு
சாமி





காவிரி ஆற்றின் குறுக்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் வகையில், ஒரு கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட—தமிழ்நாட்டிலேயே மிக நீளமான பாலம் (1473 மீட்டர்) மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் 8.6.79 அன்று திறந்து வைக்கப் பெற்றது. வருவாய்த்துறை அமைச்சரின் பேரவைச் செயலர் திரு முசிறிப்புத்தன் உடன் உள்ளார்.




1978 டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு, மாநிலம் முழுதும் 50 கிலோ அரிசி வீதம் மொத்தம் 2,10,800 பேருக்கு அரிசி வழங்கப் பட்டது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி, பாதிக்கப் பட்டவர்களுக்கு அரிசி வழங்குகிறார்.



**இரண்டாண்டுகளில்—**
**இன்றைய அரசு ஆற்றிய பணிகள் ஏராளம், ஏராளம்!**
**அவற்றில்—**
**இந்தத் தொகுப்பு மலரில் இடம் பெற்றிருப்பவை பிடியளவு!**
**அடுத்தடுத்து வெளிவர இருப்பவை கடலளவு!**


ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கோ ஆப்டெக்ஸ்
பாலியஸ்டர், பட்டு ஆடைக
புத்துலகப் படைப்பு...!
புதுமைகளின் முன்னறிவிப்பு...!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



# இரண்டு ஆண்டுப் பணிகள் தொகுப்பு மலர்

பதிவு எண். M. 8676